24.01.2013

# உதய சூரியன்

*Source for reading hunters*

களம் - 01. சூரியன் -21 பக்கம் :32 விலை: 15/=




## ஆபத்து...! 02
### எவர் ரூபத்திலும் வரலாம்!

## 10 சட்டம் எல்லோருக்கும் சமமானதா?

## 25 அம்மா நான் போகிறேன்!
11 வயதுச் சிறுமியின் விபரீத முடிவு!

## 25 இனவாதத்திற்கு முடிவு எப்போது? அமெரிக்கக் குழுவின் இலங்கை வருகையால் ஆகப்போவது என்ன?

fkc ASIA (PRIVATE) LTD
வொண்டமீல்......
சிறியோர்கள் மற்றும் பெரியோர்களின் உயர்தரமான புரதப் போசணையூட்டத்திற்கு உகந்தது.
ஆரோக்கியமான எடைக்குறைவிற்கு உதவும்.
நீரிழிவு நோயாளர்களின் குருதி குளுக்கோஸ் மட்டத்தைக் குறைக்க உதவும்.
"Sayuru Sevana", South Wing, 4th Floor, Nawam Mw, Colombo-02.
Hotline : 0773589796



உங்களுடைய குழந்தைச் செல்வக் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்!

- அனுபவம் வாய்ந்த சிகிச்சைக் குழுவினர்
- உங்களுக்கென்றே அர்ப்பணிப்பான சேவை
- முற்றிலும் வெற்றிகரமான சிகிச்சை

பிரார்த்தனா
PRARTHANA
IVF மத்திய நிலையம்

10 ஆவது மாடி, கோல்டன் கீ வைத்தியசாலை, கொட்டா வீதி, ராஜகிரிய. தொ.பே : 011-5545447, 0112888858



# ஆபத்து...! எவர் ரூபத்திலும் வரலாம்!

**கொட்டாஞ்சேனை சிறுமிக்கு நிகழ்ந்த கொடூரம்**

பேத்தியை வல்லுறவு புரிந்த தாத்தாவுக்கு பிணை, மகளை துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு விளக்கமறியல், பாடசாலை மாணவர்களால் சக மாணவி வல்லுறவு, பாடசாலை வேன் நடத்துநரின் சேட்டை, மாணவர்களை துஷ்பிரயோகம் செய்த ஆசிரியர்.....

தினசரிகளில் பக்கங்களில் தென்படும் இவ்வாறான செய்திகளை மிகச் சாதாரணமாக பார்த்து விட்டுப் போகும் அளவுக்கு இவ்வாறான சம்பவங்கள் எமது நாட்டில் இன்று மலிந்து போயிருக்கின்றன.

நமது வீடுகளில் நாம் அறிந்தவர்களுக்கு இவ்வாறான சம்பவம் நடக்கும் வரை எமக்கு இவை சாதாரண மிகச் சாதாரண செய்திகள் தாம்.

எம் வீட்டுக் குழந்தைகளுக்கு, நமது பிள்ளைகளுக்கு இப்படி நடக்காது என்பதற்கு இன்றைய காலத்தில் எந்த உத்தரவாதமும் இல்லை! பெற்றோர்களின் குருட்டுத்தனமான நம்பிக்கையும் அலட்சியமும் இவ்வாறான ஆபத்தை எம் வீடுகளுக்கும் கொண்டு வந்து விடும் என்பது உண்மை!

கடந்த தைப்பொங்கல் தினத்திற்கு மறுநாள்! தாய் ஒருவர் தன் 15 வயது மகளை கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்திருந்தார்,

15 வயது சிறுமி கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையின் மாணவி. இவரை பலவந்தமாக மிரட்டலின் பேரில் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவு புரிந்துள்ளதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இச்சம்பவத்தில் தொடர்புபட்ட சந்தேகநபர்களில் மூவர் ஆண்கள், ஒருவர் பெண். இவர்கள் இச்சிறுமியின் நெருங்கிய உறவினர்கள் என்பது அதிர்ச்சிக்குரிய தகவலாகும்.

இச்சிறுமி தனக்கு நடந்த கொடூரம் பற்றி பொலிஸாரிடம் இவ்வாறு தகவல் அளித்தார்.

இச்சிறுமி கொழும்பிலுள்ள பாடசாலை ஒன்றில் 10 ஆம் தரத்தில் தான் கல்வி கற்று வருகிறார். கடந்த 2 மாதங்களுக்கு முன் பிரத்தியேக வகுப்பிற்கு சென்று கொண்டிருக்கும் வேளையில் தனது தந்தை வழி தூரத்து உறவுகளான ஒரு ஆணும், அவரது சகோதரியும் முச்சக்கர வண்டியில் இச்சிறுமியை ஏற்றிச் சென்றுள்ளனர்.

தன்னை அழைத்துச் சென்ற இடம் வத்தளை, எலகந்த பிரதேசம் என இச்சிறுமி கூறுகிறார். மேலும் அந்த இடத்தைப் பற்றி சரியாக தெரியவில்லை. அது ஒரு வீட்டைப் போன்று இருந்தது. அங்கே தனியான அறைகள் எதுவும் இருக்கவில்லை ஒரு கட்டிலும் அதனைச் சுற்றி அறையைப் போன்று திரைச்சீலையே இடப்பட்டிருந்தது. என்னை அழைத்துச் சென்ற என் உறவுக்கார ஆண் மற்றும் முகமறியாத இரு ஆண்கள் என்னை வல்லுறவு புரிந்தனர். இதனை வெளியில் சொன்னால் வீட்டிலுள்ளவர்களை கொன்று விடுவேன் என மிரட்டினர்.



அதன் பிறகு மூன்று தடவைகள் என்னை மிரட்டி அழைத்துச் சென்று வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள். இதற்கு என் உறவுக்காரப் பெண்ணும் உடந்தையாக இருந்தார் என அச்சிறுமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 15.01.2013 ஆம் திகதி கடற்கரையோரத்திலே நின்ற முச்சக்கரவண்டியிலே இது சம்பந்தப்பட்ட சிறுமியும் அவருடன் சில ஆண்களும் இருப்பதைக் கண்ட பமுனுகம பொலிஸார் இவர்களை சந்தேகத்தின்பேரில் கைது செய்தனர். பின் சிறுமி தாயிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இச்சம்பவம் நடைபெற்ற மறுதினமே இச்சிறுமி தனது தாயுடன் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்திற்கு வந்து இவ்வாறான வாக்குமூலத்தை கூறியுள்ளார்.

மருத்துவ பரிசோதனை அறிக்கையின்படி சமீபகாலமாக இப் பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டுள்ளார் என அறியப்பட்டுள்ளது.

மேலும் இதுதொடர்பிலான சந்தேக நபர்களான பெண் மற்றும் 3 ஆண்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது இச்சிறுமி தனது தாயிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக இவ் விசாரணைகளை மேற்கொண்ட கொட்டாஞ்சேனை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமந்த சி ஒவிட்டிகம தெரிவித்தார்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை இந்தச் சம்பவம் வலியுறுத்துகிறது.

- எஸ். பிரியதர்ஷினி -

# வீதியில் வரவேற்கும் யமன்கள்!

## தவறுகள் திருத்தப்படுமா? விபத்துகள் தவிர்க்கப்படுமா?

விபத்துக்கள் என்பது தற்செயலானவை, எதிர்பாராதவை. ஆனால், தொடர்ந்து இடம்பெறும் விபத்துகளுக்கு இவ்வாறு காரணம் கற்பித்து விட முடியாது.

சில பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளினதும், சாரதிகளினதும் அசமந்தப் போக்குகளும் இவ் விபத்துக்களுக்கு காரணமாகும்.

யுத்தம் நிறைவடைந்தபின்னர் வடபகுதியில் இருந்து மக்கள் வந்துசெல்கின்ற முக்கியமானதொரு பிரதேசமாக வவுனியா விளங்குகின்றது. வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டைவிட இவ்வாண்டின் ஆரம்பத்தில் அதிகளவிலான வீதி விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இம் மாதம் முதல் இருபது நாட்களில் இடம்பெற்ற விபத்துகளில் இருவர் மரணமடைந்துள்ளதுடன் 18 பேர் காயமடைந்து அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வீதி விபத்து சம்பவங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் போக்குவரத்துச் செய்வதில் ஒருவித அச்ச நிலையும் தோன்றியுள்ளது.



வீதிகளில் போடப்பட்டுள்ள வீதிக் குறியீடுகள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல் அழிவடைந்து காணப்படுகின்றமையும் மக்கள் கூட்டம் மிக்க இடங்களில் பொருத்தமான குறியீடுகள் இடப்படாமையும் விபத்துக்களுக்கு வழியை ஏற்படுத்தியுள்ளது.

குறியீடுகள் காணப்படுகின்ற இடங்களில் கூட சாரதிகள் அவ் வீதிக் குறியீடுகளை மதித்து நடக்காமல் இருப்பது ஒருபுறம் இருக்க, சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள பலருக்கும் வீதிக் குறியீடுகள் தொடர்பாக தெளிவின்மை காணப்படுகின்றமை கவலைக்குரியதே.

அப்படியானால் இவர்கள் எவ்வாறு சாரதி அனுமதிப்பத்தினை பெற்றிருப்பார்கள் ? என மக்கள் கேட்கின்றனர். சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொடுக்கின்ற சில லேனர்ஸ்சுகளில் சரியான முறையில் பயிற்சி அளிக்கப்படாமை மட்டுமன்றி ஏதோ சாரதி அனுமதி பத்திரம் கிடைத்தால் சரி என்று நடத்து கொள்வதும் விபத்துகளுக்கே வழிவகுக்கும்.

அதிகரித்த வாகனப்பாவனை ஏற்பட்டுள்ள அதேவேளை வாகனங்கள் போட்டி வேகக் கட்டுப்பாடுகளை கவனத்தில் கொள்ளாமல் செய்கின்றமையால் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே தேவையான இடங்களில் வேகக் கட்டுப்பாடுகள் இடப்பட்டு கண்காணிக்கப்படவேண்டும் . சில சாரதிகள் வாகனத்தைச் செலுத்துகின்ற போது தொலைபேசியில் உரையாடுவதும் அருகில் இருப்பவருடன் உரையாடுவதும் விபரீதத்தையே உருவாக்குகிறது.

இது தவிர போக்குவரத்துப் பாதையில் சரியான முறையில் மின்விளக்குகள் பொருத்தப்படவில்லை. இரவு நேரங்களில் பயணிப்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

மேலும் போக்குவரத்துக் கண்காணிப்பு பொலிசார் பொருத்தமான எல்லா இடங்களில் நிறுத்தப்படவும் இல்லை இவ்வாறான செயற்பாடுகள் வீதி விபத்துக்களை அதிகரிக்கச் செய்துள்ளது.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் சாரதிகளும் தமது நிலையினை கவனத்தில் கொண்டு செயற்படுவதன் மூலம் விபத்துக்களை ஓரளவேனும் கட்டுப்படுத்தலாம் என்பது உண்மையே!

விபத்துக்களை கட்டுப்படுத்த துவிச்சக்கர வண்டிகளுக்கு கண்ணாடி பூட்டி வேண்டும் என்ற நடைமுறையை கொண்டு வந்த அதிகாரிகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ள விடயங்களில் சரியானமுறையில் கவனம் செலுத்தி விபத்தை கட்டுப்படுத்துவார்களா?

கே.வாசு

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு! விழிப்புடன் செயற்படுங்கள்!

நமது நாடு அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இருக்கின்ற நிலையில், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பொருளாதாரச் சுமையும், தொழில் ரீதியான போட்டிகளும், தளம்பல்களும் இங்குள்ள இளைஞர்களை மாற்றுத் தொழிற்துறையை நாட வைத்துள்ளன. அதிகமான இளைஞர், யுவதிகள் தலைநகரிலும், சுதந்திர வர்த்தக வலயப் பகுதிகளிலும், கைத்தொழில் பேட்டைகளிலும் தொழில்வாய்ப்புகளை தேடிக்கொள்கின்றனர். உள்நாட்டில் எவ்வளவு உழைத்தாலும் கட்டுபடியாகாது என்ற மனநிலையைக் கொண்ட அதிகமான இளைஞர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க முடிகின்றது.

வெளிநாட்டு தொழில்வாய்ப்பை பெற்றுச்செல்ல முயல்வோர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அல்லது பணியகத்தின் சட்டதிட்டங்களுக்கு முறையாக உள்ளாகாமல் குறுக்கு வழியிலேயே தங்கள் வெளிநாட்டு தொழில்வாய்ப்பை பெற்றுக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதனால், இவர்கள் அதிகமான சந்தர்ப்பங்களில் போலி வெளிநாட்டு முகவர்களிடம் அகப்பட்டு பெருந்தொகைப் பணத்தையும் இழந்து நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அண்மைக்காலமாக மத்தியகிழக்கு நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் தொழிலுக்காக யுவதிகளைப் போலவே இளைஞர்களும் செல்வது அதிகரித்து வருகின்றது.

இவ்வாறு தொழிலுக்காக செல்லும் இளைஞர்கள் தாம் ஏற்கனவே செய்த தொழில் அல்லது வியாபாரம், சுயதொழில் போன்றவற்றை முற்றும் முழுதாக விட்டுவிட்டே வெளிநாட்டில் தொழில்பெற முயல்கின்றனர்.

அவ்வாறு அவர்கள் முயல்கையில் எவ்வளவு துரிதமாக தொழில்பெற முடியுமோ அவ்வளவு விரைவாகத் தொழில்பெற்று வெளிநாடு செல்லவே முனைகின்றனர்.

இச் சந்தர்ப்பங்களில் இவர்கள் முறையான அரச நடைமுறைகளை அன்றி, குறுக்கு வழிகளில் துரிதமாக செல்ல எத்தனித்து பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியவர்களாகிவிடுகின்றனர்.

இவர்கள் தொழில்பெற அணுகும் முகவர்கள் உண்மையானவர்களா? அல்லது ஏமாற்றுப் பேர்வழிகளா? என்று கூட தேடிப்பார்க்காமல், அவர்கள் கூறும் மாதாந்த சம்பளத் தொகைக்கும், சலுகைகளுக்கும் ஆசைப்பட்டு வெளிநாட்டு முகவர்களுக்கு (கூறும்) பெருந்தொகை பணத்தை எவ்வாறாவது தேடிக்கொடுத்து இறுதியில் பணத்தையும், ஏற்கனவே செய்த தொழிலையும் இழந்து இரண்டும் கெட்டான் நிலைக்கு வந்துவிடுகின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முயற்சி காரணமாக இன்று அதிகமானவர்கள் செய்த தொழிலை மட்டுமல்ல நிம்மதியையும் இழந்து தொழில்செய்து அடைத்துவிடலாம் என்ற நம்பிக்கையின் பெயரில் பெற்ற கடனையும் திரும்ப செலுத்த முடியாது சமூகத்தில் அவப் பெயருடன் வாழ்ந்து வருகின்றனர்.

வேறு சிலர் கடன்தொல்லை காரணமாக தற்கொலை மூலமாக வாழ்க்கையை இடையில் நிரந்தரமாக முடித்துக் கொள்வதையும் காண்கின்றோம்.

இவ்வாறான நிலையில் வெளிநாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்வோர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் பின்பற்றி தொழில்வாய்ப்பிற்கு முயற்சிப்பதே சாலச் சிறந்ததாகும்.

அதுமட்டுமன்றி தொழில்பெற முயலும்போது தாம் நாடும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் பதிவு, அவர்கள் குறித்த நம்பகத் தன்மை, அம்முகவர் நிலையங்களின் இடைத் தரகர்களாக செயற்பட்டுவரும் தனி நபர்களின் முழு விபரங்கள் என்பவற்றை சரிவரத் தேடி ஆராய்ந்த பின்னரே தொழில் பெறுனர்கள் தமக்குரிய தொழில் ஆவணங்களையும் சமர்ப்பித்து உரிய நடைமுறைகளுடன் பணக் கொடுக்கலில் ஈடுபட்டு தொழில்பெற்றுச் செல்வதே சிறந்ததாகும்.

இவ்வாறான நடைமுறைகளை மீறி வேறு வழிகளில் அதிக வருமான ஆசையுடன் தொழிலைப் பெற முயலும்போது, அதனால் ஏமாற்றத்திற்குள்ளாகி பெரும் நட்டமடைவதை என்றுமே தடுக்க முடியாமல் போய்விடும்.

தவிர தவறான நடைமுறைகளின் ஊடாக வெளிநாடு சென்று தொழில் புரிகையில் ஏற்படும் அபாய அனர்த்தங்களின்போது இழப்பீடுகளைப் பெறுவதிலும் சிரமங்கள் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு. எனவே வெளிநாட்டு தொழில் ஆர்வம் உள்ளவர்கள் சட்டரீதியான நடைமுறைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வது அவசியமாகும்.

ஹாலிஎல நிருபர்

# கோடிக்கணக்கான பணத்திற்கு நாமம் போட்ட தம்பதியினர்

## மாத்தளையில் பரபரப்புச் சம்பவம்

இலட்ச ரூபாய்கள் தந்தால் மாதம் 10,000/- பத்தாயிரம் ரூபா வட்டி தருகிறோம் என பண ஆசையை தூண்டி விட்டு பல கோடி ரூபாய்களுக்கு நாமம் போட்ட சம்பவம் கடந்த வாரம் மாத்தளையில் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரியவருதாவது மாத்தளை கஹுதாவளைப் பகுதியைச் சேர்ந்த தம்பதியினர் தமக்கு கடனாக கொடுக்கும் பணத்திற்கு அதிகளவான தொகையை வட்டியாகத் தருவதாகக் கூறி பல வர்த்தகர்கள் ஆசிரியர்களை தமது வலைக்குள் இழுத்துள்ளனர். நம்பகத்தன்மையுடனும் அயலவருடன் சகஜமாக பழகும் இவர்கள் மாதம் பத்தாயிரத்துக்கு மேல் மாத வட்டியும் கொடுத்து வந்துள்ளனர்.

இவர்களுடைய இச் செயற்பாட்டில் அதிக பணம் புரளுவதை அவதானித்த ஆசிரியர்கள் வர்த்தகர்கள் இத்தம்பதியினரின் மீது அதிக நம்பிக்கை வைத்து தம்மிடமிருந்த இலட்சக் கணக்கான பணத்தை அவர்களிடம் ஒப்படைத்தனர். சில ஆசிரியர்கள் வங்கிக் கடன் பெற்று அவர்களிடம் ஒப்படைத்தாகவும் தகவல்கள் வெளிவருகின்றன. சிலர் 3 இலட்சம் 5 இலட்சம் 38 இலட்சம் என ஏகப்பட்ட தொகை பணத்தை எவ்வித அத்தாட்சியுமின்றி கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமுகமாக நடைப்பெற்று வந்த இச்செயற்பாடு கடந்த வாரம் பணம் கொடுத்தவர்களுக்கு பேரிடியான பொழுதாகவே விடிந்துள்ளது. குறிப்பிட்ட தம்பதியினர் தாம் வசித்து வந்த வீட்டை இரகசியமான முறையில் விற்றுவிட்டு கோடிக் கணக்கான (3,1/2-4கோடியென தகவல்) பணத்துடன் அனைவருக்கும் பெரிய நாமத்தை போட்டுவிட்டு கம்பி நீட்டிவிட்டனர்.

குறிப்பிட்ட தம்பதியினரைக் காணாததால் கடன் கொடுத்தவர்கள் பொலிஸில் முறைபாடு செய்துள்ளனர். பணம் கொடுத்ததற்கு எவ்வித அத்தாட்சியும் இல்லாத நிலையில் பொலிஸார் இத்தம்பதியினரை தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறுகிய காலத்தில் அதிகம் சம்பாதிக்க குறுக்கு வழியை நாடுபவர்களுக்கு இச்சம்பவம் நல்ல உதாரணம் என்பதை உதயசூரியன் சொல்லிவைக்கிறது.

எம்.தாசன்


ஹட்டனில் BUSINESS OPPORTUNITIES
வேலையுடன் பயிற்சி Don't Miss

2013 இல் ஆரம்பிக்கப்படவுள்ள மலையக மண்ணில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் என்ற அடிப்படையில் பயிற்சிக்கப்பட்டு தொழில் கொடுக்கப்படும். சகல பிரதேசங்களிலிருந்தும் இணைத்துக் கௌ்ளப்படவுள்ளன.

- கல்வித் தகைமை: G.C.E. O/L க்கு மேல்
- வயது 18-28 க்கு இடைப்பட்டவராக இருத்தல்.
- பயிற்சியின் பின் Diploma சான்றிதழ்கள்.
- பயிற்சிக் காலத்தில் 10,000 சம்பளம் கொடுக்கப்படும்.
- பின் உயர் சம்பளத்துடன் பதவி கொடுக்கப்படும்.

[illegible]

The Manager
071-8694188 / 071-8643676

நம்மிலே பலர் அடுத்தவரிடம் இருக்கும் பலத்தைப் பார்ப்பதைவிட பலவீனத்தை பார்ப்பதுதான் அதிகமாக இருக்கிறது. இதைவிட இன்னும் கொடுமை நம்மிடம் இருக்கின்ற நல்ல விஷயங்களைப் பார்ப்பதைவிட நம்மிடம் இருக்கின்ற குறைகளை அதிகம் பார்க்கின்றோம்.

எதனால் இப்படி ஏற்படுகிறது?

மனோதத்துவ நிபுணர்கள் மனிதர்கள் ஏன் வெற்றியடையவில்லை என்ற ஆராய்ச்சியில் பல திடுக்கிடும் விஷயங்களை வெளியிட்டார்கள். அதில் மிக முக்கியமானது ஒரு குறிக்கோள், இலட்சியமில்லாமல் இருப்பதும் மற்றும் தன்னைப்பற்றிய உயர்வான சுயமதிப்பீடு இல்லாமல் இருப்பதும்தான்.

உங்கள் கட்டைவிரலின் ரேகையைப்போல் உலகில் உள்ள கிட்டத்தட்ட 750 கோடி பேர்களில் ஒருவருக்குக் கூட இல்லை. எல்லாம் தனித்திருக்கிறது. உங்களுக்குக் கிடைத்த அனுபவம் போல் அடுத்தவர்களுக்கு இல்லை. இப்படி பலவாறு கூறிக்கொண்டே செல்லலாம்.

நீங்கள் ஒரு தனித்தன்மை (Unique) மிக்கவர். உங்களிடம் அபாரமான திறமைகள் இருக்கின்றன. அதிசயத்திலும் அதிசயம் என்று மனிதனைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. நீங்கள் நினைப்பதைவிட பல்லாயிரம் மடங்கு சக்தி மிக்கவர் நீங்கள். உங்களிடம் இருக்கும் நல்ல விஷயங்களைப் பாருங்கள். உதாரணமாக தாய், தந்தை, சகோதரன், சகோதரி, மனைவி, குழந்தைகள், உங்கள் நண்பர்கள், உங்கள் சொந்தங்கள், உங்கள் ஆரோக்கியம், உங்கள் படிப்பு, உங்கள் அனுபவம், உங்கள் திறமை, நீங்கள் வாழும் இந்தப் பூமி இப்படி பலபல நல்ல விஷயங்கள் இருக்கின்றன. அதை அங்கீகரியுங்கள். உணருங்கள். இன்னும் நீங்கள் உங்களிடம் பார்த்தீர்கள் என்றால் பல நல்ல விஷயங்களை உங்களால் காணமுடியும்.


விலை உயர்வான பலகோடி மதிப்புள்ள கமராக்கள் சந்தையில் உள்ளன. பல இலட்சம் மதிப்புள்ள கம்யூட்டர்கள் வந்துவிட்டன. ஆனால், எதனுள்ளும் ஒப்பிடமுடியாத விலையுயர்ந்த ஒரு அற்புதமான கமரா உங்கள் கண்கள். அதேபோல் ஒரு 10 இலட்சம் கம்யூட்டருக்கும் மேலான சக்தியுள்ள அற்புதமான மெகா கணினி உங்கள் மூளை. இப்படி பலபல விஷயங்களைக் கூறிக்கொண்டே செல்லலாம்.

நீங்கள் சாதாரணமானவர் அல்ல. உங்களின் சூழ்நிலையை வைத்து உங்களை எடை போடாதீர்கள். நீங்கள் ஒரு அசாதாரணமானவர்.

# பலம் படைத்தவர் நீங்கள் நம்புங்கள்

பிரம்மாண்டமானவர். நீங்கள் தனி ஆள் அல்ல. நீங்கள் இந்த பிரபஞ்சத்தின் ஓர் அங்கம். நீங்கள் யாரிடமும் ஒப்பிட்டு உங்களைத் தாழ்த்த வேண்டியதில்லை. எல்லோரையும் வி.ஐ.பி.யாக பாருங்கள். அதேநேரத்தில் நீங்கள் வி.வி.ஐ.பி. என்பதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் நிச்சயமாகவே உயர்வானவர். இது சத்தியமான உண்மை.

உங்களின் ஒவ்வொரு திறமையையும் போற்றுங்கள். இருக்கின்ற சூழ்நிலையை ஏற்றுக்கொண்டு அந்த நிலைமையை மாற்ற புது வியூகம், புதிய இலட்சியம் வகுங்கள். ஒரு சிறப்பான, வளமான, ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்துங்கள். அடுத்தவரிடம் பலத்தைப் பாருங்கள். என்ன விதைக்கிறோமோ அதைத்தான் அறுவடை செய்ய முடியும். நல்லதை, பலத்தை விதைத் தால் பலமடங்கு பலம் பெருகும். ஏனெனில் உண்மையிலேயே பலம் படைத்தவர் நீங்கள். நம்புங்கள். நல்லதே நடக்கும்.



வாழ்க்கைக்கு வழிசொல்லும் விழிப்புணர்வுத் தொடர் 20



## கவலை

கவலைப்பட இரண்டு விஷயங்கள் தான் இருக்கின்றன.
ஒன்று, நீங்கள் ஆரோக்கியமாய் இருக்கிறீர்கள், அல்லது நோயுடன் இருக்கிறீர்கள்.
ஆரோக்கியமாய் இருந்தால் கவலை இல்லை.
நோயுடன் இருந்தால், கவலைப்பட இரண்டு விசயங்கள்தான் உள்ளன.
ஒன்று நீங்கள் குணமடைவீர்கள், அல்லது மரணம் அடைவீர்கள்.
குணமடைந்தால் கவலைப்பட ஒன்றும் இல்லை.
இறந்தால் கவலைப்பட இரண்டு விசயங்கள்தான் இருக்கின்றன.
ஒன்று நீங்கள் சொர்க்கம்போவீர்கள், அல்லது நரகம் போவீர்கள்.
சொர்க்கம் போனால் கவலைப்பட ஒன்றும் இல்லை.
நரகம் போனல், அங்கு உங்கள் பழைய நண்பர்களைப் பார்த்து கைகுலுக்கவே நேரம் போதாது.
அப்போது கவலைப்படுவதற்கு நேரம் இருக்காது.
எனவே எப்படிப் பார்த்தாலும் நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

★பிறர் முதுகுக்குப்பின்னால் செய்யவேண்டிய வேலை தட்டிக்கொடுப்பது மட்டுமே
★பிரச்சினைகளில் இருந்து விலகி இருக்க சிறந்த வழி மௌனம்.
★ பல பிரச்சினைகளை தவிர்க்க மிக சிறந்த ஆயுதம் புன்னகை.

- தபால் மூலம் - ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

24 வருட அனுபவம்

COURSES:

| | |
|---|---|
| Dip. in Psychology | உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி |
| Dip. in Health & Hospital Management | சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு.டி |
| Dip. in Nursing Administration | தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | மொன்டிசூரி டிப்ளோமா |

JAN 2013 TO JUN 2013

தமிழ் மொழி மூலம்

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்கத் தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக் கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR.A.HASSEN *(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU - 07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2013


## பயோ DatA BY உதயசூரியன்



| | |
|---|---|
| *பெயர் | :- மங்கள சமரவீர |
| *பதவி | :- அது பறிபோய் பல காலம் |
| *எதிரி | :- மஹிந்த என்ட் பிரதர்ஸ் |
| *தற்போது தஞ்சம் | :- வாழ்வு கொடுத்த ஐ.தே.கட்சியில் |
| *எதிர் பார்த்திருப்பது | :- ஏற்பட இருக்கும் அமைச்சரவை மாற்றத்தை... |
| *ஐ.தே.க.வின் தற்போதைய நிலை | :- கடலை தாண்ட ஆசையுண்டு கால்வாயை தாண்டக் கூட கால் இல்லை |
| *பிடித்த விடயம் | : ஐ.தே.க.வுடன் இணைந்து குறட்டை விட்டுத் தூங்குவது. |
| *பிடிக்காத விடயம் | :- முதுகெலும்பு இல்லாமல் அரசின் எல்லாவிடயங்களுக்கும் கூஜா தூக்குவது. |
| *நாட்டின் நிலை | :- சிலர்(?)போடும் தாளத்திற்கு அரசு ஆடுகின்றது... மக்கள் பார்வையாளர்களாகவே இருக்கின்றனர் |
| *அரசுக்கு கூறுவது | :- சிரங்கை சொறிய சொறிய சுகமாகத்தான் இருக்கும் பிறகு தெரியும் வேதனை (யார் சொறிவது என்று தெரியும் தானே?) |
| *சிரானி பண்டாரநாயக்கா | :- அவரின் ஒரு சகோதரர் சிரானிக்கு எதிராக குற்றப்பிரேரணை தயாரிக்க மற்றொரு சகோதரர் அதை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுகிறார். கலகம் வராமல் இருக்க இன்னொரு சகோதரர் பாதுகாப்பு வழங்குகின்றார். எப்படி ஒரு குடும்ப ஆட்சி? |
| ஆசியாவின் ஆச்சரியம் | :- ஹி... ஹி... sex வார்த்தை பயன்படுத்தியதில் முதலிடம், சிறுவர் துஷ்பிரயோகத்தில் உச்சநிலை, ஜீவனோபாய திண்டாட்டம் வறுமை நீதியை அடிமைப்படுத்தும் சர்வாதிகார ஆட்சி... இவை எல்லாம் ஆச்சரியம் தானே? |

(பாவும் கற்பனை)

தருபவர் :- எம்.தாசன்

## பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு

ஹாலிஎல தேர்தல் தொகுதிக்குட்பட்ட தமிழ், சிங்கள மொழி மூல பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 18 ஆயிரம் அப்பியாசக் கொப்பிகளை பகிர்ந்தளிக்கும் நிகழ்வொன்றினை வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேராவின் நற்பணி மன்றமும், ரட்டவிருவோ அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இந்நிகழ்வு எதிர்வரும் 25, 26, 27, 28 ஆம் திகதிகளிலும் பெப்ரவரி மாதம் 05, 06 ஆம் திகதிகளிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் அமைச்சர் டிலானின் பங்கேற்பதுடன் நடைபெறவுள்ளன. இலவச அப்பியாசக் கொப்பிகளை பெற்றுக்கொள்வதற்காக இப்பகுதியிலுள்ள 20 தமிழ் மூல பாடசாலைகளும் 1 முஸ்லிம் பாடசாலையும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதே போன்று அமைச்சர் டிலான் எதிர்வரும் 26ஆம் திகதி பசறை- கோணக்கலை வீதி மீள் புனரமைப்பிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வுகளில் அமைச்சின் முக்கியஸ்தர்களும், மாகாண, வலய கல்விப் பணிப்பாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஹாலிஎல நிருபர்

## அம்மணிவத்தை ஆதவன் மன்றத்தின் பொங்கல் விழா

அம்மணிவத்தை ஆதவன் இளைஞர் மன்றத்தினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 26 ஆம் திகதி அம்மணிவத்தை இந்து கலாசார மண்டபத்தில் பொங்கல் விழாவொன்று நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் கலந்துகொள்ளவுள்ளார். அன்றைய தினம் மலையக பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளும் மேடையேற்றப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹாலிஎல நிருபர்

## தமிழ் ஆசிரியர்களுக்கான திறன் விருத்தி செயலமர்வு

மடுல்சீமை பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் தமிழ் அதிபர் ஆசிரியர்களின் தொழிற்திறனை மேம்படுத்தும் முகமாகவும் பிரதேச கல்வி அபிவிருத்தியின் எதிர்கால இலக்குகள் சம்பந்தமான செயலமர்வு ஒன்று மடுல்சீமை பிரதேச தமிழ் ஆசிரியர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் ஆர்.எஸ்.முத்துக்குமார் தெரிவித்தார்.

நாளை 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை மடுல்சீமை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ள இச் செயலமர்வில் விரிவுரையாளராக கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் லெனின் மதிவானம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இச் செயலமர்வில் மடுல்சீமை பிரதேசத்தில் கடமையாற்றும் அனைத்து அதிபர், ஆசிரியர்களை கலந்துகொள்ளுமாறு ஆசிரியர் ஒன்றியம் அழைப்பு விடுக்கின்றது.

எஸ்.சந்திரமோகன்




## கண்ணாமூச்சி




a நயன்தாரா




b சிம்ரன்



c ஜோதிகா



## சூப்பர் சூப்பர்






இந்தப் படத்திற்குப் பொருத்தமான கண்கள் எவை?

## யாரது

?

✱இவர் திரையுலகுக்கு வரும் முன்னர் மேடை நாடகங்களில் நடித்து வந்தார்.
✱இவர் 300 இற்கும் மேற்பட்ட தமிழ்த் திரைப் படங்களில் நடித்துள்ளார்.
✱இவர் ஒன்பது தெலுங்குத் திரைப்படங்கள், இரண்டு ஹிந்தித் திரைப்படங்கள் மற்றும் ஒரு மலையாளத் திரைப்படத்திலும் நடித்துள்ளார்.
✱நல்ல குரல்வளம், தெளிவான உணர்ச்சி பூர்வமான தமிழ் உச்சரிப்பு, சிறந்த நடிப்புத் திறன் ஆகியவை இவரின் சிறப்புகளாகும்.
✱இவர் ஆபிரிக்க ஆசியத் திரைப்பட விழாவில் (கெய்ரோ 1960) சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றார்.
✱இவர் செவாலியே விருதும் பெற்றவர்.

## அதிரடி




இந்த வாரம் அஜித் ரசிகர்களுக்கு திரையுலக புதிர்க் கேள்விகள்

1. அஜித்குமார் தமிழ்த் திரையுலகிற்கு வரும் முன்னர் எந்த மொழித் திரைப்படத்தில் அறிமுகமானார்?
2. தல விக்ரமுடன் இணைந்து நடித்த படம்?
3. அஜித்குமாரின் முதல் வெற்றிப் படம் எது?
4. தமிழக அரசு சிறந்த நடிகருக்கான சிறப்புத் திரைப்பட விருது எந்தத் திரைப்படத்திற்கு கிடைத்தது? எத்தனையாம் ஆண்டு?
5. தல எந்தத் திரைப்படத்தில் மூன்று வேடங்களில் நடித்துள்ளார்?
6. அஜித்குமார் ரோஜா இணைந்து நடித்த படம் எது?

சொல்லுங்கள் பார்க்கலாம்...?

## வார்த்தைப் புதிர் - 43



### இடமிருந்து வலம்

01. ஒரு செய்யுளின் முடிவு வரிகளைக்கொண்டு அடுத்த செய்யுள் தோற்றம் பெறும் வடிவம் இப்படி அழைக்கப்படும்
03. இறப்பின்றி நீண்டகாலம் வாழ்வதைக் குறிக்கும் (குழம்பியுள்ளது)
12. ஆர்ப்பாட்டத்தில் இது முக்கிய இடம் பிடிக்கும்.
14. உலகில் அதிக கண்டுபிடிப்புகளுக்கு சொந்தக்காரர்
17. துயரம்,
18. ஒரு பறவை
20. இது ஒரு காமெடி நடிகருக்கான அடைமொழி, (குழம்பியுள்ளது)

### வலமிருந்து இடம்

07. வேகம்,
08. தபால் அனுப்புவதற்கு இது அவசியம்.
09. பேனையின் முன் பகுதி
13. ஆண்களுக்கு முகத்தில் வளர்வது.
15. சந்திரன்
16. பயணம் செய்ய இது தேவை.
19. வேட்டையாடுபவன்.

### மேலிருந்து கீழ்

01. ஆஞ்சநேயரின் தாய்.
02. பங்கயம் என்பதன் ஒத்த சொல்.
04. மன்மதனின் துணைவி
05. நகைச்சுவையாக பேசுபவர்
06. ஒரு இயக்குநர். இலங்கை விவகாரம் பற்றி அதிகம் பேசுபவர்
08. தாஜ்மஹாலின் ரியல் நாயகி.
11. இந்த உணர்வு ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.
13. உயர்தர விஞ்ஞானப்பிரிவில் ஒருபாடம்.
14. ரஜினியின் புதிய படம்.

### கீழிருந்து மேல்

10. தொடக்கம்.
18. பெண்களின் ஒரு பருவம்.
19. இது இல்லாதது உலகளாவிய ரீதியில் ஒரு பிரச்சினையாக உள்ளது.
20. இந்துக்கள் வணங்கும் ஒரு தெய்வம்.
21. தாவர உண்ணிகளின் உணவு.

புதிர் BOX பகுதிக்கான உங்கள் விடைகளை 02ஆம் பக்கத்தில் உள்ள எமது முகவரிக்கு எழுதி அனுப்புகள்.

# வறுமை திறமைக்கு தடையில்லை!

# இளம் கண்டுபிடிப்பாளர் வினோஜ்குமார்



கடந்தகால யுத்தத்தினால் தமிழ் மக்கள் இழந்தவைகள் ஏராளம். எத்தனையோ துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்த எம் மக்கள் எக்காரணத்தைக் கொண்டும் கல்வியைக் கைவிடவில்லை.

கல்விக்கு அப்பால் பலர் தங்கள் தனிப்பட்ட திறமைகளைக் காட்டி கண்டுபிடிப்பாளர்களாகவும், சாதனையாளர்களாகவும் பரிணமித்துக் கொண்டிருக்கின்றனர்.

வறுமையும், எளிமையும் நிறைந்த ஒரு குடும்பத்தில் இருந்து இளம் சாதனையாளர் ஒருவர் உருவாகி இருக்கின்றார். அம்பாறை சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவிற்குட் பட்ட கோரக்கர் எனும் இக் குக்கிராமத்திலுள்ள மாணவன் ஒருவன் பல கண்டுபிடிப்புகள் மூலம் தனது கிராமத்திற்கும் பிரதேசத்திற்கும் பெருமை தேடிக்கொடுத்துள்ளார்.



யார் அந்த மாணவன்? அவனது பின்னணி என்ன? அவன் கண்டுபிடித்துள்ள புதிய கண்டுபிடிப்புகள் தான் என்ன? அதற்காக அவனுக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம் என்ன? இவற்றையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? வாருங்கள் கோரக்கர் கிராமத்திற்குள் நுழைந்து பார்ப்போம்.

கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார் சோமசுந்தரம் வினோஜ்குமார்.

கல்வியிலும், இணைப்பாட விதானங்களிலும் முன்னணியில் திகழும் இம்மாணவன் இலங்கையின் இளம் கண்டுபிடிப்பாளர்களுள் தெரிவு செய்யப்பட்ட 10 பேரில் ஒருவராக இருக்கின்றார்.

சூழலில் இருந்து கிடைக்கும் கழிவுப் பொருட்களைக் கொண்டு மெழுகுதிரியை மீள் சுழற்சிக் குட்படுத்தும் இயந்திரம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார். இவ் இயந்திரத்தை கண்டுபிடித்ததன் மூலமே அகில இலங்கை ரீதியில் புதிய இளம் கண்டுபிடிப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அமெரிக்கா, லண்டன் ஆகிய நாடுகளுக்கும் செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

மெழுகுத்திரி எரிகின்ற போது உருகும் மெழுகைக் கொண்டு மேலும் ஒரு மெழுகுதிரியை உருவாக்குவதே இம் மாணவன் கண்டுபிடித்த சாதனமாகும்.

இச் சாதனத்தைக் கண்டுபிடிக் கவேண்டும் என்ற ஆர்வம் எவ்வாறு தோன்றியது எனக்கேட்டேன்.

வீட்டில் மின்சாரம் இல்லை. மண்ணெண்ணெய் விளக்கும், மெழுகுதிரியும்தான் பயன்படுத்துவது வழக்கம். இப்போது மண்ணெண்ணெய்க்கும் விலை கூடிவிட்டது. மெழுகுதிரிக்கும் விலை கூடிவிட்டது. இதனைப் பார்த்துவிட்டுத்தான் உருகும் மெழுகுதிரியில் இருந்து ஏன் இன்னும் ஒரு மெழுகுதிரியை உருவாக்கக்கூடாது என நான் சிந்தித்ததன் விளைவே இவ் இயந்திரம் உருவாகக் காரணம் ஆகும்.

இதுமட்டுமல்ல வினோஜ்குமார் இதுபோன்ற இன்னும் பல இயந்திரங்களை தனது சிறுவயது முதலே கண்டுபிடித்திருக்கின்றார். அவை எல்லாம் சூழலில் இருந்து கிடைக்கப்பெற்ற பொருட்களைக் கொண்டே உருவாக்கியுள்ளார்.

2008 ஆம் ஆண்டு ஆறாம் வகுப்புப் படிக்கும் போது மூலிகை அரைக்கும் இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். இவ் இயந்திரமும் வலயமட்ட கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றது.

அத்தோடு 2009 ஆம் ஆண்டு உயிருடன் எலியைப் பிடிக்கும் எலிப்பொறி ஒன்றையும் கண்டுபிடித்திருக்கின்றார். இதற்காக ஒரு கலன், சிறிய கட்டுக்கம்பி, சின்ன ஆணி ஆகியவை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 2010 ஆம் ஆண்டில் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தும் வகையில் புதிய மின்விசிறி ஒன்றையும் கண்டுபிடித்துள்ளார்.

நாளைய நிமித்தம் இன்று என்ற பெயரில் தன்னியக்கி மின்விசிறி இவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்று பலர் மின்சாரத்தை போட்டுவிட்டு மறந்துபோய்விடுகின்றனர். இதனால் மின்சாரம் வீண்விரயமாகின்றது. இதனை நினைத்தே தானியங்கியாய் சுழலும் மின்விசிறியை கண்டுபிடித்தேன் என்கின்றார் வினோஜ்குமார்.

அதாவது நாம் மின்விசிறிக்கு



நேரேபோய் இருந்தால் மின்விசிறி தானாக சுழலும். நாம் எழுந்து சென்றால் தானாகவே நின்றுவிடும்.

இவைதவிர கழிவுப் பொருட்களை க்கொண்டு நீண்டகாலம் பாவிக்கக் கூடிய பாத்திரங்களையும் உருவாக்கி யிருக்கின்றார்.

இளம் கண்டுபிடிப்பாளர் எஸ்.வினோஜ்குமாரின் எதிர்காலக்கனவு இலட்சியம் எல்லாம் தான் ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்பதே ஆகும்.

சாதனை மாணவன் வினோஜ்குமாரின் தந்தை சாதாரண ஒரு கட்டிடத் தொழிலாளி (மேசன்). கூலி வேலைக்குச் சென்றே குடும்பத்தை பார்த்துக்கொள்கின்றார். வினோஜ்குமாரின் சகோதரன் கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவு பட்டதாரியாக கல்விபயின்று கொண்டிருக் கின்றார்.

வினோஜ் குமாரின் தாய் நவலெட்சுமி இப்படிக் கூறுகின்றார்.

வினோ எங்களுக்கு மகனாக கிடைத்ததற்கு பெருமைப் படுகின்றோம். அவன்ட ஆசப்படி மகன எஞ்சினியர் (பொறியியலாளர்) படிப்பு படிக்க வைக்கத்தான் ஆசைப்படுறம். குடும்பப் பொருளாதாரத்த நினைச்சா பயமாயிருக்குது. இருந்தும் கடவுள் எங்கள கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையிருக்குது என்றார்.

வினோஜ்குமாரை சிறுவயது முதலே அரவணைத்து ஆக்கமும், ஊக்குமும் அளித்துவரும் கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயத்தின் அதிபர் கூறுகையில்,

சிறுவயதில் இருந்தே வினோஜ்குமார் கெட்டிக்காரனாகவுள்ளான். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையிலும் 167 புள்ளிகள் எடுத்து சித்தியடைந்துள்ளான். வறிய குடும்பத்தில் பிறந்த ஒழுக்கமான மாணவன். அவனிடம் முயற்சியும், ஆர்வமும் உள்ளது. எதைப்பார்த்தாலும் ஒரு ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தில் தான் பார்ப்பான். அவனுக்கு நல்லதொரு எதிர்காலம் காத்திருக்கின்றது. இம் மாணவனின் எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு பலரும் கைகொடுக்க முன்வரவேண்டும் என்றார்.

இவ் இளம் சாதனையாளர் வினோஜ்குமாரின் வீட்டில் அவன் பாடசாலை நிகழ்வுகளில் வாங்கிக் குவித்த சான்றிதழ்களும், பரிசுகளும், பதக்கங்களும் நிறைந்து கிடக்கின்றன.

இம்மாணவன் பழைய முத்திரைகள், நாணயங்கள் என பலவற்றை சேகரித்து வைத்திருக்கின்றான்.

இலங்கையின் முதலாவது நாணயக் குற்றியைக்கூட வைத்திருக்கின்றான். இதுவரை உள்நாட்டு முத்திரைகள் இரண்டாயிரம், வெளிநாட்டு முத்திரைகள் ஐந்நூறு மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு நாணங்கள் என பலவற்றைப் பத்திரமாக வைத்துள்ளான்.

பல கண்டுபிடிப்புகளுக்கும் சாதனைகளுக்கும் சொந்தக்காரனாகத் திகழும் மாணவன் எஸ்.வினோஜ்குமாரிடம் உங்களைப் போன்ற மாணவர்களுக்கு நீங்கள் என்ன கூறப்போகின்றீர்கள் எனக் கேட்டேன்.

இங்கு என்னைவிட பல திறமையான மாணவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வெளியே தெரிவதற்கு வறுமை ஒரு காரணமாக இருக்கின்றது. வறுமையைக் காரணமாக வைத்து உங்கள் திறமைகளை மழுங்கடித்துவிடாதீர்கள்.

என் திறமைகளுக்கு களம் அமைத்துத்தரும் அதிபர் எம்.விஜயகுமாரன், ஆசிரியர்களான ஆரிப், மேவின், நிசாட், பாரீஸ், வலயக்கல்விப் பணிப்பாளர் மன்சூர் சேர் உட்பட என்னை உருவாக்கும் எனக்குதவி செய்யும் ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும், உறவினர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

15 வயதிற்குள் பல கண்டுபிடிப்புக்களை கண்டுபிடித்து எம் இனத்தில் ஒரு தோமஸ் அல்வா எடிசன் போன்று உருவாகிக் கொண்டிருக்கும் சோமசுந்தரம் வினோஜ்குமாரின் கல்விக்கும், கண்டுபிடிப்புக்களுக்கும் இனம், மதம், மொழி பாராது உதவ வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

செ.துஷ்யந்தன்

# இனவாதத்திற்கு முடிவு எப்போது?

# அமெரிக்கக் குழுவின் இலங்கை வருகையால் ஆகப்போவது என்ன?

இந்தியாவில் 27 மாநிலங்கள், ஏழு யூனியன் பிரதேசங்கள் தற்போது உள்ளன. இன்னும் ஒரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் புதிதாக உருவாகுமா? இதற்கு ஜனவரி 28 ஆம் திகதி காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலத்திலிருந்து தெலுங்கானா தனி மாநிலமாக பிரகடனப்படுத்தப்படுவது பற்றி இந்திய மத்திய அரசாங்கம் ஜனவரி 28 ஆம் திகதி அறிவிக்கவிருப்பதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.



தெலுங்கானா தனி மாநிலமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்று 1956 இலிருந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆந்திர மாநிலத்துடன் தெலுங்கானா 1956 இல் இணைக்கப்பட்டது. தெலுங்கானா என்ற பெயர் திரிலிங்க, திரிலிங்கதேசம் என்ற பெயரிலிருந்து உருவானது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

காலேஸ்வரம், ஸ்ரீசைலம், றக்ஷரம ஆகிய மூன்று மலைகளை எல்லைகளாகக்கொண்டு அமைந்துள்ளது தெலுங்கானா. சிவனின் வதிவிடங்களாக இம்மலைகள் கருதப்படுகின்றன. முசி, கோதாவரி, கிருஷ்ணா ஆகிய நதிகள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடுகின்றன. தெலுங்கானா பத்து மாவட்டங்களைக் கொண்டது.

ஹைதராபாத், அடிலாபாத், காமம், கரீம்நகர், மஹ்புநகர், மெடக், நல்கொண்டா, நிஸாம்பாத், வாரங்கல், ரங்கரெட்டி ஆகியன அவையாகும். 114840 சதுர கிலோ மீற்றர் பிரதேசங்களைக் கொண்ட தெலுங்கானாவின் சனத்தொகை 3586757. ஆந்திர மாநிலத்தின் மொத்த சனத்தொகையில் 41 சதவீதம் தெலுங்கானாவில் உள்ளது.

ஆந்திர மாநிலத்துடன் 1956 இல் இணைக்கப்படுவதற்கு முன்பு நிஸாம்கள் ஆட்சிசெய்த ஹைதராபாத் மாநிலத்துடன் தெலுங்கானா இருந்தது. ஆந்திர மாநிலம் மூன்று கலாசாரங்களை பிரதிபலிக்கும் பிராந்தியமாகும். ஒன்று தெலுங்கானா, இரண்டு கரையோர ஆந்திரா (கிழக்கு) மூன்று - ரோயல் சீமா (தெற்குப்புறம்). தெலுங்கானாவின் எல்லைகளாக மகாராஷ்டிரம், கர்நாடகம், சட்டிஷ்கார், ஒரிஸா ஆகியன அமைகின்றன.

இந்தியப் பாராளுமன்றத்தின் பொதுத்தேர்தல் 2014 இல் அல்ல, இவ்வாண்டிலேயே 2013 ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் நடைபெறலாம் என்ற ஊகம் புதுடில்லி அரசியல் உயர்மட்டத்தில் வலுத்துவரும் நிலையில் ராகுல்காந்தி இந்திரா காங்கிரஸின் தலைமைப் பீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இத்தெரிவும் திடீர் பொதுத்தேர்தல் ஊகத்திற்கு மேலும் வலுச் சேர்த்துள்ளது.

இந்த நிலையில் இந்தியாவில் புதிய மாநிலம் ஒன்று உருவாக்கப்படுமா? தெலுங்கானா மக்களின் கனவு நனவாகுமா? என்ற அறிவிப்பு ஜனவரி 28 இற்கு முன் வெளியாகலாம் என்ற நிலையில் இரண்டாவது தடவையாக இரண்டு தரம் விசுவாசப் பிரமாணம் செய்து அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பராக் ஒபாமாவின் பணிப்பிற்கிணங்க அமெரிக்க வெளியுறவு அமைச்சின் மூன்று உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று நாளை மறுநாள் கொழும்பு வரவிருக்கின்றது.

அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவராக இருந்தவரும் தற்போது அமெரிக்க வெளியுறவு அமைச்சில் தெற்கு மற்றும் மத்திய கிழக்கு விவகாரத்துக்கு உதவி வெளியுறவு அமைச்சராக இருப்பவருமான றொபேட் பிளேக் என்பவரின் கீழ் பணியாற்றும் மூன்று பிரதி உதவிச் செயலாளர்களான ஜேம்ஸ் முரே, விக்ரம் சிங், ஜேன் சிம்மர்மன் ஆகியோரே வரவிருக்கும் உயர்மட்டக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

அவர்களை கொழும்புக்கு அனுப்பும் றொபேர்ட் பிளேக் முள்ளிவாய்க்கால் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளை முற்றாக அறிந்தவர் மற்றும் போரின் முடிவின் பின்னர் கொழும்புக்கு வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரச தரப்புத் தலைவர்களுடன் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுபற்றி உரையாடல்களை நடத்தியவரும் ஆவார்.

மூன்றுபேரைக் கொண்ட அமெரிக்க அரசு உயர்மட்டக் குழுவினரின் கொழும்பு விஜயம் இலங்கை அரசாங்கமும் அதற்கு ஆதரவளித்துவரும் சிங்கள கடும் போக்கு அமைப்புகளும் கண்டனக் குரல்களை எழுப்பி வருகின்றன.

பிரபாகரனின் கனவை நனவாக்கவே அமெரிக்காவின் அதிபர் மூவர் கொண்ட உயர்மட்டக் குழுவை கொழும்புக்கு அனுப்புகின்றார் என்று தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருமான கலாநிதி குணதாஸ அமரசேகரா ஆவேசமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மூவர் அடங்கிய குழுவிற்கு திரிசூலம் குழு என்றும் பெயர் சூட்டியுள்ளார். அமெரிக்கா இலங்கை மீதான தனது அழுத்தத்தை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் பதவி நீக்கத்தின் பின்னர் அதிகரித்துவருவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

தற்போது நாளாந்தம் இலங்கை மீது அமெரிக்கா அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது. உலகின் ஒரே வல்லரசு என்ற நினைப்பில் அமெரிக்கா எமது நாட்டின் உள் விவகாரங்களிலும் மூக்கை நுழைக்கின்றது. இதற்கு நாம் ஒருபோதும் அடிபணியக்கூடாது. அமெரிக்கா இல்லாவிட்டால் என்ன, சீனா இலங்கைக்கு பக்கபலமாக இருக்கும், இருந்து வருகிறது. சீனாவின் பக்கம் முழுமையாக நாம் சாயவேண்டும். இதனைவிட இலங்கைக்கு மாற்றுவழியே கிடையாது என்று டாக்டர் குணதாஸ அமரசேகரா கொழும்பு அரசுக்கு உபதேசம் செய்துள்ளார்.

இன்னொன்றையும் அவர் உரத்துச் சொல்லியுள்ளார்.

பிரபாகரனின் கனவை நனவாக்கும் நோக்கிலேயே அமெரிக்கா செயற்படுகின்றது என்பது சிங்களக் கடும் போக்குத் தலைவர் குணதாஸ அமரசேகராவின் கண்டுபிடிப்பு. பாதுகாப்புச் செயலாளர் ஒருபடி மேலே போய் அமெரிக்கா இலங்கையருக்கு தனது இராணுவப் பயிற்சி வழங்குவதற்கு மறுத்தால் சீனா தனது நாட்டில் எம் வீரருக்கு பயிற்சியளிக்கும். நாம் சீனாவை நாடுவோம் என்று சூளுரைத்திருக்கின்றார். தேசிய சுதந்திர முன்னணித் தலைவர் இன்னொரு படி மேலே போய் அமெரிக்கா இல்லையேல் சீனா இருக்கிறது. சீனாவுடன் சேர்ந்து அமெரிக்காவிற்கு பாடம் படிப்பிப்போம் என்று வீராப்புப் பேசியிருக்கின்றார்.

பிரபாகரனின் கனவை நனவாக்கப்போகிறது அமெரிக்கா என்று சத்தமிடும் இலங்கை கடும்போக்கு அமைப்புக்களின் தலைவர்கள்தான் பிரபாகரனின் கனவை நனவாக்குவதற்கு



போராடுகின்றார்கள் என்ற உண்மையை எப்போது புரிந்துகொள்ளப் போகின்றார்கள்?

ஜனாதிபதி கிருலப்பனையில் வார இறுதியில் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது முப்பது வருட கால பயங்கரவாதத்தை முறியடித்துவிட்டேன் என்று கூறியிருந்தார். ஆனால், 6 வருட காலமாக நீடித்துவரும் இனவாதத்துக்கு இன்னும் முடிவு கட்டவில்லையே!

அநாமிகன்



# ரோஜாக்கள் அணி வகுப்புத் திருவிழா!

புத்தாண்டை வரவேற்கும் முகமாக அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் பசதீனா நகரில் வருடாந்தம் இடம்பெற்று வருகின்ற மகிழ்ச்சிக் கொண்டாட்டம்தான் ரோஜாக்கள் அணி வகுப்புத் திருவிழா. இத்திருவிழா 1890 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகின்றது.

பல மில்லியன் கணக்கானோர் ரோஜாக்களின் அணிவகுப்பை நேரில் பார்த்து இரசிப்பதோடு, அமெரிக்காவின் சகல தொலைக்காட்சிகளிலும் இது தவறாமல் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது. இவ்வருடத்திலும் இத்திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கு மட்டும் தானா?

பெண்களுக்கு மட்டும் தான் அழகிப் போட்டி நடத்துவீர்களா? நாங்கள் யானைக்கான அழகுப் போட்டியை நடத்துகிறோம் என நேபாளத்தில் நடத்திக் காட்டியுள்ளனர்.

இந்தப் போட்டியில் நேபாளத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 90 யானைகள் பங்கேற்றன. பாகன்களுக்கு கட்டுப்படுவது, கம்பீரத் தோற்றம், ஒழுக்கம், அலங்கரிப்பு ஆகியவற்றை அடிப்படையாக வைத்து புள்ளிகள் அளிக்கப்பட்டன. இதற்காக மூன்று நடுவர்கள் வந்திருந்தனர். இறுதியாக ஐந்து யானைகள் தேர்வு செய்யப்பட்டு அதிலிருந்து முதல் மூன்று யானைகள் தெரிவு செய்யப்பட்டன.

இதில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட சித்வான் காலி என்ற யானை முதல் பரிசை தட்டிச் சென்றது. இது சித்வான் தேசிய பூங்காவைச் சேர்ந்தது. இரண்டாவது பரிசு பிரகிர்த்தி காலி என்ற யானைக்கு கிடைத்தது.





# மணமகள் அழுவது இங்கே கட்டாயம்!

திருமணம் என்பது ஆயிரங்காலத்து பயிர். அனைத்து நாடுகளிலுமே திருமணங்களை பல்வேறு கலாசாரங்களின் கீழ் பல்வேறு விதமாக நடத்துகின்றனர். சீனாவின் சிசுவான் மாகாணத்தில் திருமணத்தை விட திருமணத்துக்கு முன் நடக்கும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் மிக வித்தியாசமானவையாக உள்ளன.

திருமணம் நடப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன்பிருந்தே மணப்பெண் தனியறைக்குச் சென்று தினமும் ஒரு மணி நேரம் அழ வேண்டும் என்பது இங்கு எழுதப்படாத விதி. இதன்படி திருமணத்துக்கு 30 நாட்களுக்கு முன் மணப்பெண் மணக்கோலத்தில் தன் வீட்டில் உள்ள தனியறைக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

அந்த தனியறையில் அமர்ந்து 10 நாட்களுக்கு அவர் தேம்பித் தேம்பி அழ வேண்டும். குறைந்தது ஒரு மணி நேரமாவது அழ வேண்டும். பதினோராவது நாளிலிருந்து இந்த அழுகை உற்சவத்தில் மணப் பெண்ணின் தாயாரும் பங்கேற்க வேண்டும்.

மணப் பெண்ணின் சகோதரிகளும் இடையிடையே அழ வேண்டும். அழுகையின் போது பெண்கள் நாட்டுப்புறப் பாடல்களை பெரும் குரலெடுத்து பாடுவர்.

அதேபோல் மணப்பெண் கணவர் வீட்டுக்குச் செல்லும் போதும் தன் உறவுப் பெண்களுடன் சேர்ந்து அழுவதையும் கட்டாய சடங்காக கடைப்பிடிக்கின்றனர். இந்த கலாசாரத்தை அழுகைத் திருவிழா என அந்தப் பகுதி மக்கள் அழைக்கின்றனர்.

திருமணத்தின் போது மணப் பெண்கள் அழாவிட்டால் அவர்களின் கணவர் வீட்டில் மகிழ்ச்சி இருக்காது, அவர்களின் குடும்பம் விருத்தி ஆகாது, குடிபுகுந்த வீட்டில் வறுமை தாண்டவமாடும் என அந்தப் பகுதி மக்களிடையே நம்பிக்கை நிலவுகிறது.

சிசுவான் மாகாணத்தில் வசிக்கும் பெரியவர்கள் கூறியதாவது;

பண்டை காலத்தில் இந்தப் பகுதியை ஆண்ட மன்னரின் மகளை அருகில் உள்ள பகுதியை ஆண்ட மன்னரின் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்தனர். அப்போது மணமகன் வீட்டுக்கு மணமகள் புறப்படும்போது தன் தாயாரை கட்டிப் பிடித்து கதறி அழுதார். தாயாரும் அழுதார்.

இந்தச் சம்பவத்தை நினைவு படுத்தும் வகையில் தான் தொடர்ந்து இந்த அழுகைத் திருவிழா நடைமுறையை பின்பற்றி வருகிறோம் என்கின்றனர்.

# ஐஸ்கிறீமிலும்-காரோட்டலாம்!

ஐஸ்கிறீம்களை சுவைக்க மட்டும் தான் முடியும் என நினைத்து விடாதீர்கள். இனிமேல் உங்களின் கார்களை இயக்குவதற்கான எரிபொருளாகவும் அவற்றை பயன்படுத்த முடியும் என்ற ஆச்சரியமான விஷயம் தெரிய வந்துள்ளது.

பிரிட்டனின் மான்செஸ்டர் பல்கலையைச் சேர்ந்த பேராசிரியர் நிக் டார்மர் தான் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.



அவர் கூறுகையில்; பெட்ரோல், டீசல் போன்றவற்றில் உள்ள காபோவைதரேற்றுகள் போல நாம் அன்றாடம் பயன்படுத்தும் ஷாம்பூ, குளியல் சோப் மற்றும் சுவைக்கும் ஐஸ்கிறீம் ஆகியவற்றிலும் காபோவைதரேற்றுகள் உள்ளன. இவற்றிலிருந்து ஹைட்ரோ கார்பன்களை எடுத்து கார்களுக்கு எரிபொருளாக பயன்படுத்த முடியும் என்கிறார். ஆனாலும் இதுகுறித்த ஆய்வு இன்னும் முழுமை பெறவில்லை.

சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் பெட்ரோல், டீசல் போன்றவற்றுக்குப் பதிலாக மாற்று எரிபொருளைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் சுற்றுச் சூழல் ஆர்வலர்களுக்கு இது மகிழ்ச்சியான செய்தி தானே!

உலகம் பேசுகிறது




# சட்டம் எல்லோருக்கும் சமமானதா?



தண்டனைகளில் கொடிய தண்டனை மரணதண்டனை, அதை விடவும் உச்ச தண்டனை மேன்மையுடன் மன்னித்தல் என்ற கோட்பாட்டை தூய இஸ்லாம் மட்டுமல்ல பல மதங்களும் சொல்கின்றன. இருந்தும் என்ன அநீதிக்கு நீதிப்பூச்சுப் பூசப்பட்டு ரிஸானா எனும் மலரின் உயிர் சவூதி அரசாங்கத்தால் பறிக்கப் பட்டிருக்கிறது.

தகுந்த சாட்சியங்கள் இல்லாத, வாதப் பிரதிவாதங்களற்ற, அரேபிய மொழி பேசத் தெரியாத, குற்றத்தை ஏற்க மறுத்த பெண்ணிடம் ஒப்புதல் வாக் குமூலம் பெற்று இந்த மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதைப் பார்த்து முழு உலகமே அதிர்ந்து போயுள்ளது.

குடும்பத்தின் வறுமை துடைக்க சொந்த நாட்டைவிட்டு ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ள அரேபிய நாடு ஒன்றில் அறிமுகமில்லாத, மனிதர்களுக்கு நடுவில் துணையேதுமின்றி தெரியாத மொழியில் எவ்வாறு அவளால் உண்மையை எடுத்துச் சொல்ல முடியும்?

நெஞ்சத்தை உருக்கும் ரிஸானாவின் மரணத்தை அரபு நாடு களுக்குத் தொழிலுக்காகச் செல்கின்ற பெண்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சவூதியில் கடந்த ஆண்டில் 69 பேர் மரணதண்டனைக்கு உள்ளானதோடு, அதற்கு முந்தைய ஆண்டில் 79 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. அதில் பல வெளிநாட்டுப் பணியாளர்கள் மரண தண்டனைக்கு உள்ளாகியுள்ளதோடு, தற்போது 120 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பணியாளர்கள் மரண தண்டனைக்கு முகம் கொடுக்கக் காத்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் சவூதி அரேபிய ஆய்வாளர் டினா அல் மமூன் குறிப்பிட்டுள்ளார்.

பல வழக்கு விசாரணைகளிலும் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு விசாரணை எப்படி முன்னெடுக்கப்படுகிறது என்பது கூடத் தெரியாமலுள்ளமை பரிதாபமானது.

இந்த விசாரணைகள் அரபு மொழியில் மாத்திரமே நடத்தப்படுகிறது. எந்த மொழிபெயர்ப்பும் செய்யப்படுவதில்லை. அவர்களுக்கு தூதுவராலய உதவிகளும் வழங்க அனுமதிக்கப்படுவதில்லை என்றும் மமூன் குறிப்பிடுகிறார்.

தனது தொழில் வழங்குநரை கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு இந்தோனேஷியப் பெண் ஒருவர் சிறையிலுள்ளார். இவர் மரண தண்டனையை சந்திக்கவுள்ளார். கடந்த 2010 ஆம் அண்டு மேற்படி பெண்ணை தொழில் வழங்குநர் கற்பழிக்க முற்பட்டபோதே அந்த நபர் கொல்லப்பட்டுள்ளார்.

இதேபோன்று சித்தி செய்னப் என்ற மற்றுமொரு இந்தோனேஸியப் பெண் தனது பெண் தொழில் வழங்குநரை 1999 ஆம் ஆண்டு கத்தியால் குத்திக் கொன்ற குற்றச்சாட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளார். மேலும் 40 வயதான மற்றொரு இந்தோனேசியப் பெண்ணான சதினா பின்தி ஜூமாதி அஹமட் என்ற பெண்ணும் தனது பெண் தொழில் வழங்குநரை கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு கடந்த 2007 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். இந்நிலையில் இவரை மரண தண்டனையிலிருந்து காப்பாற்ற பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு 1.6 மில்லியன் பௌன்ட்டுகள் நஷ்டஈட்டை வழங்க இந்தோனேசிய அரசு தயாராகி வருகிறது.

சவூதியில் மரணதண்டனைக்கு உள்ளான எமது நாட்டைச் சேர்ந்த ரிஸானா நபீக்கின் சம்பவத்தை அடுத்து சவூதி அரேபியா மீது சர்வதேச அளவில் கண்டனங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ரிஸானா நபீக் தன் மரணத் தறுவாயிலும் கூட அல்லாஹ் மீது சத்தியமாக நான் அந்தக் குழந்தையைக் கொல்லவில்லை என்றே வாதிட் டாள். ஒருவர் கொலைக் குற்றவாளி என்பது முற்று முழுதாக நிரூபணமான போதும் அவருக்கு மரணதண்டனை வழங்காமல் தடுக்கும் மனிதாபிமான வழிமுறையாகத்தான் இஸ்லாமிய சரீஆ சட்டம், பாதிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பளிக்கும் வாய்ப்பை வழங்கியிருக்கின்றது.

இத்தகைய காருண்ய மார்க்கத்தினை சரிவரப் புரிந்து கொள்ளாமல், ரிஸானாவை குற்றவாளியாகவே தீர்ப்பளிக்கும் பொறுப்பை குழந்தையின் கொடூர உள்ளம் படைத்த பெற்றோர்களிடம் ஒப்படைத்தமை எந்த அளவுக்கு சரியானது? மேலும் அவளுக்கு சிரச்சேதம் என்ற கொடிய தண்டனையை பொது மக்கள் முன்னிலையிலும், தொலைக்காட்சிகளினூடாகவும் வழங்கப்பட்டதன் மூலம் இவர்கள் என்ன சொல்ல விளைகின்றனர்? என்ற கேள்வி எழுகின்றது.

ஒரு கொலைக் குற்றவாளிக்கு பொது மக்கள் மத்தியில் வைத்து சிரச்சேதம் செய்யப்படும் போது ஏனைய மக்கள் இந்தக் கொடூரக் காட்சியைப் பார்த்து தண்டனைக்குப் பயந்து அவர்கள் குற்றம் புரிய மாட்டார்கள் என்ற வாதம் ஏற்க முடியாதது.

ஏனெனில் இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாக இதே விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் பலருக்கு சிரச்சேதம் செய்யப்பட்ட போதும், இன்னுமின்னும் குற்றவாளிகள் உருவாகிய வண்ணமே உள்ளனர்.

கோரத் தண்டனையைப் பார்த்த மக்கள் திருந்துவார்கள் என்ற கருத்து உண்மையாக இருந்தால் என்றோ கொலைக்குற்றம் இல்லாதொழிந்திருக்க வேண்டும்.

சவூதி, குற்றவாளிகளுக்கு பாரபட்சமற்ற தண்டனையை வழங்குகிறது என்ற கருத்தையும் பூரணமாக ஏற்றுக்கொள்ள முடி யாது. சவூதி அரசாங்கத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த அமெரிக்கக் கைதியொருவர் தண்டனைக்குட்படுத்தப்படாது அமெரிக்காவிற்குத் திருப்பியனுப்பப்பட்ட சம்பவமும் நிகழ்ந்திருக் கிறது. மேலும் பிரிட்டிஷ் கனடிய பிரஜையான வில்லியம் சாம்சன் பயங்கரவாத குற்றச்சாட்டின் அடிப்படையில் 2001 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார். சவூதி சிறையில் 964 நாட்களை கழித்த இவர் தனது பாஸ்போர்ட்தான் தனது தலையை காப்பாற்றியது என்று கார்டியன் நாளிதழில் எழுதியுள்ளார்.

அதேபோல் ஓரினச் சேர்க்கை காரணமாக மரணதண்டனை விதிக்கப்பட்ட மற்றொருவரும் பிறகு பத்திரமாக பிரிட்டனுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்.

சவூதியில் வேலை புரியும் ஆசிய மற்றும் கறுப்பின மக்கள் சமூக ரீதியாக பின்தங்கியிருப்பதாலும், அவர்கள் வரும் நாடுகளால் ராஜதந்திர ரீதியாக அழுத்தங்களை செலுத்த முடியாமல் இருப்பதுமே அவர்கள் தண்டனை பெறக் காரணம் என்று அம்னெஸ்டி நிறுவனத் தின் சவூதி ஆய்வாளர் டினா இல் மாமோன் உறுதிபடக் கூறுகிறார்.

இறுதியாக! துன்ப உலகை எட்டிப் பார்க்கப் பிறந்த ரிஸானா நபீக் இன்று ஒரு புரட்சி செய்திருக்கின்றார். பெண்ணினத்தை நீதியின் முன் நிறுத்தும் உரிமை பெண்களின் கரங்களுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்ற முடிவை சவூதிய அரசு இன்று எடுத்துள்ளது.

இதன் வழியில் ரிஸானாவின் இந்த அவதாரம் காலத்தால் அழியாதது. இது சவூதிப் பெண்ணினத்திற்கு ரிஸானா செய்த மாபெரும் சேவையாகும். இவளது வரலாறு எதிர்காலத்தில் பதியப்படும் என்பதில் எனக்கு வலுவான நம்பிக்கையுண்டு. செய்யாத குற்றத்திற்காக நீதிக்குத் தலைகுனிந்து நின்றாயே! தாயே! நீ உண்மையிலே வரலாறு கூறுகின்ற வரலாற்றுத் தாய்தான்.

எஸ்.ஹுசைன் மௌலானா

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்

# விதயாதரம்

கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

33 T I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஆகஸ்ட்
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2013**

| கணக்கீடு I **Accounting I** | ஆசிரியர்: **D. SAM** | පැය දෙක இரண்டு மணித்தியாலங்கள் **Two hours** |
|---|---|---|

**குறிப்பு - எல்லா வினாக்களுக்குமான விடைகளை இவ் வினாத்தாளிலே எழுதி எதிர்வரும் 30.01.2013 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி " கல்விக்குரல்", யாழ். தினக்குரல் இல, 336, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்.**

1. கணக்கியலின் கோட்பாட்டு ரீதியான வேலைச் சட்டகத்தில் (conceptual framework) கீழ்வருவனவற்றுள் எந்த விடயங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது?
   A. நிதி அறிக்கையிடலின் நோக்கெல்லையும் நோக்கமும்
   B. நிதித் தகவல்கள் கொண்டிருக்க வேண்டிய தர ரீதியிலான குணாம்சங்கள்
   C. நிதிக்கூற்றுக்களின் மூலகங்கள்
   D. சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம், செலவு மற்றும் உரிமை யாண்மையின் ஏற்பிசைவு நிபந்தனைகள்
   (1) A, B மற்றும் C மாத்திரம்
   (2) B, C மற்றும் D மாத்திரம்
   (3) A, B மற்றும் D மாத்திரம்
   (4) A, B, C, D எல்லாம்
   (5) A மாத்திரம்
   (........)

2. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் அறிக்கையிடப்படும் நிதித் தகவல்களில் பொதிந்திருக்க வேண்டிய தர ரீதியான குணவியல்புகள் எவை?
   (1) பொருண்மை, நம்பகத்தன்மை, விளங்கிக் கொள்ளும் தன்மை மற்றும் ஒப்பிடக் கூடிய
   (2) பொருண்மை, காலந் தவறாமை, விளங்கிக்கொள் தன்மை மற்றும் ஒப்பிடக் கூடிய
   (3) தொடர்புடமை, நம்பகத்தன்மை, விளங்கிக்கொள் தன்மை மற்றும் ஒப்பிடக் கூடிய
   (4) தொடர்புடமை, நம்பகத்தன்மை, பொருண்மை மற்றும் ஒப்பிடக் கூடிய
   (5) மேற்கூறிய எவையுமல்ல
   (........)

3. நிறுவன மொன்று பத்து ஆண்டுகளுக்கு முன்னர் காணித் துண்டொன்றினை கொள்வனவு செய்ததுடன், அந்தக் காணியின் தற்போதைய சந்தைப் பெறுமதி கொள்வனவு விலையின் 10 மடங்காகும். கணக்காளர் இந்தக் காணியினை மீள் மதிப்பீடு செய்ய எண்ணியுள்ளார். இந்த மீள் மதிப்பீடு எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தும்.
   (1) சொத்துக்களின் அதிகரிப்பும் உரிமையாண்மையில் வீழ்ச்சியும்
   (2) பரிப்பில் அதிகரிப்பும் உரிமையாண்மையில் வீழ்ச்சியும்
   (3) சொத்துக்களில் அதிகரிப்பும் உரிமையாண்மையில் அதிகரிப்பும்
   (4) பரிப்பில் வீழ்ச்சியும் உரிமையாண்மையில் அதிகரிப்பும்
   (5) பரிப்பில் அதிகரிப்பும் உரிமையாண்மையில் அதிகரிப்பும்
   (........)

4. ஆதனம், பொறி மற்றும் உபகரணமொன்றின் கட்டாயமான குணவியல் பாக அமையாதது எது?
   (1) சொத்தின் சட்ட உரிமை
   (2) எதிர்கால பொருளியற் பயன்கள் பொதிந்திருத்தல்
   (3) ஒரு ஆண்டிலும் அதிகமான ஆயுட்பாவனை கொண்டிருத்தல்
   (4) பௌதீக உளதாம் தன்மை (Physical Existence)
   (5) மேற்கூறிய எவையுமல்ல.
   (........)

5. நிறுவனமொன்று அதன் வியாபாரத் தொழிற்பாடுகளில் உபயோகிப்ப தற்காக கணினி மென்னுறுப்புப் பொதியொன்றினை விருத்தி செய்து வந்தது. இது தொடர்பாக உரிமம் இதுவரையில் ரூ 50 000 இனை செலவு செய்துள்ளது. இந்த அபிவிருத்தி செயன்முறை இன்னும் நீண்ட காலம் எடுக்குமென எதிர்பார்க்கப்படுவதனால் கம்பனி இந்த செயன்முறையினை கைவிட்டு புதிய கணினிப் பொதியொன்றினை ரூ 1 200 000 க்கு கொள்வனவு செய்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தினை கையாள்வதற்கு ஏதுவான பொருத்தமான கணக்கீட்டுக் கையாள்கை கீழ்வருவனவற்றுள் எது?
   (1) சொத்தாக ரூ.1 200 000 இனையும் செலவாக ரூ 500,000 இனையும் ஏற்பிசைவு செய்தல்
   (2) சொத்தாக ரூ. 500 000 இனையும் செலவாக ரூ 12,00,00 இனையும் ஏற்பிசைவு செய்தல்
   (3) செலவாக ரூ.1 700 000 இனை ஏற்பிசைவு செய்தல்
   (4) சொத்தாக ரூ.1 700 000 இனை ஏற்பிசைவு செய்தல்
   (5) செலவாக ரூ.1 300 000 இனை ஏற்பிசைவு செய்தல்
   (........)

6. நிறுவனமொன்று காணி மற்றும் கட்டடமொன்றினை ரூ 5 00 000 க்கு கொள்வனவு செய்தது. காணியின் பெறுமதி ரூ.1,000,000 ஆகும். நிறுவனம் கட்டடத்தினை மேம்படுத்துவதில் மேலும் ரூ. 500 000 இனை செலவு செய்ததுடன் இது கட்டடத்தின் பயன்தரு ஆயுட் காலத்தினை 25 வருடங்களாக அதிகரித்தது. கட்டடத்தின் மதிப்பிடப்பட்ட ஈற்றுப்பெறுமதி ரூ. 300 000 ஆகும். காணி மற்றும் கட்டடத்தின் பயன்பாடு ஆயுட் காலம் மாறாது சீராகக் காணப்படும். காணி, கட்டடம் தொடர்பாக அறவீடு செய்யப்பட வேண்டிய வருடாந்த தேய்மானம் என்ன?
   (1) ரூ. 248 000 (2) ரூ. 168 000 (3) ரூ 208 000
   (4) ரூ. 148 000 (5) மேற்கூறிய எவையுமல்ல.
   (........)

7. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஒன்றின் முன்கொணரற் பெறுமதி குறிப்பிடுவது
   (1) கிரயம் அல்லது மீள் மதிப்பீட்டுத்தொகையிலிருந்து திரள் தேய்மானம் மற்றும் திரள் சேத இழப்பு நட்டம் ஏதுமிருப்பின் அவற்றினைக் கழிக்க வரும் தொகையாகும்
   (2) சந்தை விலையிலிருந்து திரள் தேய்மானத்தினைக் கழிக்க வரும் தொகையாகும்
   (3) தரப்பட்ட தினத்தில் அந்தச் சொத்து விற்கப்படக் கூடிய சந்தை விலையாகும்.

(4) தரப்பட்ட தினத்தில் சொத்தின் சீர்மதிப்பாகும்.

(5) தரப்பட்ட தினத்தில் அந்தச் சொத்து விற்கப்படக் கூடிய சந்தை விலையிலிருந்து அதற்கான செலவு நீக்கியதாகும்.

(.........)

8. தர்மா கணிகருவியொன்றினை ரூ. 2 500 க்கு கொள்வனவு செய்தது. எனினும் கம்பனியின் கணக்கறிஞர் இதனை வருமானக் கூற்றில் செலவொன்றாக தாக்கல் செய்திருந்தார். ஏனெனில் கம்பனியின் கொள்கையானது கொள்வனவு செய்யப்படும் சொத்துக்களின் பெறுமதி ரூ.50 000 க்கு அதிகமானதாக இருந்தால் மாத்திரம் அதனை மூலதனப்படுத்தலாகும். இது எந்தக் கணக்கீட்டுத் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்ததாகும்.

(1) புத்தி விவேகம் (Prudence) (2) ஒப்பிடற் தகவு

(3) பொருண்மை (4) பொருத்தம் காணல் (Matching)

(5) அலகுசார்

(.........)

9. கம்பனியொன்றின் கணக்குகளை தயாரித்த பின்னர், அதன் ஆரம்பத் தொக்கு ரூ 150 000 இனால் மிகைப்படுத்திக் கூறப்பட்டிருந்த அதே வேளை இறுதித் தொக்கு ரூ 200 000 இனால் குறைவாகக் கூறப்பட்டிருந்ததாக கண்டறியப்பட்டது. எனவே உண்மையான மொத்த இலாபம்

(1) அறிக்கையிடப்பட்ட மொத்த இலாபத்திலும் பார்க்க ரூபா 350 000 அதிகமானது

(2) அறிக்கையிடப்பட்ட மொத்த இலாபத்திலும் பார்க்க ரூபா 350 000 குறைவானதாகும்

(3) அறிக்கையிடப்பட்ட மொத்த இலாபத்திலும் பார்க்க ரூபா 50 000 அதிகமானதாகும்

(4) அறிக்கையிடப்பட்ட மொத்த இலாபத்திலும் பார்க்க ரூபா 50 000 குறைவானதாகும்

(5) அறிக்கையிடப்பட்ட மொத்த இலாபத்திலும் பார்க்க ரூபா 40 000 குறைவானதாகும்

(........)

10. கீழ்வரும் கூற்றுக்கள் உமது அவதானத்திற்காக கிடைக்கப் பெற்றுள்ளன.

(i) காசு தேறப்படும் போது மாத்திரம் விற்பனைகள் ஏற்பிசைவு செய்யப்பட வேண்டுமென தேறுகைக் கோட்பாடு (Realization Con cept) கூறுகின்றது

(ii) நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சொத்துக்களை மிகைப்படுத்திக் கூறுதலும் பரிப்புக்களை பெறுமதி குறைத்துக் கூறுதலும் விரும்பத்தக்கது என புத்திசாதுரிய கோட்பாடு கூறுகின்றது

(iii) பண அளவீட்டுக் கோட்பாடானது நாணயப் பெறுமதிகளில் அளவிடப்படக் கூடிய உருப்படிகளை மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்ய முடியுமென கூறுகின்றது.

இந்த மூன்று கூற்றுக்களிலும்

(1) எல்லாமே சரியானவை

(2) (i) மற்றும் (iii) சரியானவை (ii) தவறானது

(3) (ii) மற்றும் (iii) சரியானவை (i) தவறானது

(4) (iii) சரியானது (i) மற்றும் (iii) தவறானது

(5) (i) சரியானது (ii) மற்றும் (iii) தவறானது

(........)

11. கணக்காய்வுக் குழு ஒன்றின் தொழிற்பாடு (வேலையின் நோக்கெல்லை) எதனை உள்ளடக்காது?

(1) அகக்கணக்காய்வுத் திட்டத்தின் மீள் நோக்கும் அங்கீகாரமும்

(2) உண்மையான பெறுபேறுகளை பாதீட்டுடன் ஒப்பீடு செய்தல்

(3) விலையிடற் கொள்கைகளை தீர்மானித்தல்

(4) கம்பனிக்கு பிரயோகிக்கப்படக் கூடிய ஒழுங்கு விதிகளுடன் ஒத்திசைவு

(5) மேற்கூறிய எவையுமல்ல

(........)

12. கீழ்வருவனவற்றுள் எது இலாப நோக்கத்தினைக்கொண்டிராத அமைப்பொன்றின் நிதிக்கூற்றுக்களில் சொத்தொன்றாக கொள்ளப்பட முடியாதது.

(1) நிலுவையிலுள்ள அங்கத்தினர் சந்தாப்பணம்

(2) முனனதாகப் பெறப்பட்ட அங்கத்தினர் சந்தாப்பணம்

(3) தொழிற்பாட்டில் உபயோகிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட வாகனம்

(4) முற்கொடுப்பனவு

(5) விளையாட்டுப் பொருள் இருப்பு

(........)

13. தரப்பட்ட திகதியொன்றில் தயாரிக்கப்படும் நிதி நிலைக் கூற்று எமக்கு காட்டுவது

(1) தொடர்ந்தியங்கும் தாபனமொன்றாக நிறுவனம் விற்கப்படக் கூடிய பெறுமதிகளை

(2) நிறுவன கலைப்பின் போது நிறுவனம் விற்கப்படக்கூடிய தொகை

(3) குறிப்பிட்ட காலம் மீதான நிறுவனத்தின் நிதிச் சாதனை

(4) தரப்பட்ட திகதியொன்றில் நிறுவனத்தின் நிதி நிலைமை

(5) தரப்பட்ட திகதியொன்றில் நிறுவனத்தின் நிதி அசைவு

(........)

14. கணக்குப் பயிலுனர் ஒருவரினால் கீழே தரப்பட்டுள்ள வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

| | ரூ |
|---|---|
| வங்கிக் கூற்றின்படி மேலதிகப் பற்று | (158,000) |
| கூட்டு : தேறாத வைப்புக்கள் | 38,000 |
| | (120,000) |
| கழி : வழங்கப்பட்டு கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | (110,000) |
| காசேட்டில் தவறான மிகை வருமதிப் பதிவு | (9,000) |
| காசேட்டின் படி வங்கி மீதி | (239,000) |

காசேட்டின் படியான சரியான மீதி என்ன?

(1) ரூ. 77 000 வரவு மீதி

(2) ரூ. 230 000 செலவு மீதி

(3) ரூ. 86 000 செலவு மீதி

(4) ரூ. 239 000 செலவு மீதி

(5) ரூ. 237 000 செலவு மீதி

(........)

15. தனி வியாபார உரிமையாளரொருவர் வியாபாரத் தொக்கிலிருந்து கிரயப் பெறுமதி ரூபா 20 000 இனை கொண்டிருந்தும், பின்னர் பாதிப்படைந்து இருந்ததுமான சில பொருட்களை தனது தனிப்பட்ட பாவனைக்காக எடுத்துக் கொண்டார். இந்தப் பொருட்களின் சாதாரண விற்பனை விலை ரூ.30 000 இந்த பாதிப்படைந்த பொருட்கள் திறந்த சந்தையில் ரூ 15 000 க்கு விற்கப்படலாம். எந்த நாளேட்டுப் பதிவு இதனை சரியாக பதிவு செய்யும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | எடுப்பனவுக் கணக்கு | வரவு | 30 000 | | |
| | விற்பனைக் கணக்கு | | | செலவு | 30 000 |
| (2) | எடுப்பனவுக் கணக்கு | வரவு | 15 000 | | |
| | விற்பனைக் கணக்கு | | | செலவு | 15 000 |
| (3) | எடுப்பனவுக் கணக்கு | வரவு | 15 000 | | |
| | தொக்கு இழப்புக் கணக்கு | வரவு | 5 000 | | |
| | கொள்வனவுக் கணக்கு | | | செலவு | 20 000 |
| (4) | எடுப்பனவுக் கணக்கு | வரவு | 20,000 | | |
| | கொள்வனவுக் கணக்கு | | | செலவு | 15 000 |
| | தொக்கு இழப்புக் கணக்கு | | | செலவு | 5 000 |
| (5) | எடுப்பனவுக் கணக்கு | வரவு | 15 000 | | |
| | விற்பனைக் கணக்கு | | | செலவு | 15 000 |

(........)

16. பரீட்சை மீதியொன்றின் செலவுப் பக்க மொத்தமானது வரவுப் பக்க மொத்தத்தினை விட ரூ.90 000 இனால் அதிகமாக காணப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள வழுக்களில் எந்த ஒன்று முற்றிலுமாக இந்த

22 T I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஆகஸ்ட்
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2013**

| | | |
|---|---|---|
| புவியியல் I<br>**Geography 1** | ஆசிரியர் :<br>**N. Babu ( Ba.Geo. Spl)** | පැය එකයි<br>1 மணித்தியாலம்<br>**One hour** |

**குறிப்பு - எல்லா வினாக்களுக்குமான விடையினை இங்கு பிற்பக்கத்தில் வழங்கப்பட்டுள்ள புள்ளடித்தாளில் குறித்து எதிர்வரும் 30.01.2013 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி " கல்விக்குரல்", யாழ் தினக்குரல் இல, 336, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்.**

1. பின்வருவனவற்றுள் எது கடகக்கோடு குறுக்காகச் செல்லும் ஐந்து நாடுகளின் பெயர்களைச் சரியாகத் தருகிறது?
   1. கொலம்பியா, கயானா, தன்சானியா, மலேசியா, பிலிப்பைன்ஸ்
   2. சிலி, ஆர்ஜன்ரீனா, நமீபியா, சிம்பாபே, அவுஸ்திரேலியா
   3. மெக்ஸிக்கோ, அல்ஜீரியா, லிபியா, சவுதி அரேபியா
   4. கனடா, இங்கிலாந்து, போலந்து, லிதுவேனியா, ரஷ்யா
   5. பேரு, பிரேசில், அங்கோலா, மலாவி, அவுஸ்திரேலியா

2. இலங்கையில் 1: 50,000 எனும் அளவுத்திட்டத்தின்படி வரையப் படும் ஒரு படத்தின் பக்க நீளங்கள் எவ்வாறு காணப்படும்?
   1. நீளம் - 30 km, அகலம் - 20 km
   2. நீளம் - 40 km, அகலம் - 25 km
   3. நீளம் - 50 km, அகலம் - 20 km
   4. நீளம் - 30 km, அகலம் - 15 km
   5. நீளம் - 35 km, அகலம் - 20 km

3. ஓரங்குல அளவுத்திட்டத்தின்படி இலங்கை எத்தனை இடவிளக்கப் படங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
   1. 92  2. 82  3. 72
   4. 62  5. 54

4. இடவிளக்கவியற் படங்களில் உயரம் குறைந்த பகுதியில் சமவுயரக் கோடுகள் நெருக்கமாகவும், உயரமான பிரதேசத்தில் சமவுயரக் கோடுகள் ஐதாகவும் இருக்குமாயின் அது எந்த சாய்வினைக் குறிக்கின்றது?
   1. குவிவுச் சாய்வு
   2. குழிவுச் சாய்வு
   3. சரிவுச் சாய்வு
   4. மென் சாய்வு
   5. குத்துச் சாய்வு

5. எண் கணித சராசரி எனப்படுவது?
   1. இடை  2. இடையம்  3. ஆகாரம்
   4. வீச்சு  5. திரள் மீடிறன்

6. திரள் மீடிறன்களுக்கு சதவீதம் கணிக்கப்பட்டு அதற்கு வரையப் படும் வளையி எது?
   1. ஓராய வளையி
   2. ஓகைவ் வளையி
   3. மீடிறன் வளையி
   4. திரள் மீடிறன் வளையி
   5. கோட்டு நிரல் வரைபு

7. தரவுத் தொகுதி ஒன்றில் மாறத்திறன் கணிக்கப்படுவது?
   1. தரவுகளை ஏறுவரிசைப்படுத்தி நடுப்பெறுமானத்தை கணிப்பதன் மூலம்
   2. தரவுப் பெறுமானங்களைக் கூட்டி எண்ணிக்கையினால் வகுப்பதன் மூலம்
   3. விலகல் பெறுமானங்கள் ஒவ்வொன்றையும் வர்க்கித்து விலகல்களின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம்
   4. தரவுத் தொகுதியின் கூடிய பெறுமதியிலிருந்து குறைந்த பெறுமதியைக் கழிப்பதன் மூலம்
   5. விலகல் பெறுமானங்களைக் கூட்டி எண்ணிக்கையினால் வகுப்பதன் மூலம்

8. தொலையுணர்வுத் தரவுகளை விபரிக்கின்ற சரியான முறைகள் எனக் கொள்ளக் கூடியது எது?
   1. கட்புல ரீதியான விபரணம், எண்சார் விபரணம்
   2. படமாக்கல், பகுப்பாய்வு செய்தல்
   3. எல்லைகளை வரையறை செய்தல், சுத்திகரித்தல்
   4. திட்டமிடலும், ஒழுங்கமைத்தலும்
   5. படமாக்கல், பிரதி செய்தல்

9. பூகோள இட நிர்ணய முறை (GPS) இன் பிரதான பிரிவுகள் எவை?
   1. மென்பொருள், வன்பொருள், மக்கள்
   2. தரவு, செயன்முறை, தகவல்
   3. முதன் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள்
   4. உள்ளீடு, செயன்முறை, வெளியீடு
   5. செய்மதித் தொகுதி, தரைக்கட்டுப்பாட்டுப் பகுதி, பயன்பாட்டாளர் பகுதி

10. GPS இன் ஆரம்பம் எந் நாட்டுடன் தொடர்புடையது?
    1. இந்தியா
    2. சீனா
    3. ஜப்பான்

தொடர்ச்சி 14 ஆம் பக்கத்தில்...

4. கனடா
5. ஐக்கிய அமெரிக்கா

11. பின்வருவனவற்றுள் எது **"பல்லுயிரினங்கள் தினம்"** எனக் கொள்ளக் கூடியது?
1. ஜூன் - 5 2. டிசம்பர் - 11 3. மே - 22
4. செப்ரம்பர் - 24 5. மார்ச் - 21

12. "முட்டைக் கூடைத் தரைத் தோற்றம்" எனப்படுவது?
1. ஆறு அரித்த சமவெளிகளில் தோன்றும் எச்சக் குன்றுகள் ஆகும்
2. பாலை நிலத்தில் காற்று உருவாக்கும் நெடு மணற்குன்றுகள் ஆகும்.
3. கிண்ணி வடிவ ஏரிகளைக் குறிக்கும்.
4. அலை வெட்டிய மேடைகளின் மேல் தோன்றும் படிவுகள் ஆகும்.
5. கண்டப் பனியாறுகள் உருவாக்கும் நீள் குன்றுகள் ஆகும்.

13. விரிவாக்க அசைவு என்பது எதனைக் குறிக்கின்றது?
1. கவசத் தகடுகளின் எல்லைகளில் நடைபெறும் ஒருங்கல் ஆகும்.
2. அமுக்க விசையின் தாக்கத்தால் மடிப்புகள் தோன்றுதல்.
3. இழுவிசையின் தாக்கத்தால் புவியோடு விரிவடைதல்.
4. தகடுகள் ஒடுங்கி பின் அமிழ்தல் ஆகும்.
5. சமுத்திர ஓட்டில் பிளவுகள் தோன்றுதல்.

14. புவி நடுக்கத்தினால் தோன்றிய **சான் - அன்றுஸ் பிளவு** காணப்படும் இடம் எது?
1. ரெக்சாஸ்
2. புளொரிடா
3. ரெனசி
4. கலிபோர்னியா
5. ஒக்லகாமா

15. மண்ணில் **"சேதன - கனிப்பொருள் படை"** எனப்படுவது?
1. O - படை
2. B - படை
3. C - படை
4. A - படை
5. D - படை

16. ஒரு பிரதேசத்தில் காணப்படும் மண்ணின் வடிவத்தினைத் தீர்மானிக்கின்ற காரணி எனக் கொள்ள முடியாதது எது?
1. வானிலையால் அழிதல் செயற்பாட்டின் வேகம்.
2. பாறைகள் கொண்டுள்ள கனிப்பொருள் வகை.
3. வானிலையால் அழிதல் செயற்பாட்டின் வகை.
4. மேற்பரப்பில் உள்ள குடியிருப்புக்களும், வீதிகளும்.
5. பாறைகளின் வன்மை, மென்மை.

17. வட அமெரிக்காவில் **" றில் பிளேயிங்"** (TILL PLAIN) என அழைப்பது?
1. தொனாடோ தாக்கும் பகுதிகளை ஆகும்.
2. பனியாறுகள் உருவாக்கும் வெளியடையற் சமவெளி
3. காற்று உருவாக்கும் யாடாங்கு நிலவுருவங்களை.
4. பிறையுரு மணற்குன்றுகளை.
5. பாலை நிலப் பசுஞ்சோலைகளை

18. **" ஊறு துடையல் "** என்பது?
1. மழை நீரினால் பாறைகள் கரைக்கப்படுதலைக் குறிக்கும்.
2. வட்டக் குகை நிலவுருவங்கள் அழிந்து பெரிதாகுதல்.
3. சுண்ணாம்புக்கல் பிரதேசங்களில் குகை தோன்றுதல்.
4. கண்டப் பனியாறுகள் மேற்பரப்பு மண்ணை நீக்குதல்.
5. அமுக்க விசையின் தாக்கத்தால் மடிப்புக்கள் உடைவுறல்.

19. மணற்குன்றுகளைக் கொண்டமைந்த பாரிய நிலப் பகுதிகள் அரேபியாவில் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
1. ஹமாடா 2. ஏர்க் 3. வாடி
4. ரப் - அல் - காலி 5. அலைவுகள்

20. தொப்பிப் பாறை என அழைக்கப்படுவது?
1. மொனாட் நொக்ஸ்
2. செம்மறியுருப் பாறை
3. களான் வடிவப் பாறை
4. கூம்பகச் சிகரங்கள்
5. ஆற்றுத் தீவுகள்

21. இலங்கையின் தோட்டக் குடியிருப்பின் வகைகளாவன?
1. கிராமக் குடியிருப்பு, நகரக் குடியிருப்பு
2. தனிமையான குடியிருப்பு, கொத்தணிக் குடியிருப்பு
3. பருவம் சார்ந்தவை, ஓரளவு நிலையானவை, நிலையானவை
4. புராதன கிராமம், பெருந்தோட்டக் குடியிருப்புக்கள்
5. கிராமக் குடியிருப்பு, கிராமாந்தரக் குடியிருப்பு

22. உலகில் பரம்பியுள்ள மொத்த நிலக்கரி வளத்தில் 2/3 பங்கு பரம்பியுள்ள கண்டம் எது?
1. ஆசியா
2. வட அமெரிக்கா
3. ஐரோப்பா
4. ஆபிரிக்கா
5. தென் அமெரிக்கா

23. இந்தியாவில் பசுமைப் புரட்சி ஆரம்பமான மாநிலம் எது?
1. தமிழ்நாடு
2. கர்நாடகா
3. ஆந்திரா
4. பஞ்சாப்
5. உத்தரப் பிரதேசம்

24. மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதையினங்களை, உணவுகளைத் தடைசெய்வதில் அக்கறை காட்டும் நாடுகளின் தொகுதி எது?
1. வெனிசுவெலா, ஹங்கேரி
2. சீனா, இந்தியா
3. அமெரிக்கா, கனடா
4. பிறேசில், ஆர்ஜென்ரீனா
5. அமெரிக்கா, சீனா

25. இலங்கையின் சனத்தொகையினரில் அதிகப்பட்ட கருவள வீதம் காணப்படும் வயதெல்லை எது?
1. 15 - 49 2. 14 - 64 3. 12 - 62
4. 18 - 23 5. 25 - 29

தொடர்ச்சி 19 ஆம் பக்கத்தில்...



அழகு..,
உடல் நலம்..,
குழந்தை வளர்ப்பு..,
சாதனை மகளிர்..,
ஆலோசனை..,
உளவியல்..,

# சிநேகிதியே



## வெங்காய பக்கோடா

**தேவையான பொருட்கள் :**

கடலை மா - 1 கிலோ
பெரிய வெங்காயம் - 1, 1/2 கிலோ
அப்பச்சோடா - 1/2 டீஸ்பூன்
பச்சை மிளகாய் - 5 (நீளமாக நறுக்கியது)
உப்பு - ருசிக்கேற்ப
எண்ணெய் - பொரிக்க

**செய்முறை**

வெங்காயத்தை நீளமாக பொடியாக வெட்டவும். கடலை மாவில் அப்பச் சோடா, உப்பு, சிறிதளவு எண்ணெய், வெட்டி வைத்திருக்கும் வெங்காயம், பச்சை மிளகாய் கலந்து சிறிது தண்ணீர் சேர்த்து உதிரியாக பிசைந்து வைத்துக் கொண்டு, எண்ணெயில் உதிர்த்துப் போட்டு சிவந்ததும் எடுக்கவும்.
வெங்காய பக்கோடா ரெடி.

# பாதங்கள் அழகாக பெடிக்யூர்





தனு ரசாக்

பெண் என்பவள் தன்னை எந்த வயதிலும் அழகாக வைத்துக்கொள்ள வேண்டும். அழகு என்ற விடயத்தைவிட இதில் ஆரோக்கியமும் அடங்குகின்றது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

நாம் நம்மை சுத்தமாகவும், அழகாகவும் வைத்திருப்பது மிகவும் அவசியமானது. இது எமது மனதில் தன்னம்பிக்கையும் தைரியத்தையும் எழ உதவி புரியும். நாம் எப்படி இருக்கின்றோம் என்பதை நாம் அணியும் ஆடையும் நாம் நம்மை அழகாக வைத்துக்கொள்ளும் விதமும் வெளிப்படையாகக் காட்டிவிடுகின்றது என்கிறார் நம் அழகியற் கலை நிபுணரான தனு ரசாக்.

இதற்காக நாம் அழகு நிலையங்களை நாடிச் சென்று பல ஆயிரங்களை செலவழித்து பணத்தை விரயமாக்கி இன்று வந்துள்ள நவீன அழகு முறைகளைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை.

சிலருக்கு அதிகமாக ஒப்பனைகள் இட்டுக் கொள்வதில் ஆர்வமில்லாமல் இருக்கும். சிலருக்கு ஒப்பனை இல்லாவிட்டால் நித்திரையும் வராது. ஆக அவரவர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப அழகுபடுத்திக் கொள்வதில் எந்தத் தவறுமில்லை. அந்த வகையில் எமது கால் நகங்களையும், பாதங்களையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதற்கு நாம் முக்கிய கவனம் எடுக்கவேண்டும்.

இதற்கென்றே தற்போது வந்துள்ள ஒரு அழகு சிகிச்சை முறைதான் இந்த பெடிக்யூர். இந்த பெடிக்யூர்களை நாம் அழகு நிலையம் சென்று தான் செய்யவேண்டும் என்பதில்லை. எளிமையான முறையில் நாம் எமது வீடுகளிலும் செய்து கொள்ளலாம். அவ்வாறான எளிய முறையொன்றாக முதலில் இவ் பெடிக்யூரிற்கு தேவையான ஸ்கரப்பர், சிறிய ப்ரஷ், டவல், கிறீம், ப்யூமி ஸ்டோன், பாதணிகள் என்பவற்றை தயாராக வைத்துக்கொள்ள வேண்டும். அடுத்ததாக எமது விரல்களில் நகங்கள் வளர்ந்திருந்தால் அவற்றை முறையாக வெட்டிக்கொள்ள வேண்டும். அப்படி வெட்டும் போது, நகத்தை ஒட்ட வெட்டக் கூடாது. சிறிது இடைவெளி விட்டே வெட்ட வேண்டும். பிறகு, இளம் சூடான நீரில் சிறிதளவு ஷாம்பூவைக் கலந்து, அதில் நம்முடைய கால்களை சிறிது நேரம் ஊறவைக்க வேண்டும்.

ஸ்கரப்பர் அல்லது ப்யூமிக் ஸ்டோன் கொண்டு கால்களைத் தேய்க்க வேண்டும். சிலருக்கு கால்களில் வெடிப்புகள் அதிகமாக இருக்கும். இவ்வாறு இருப்பவர்கள் கால்களை தேய்க்கும் போது வலிகள் ஏற்படுவதுண்டு. அப்படி ஏற்படாமல் தவிர்க்க, அதற்கான கிறீம்கள் அல்லது பவுடரை தடவி தேய்க்கலாம்.

பெடிக்யூரை மாதத்திற்கு ஒரு தடவை செய்துவந்தாலே எமது கால்களும், பாதங்களும் அழகாகவும் பொலிவாகவும் தோற்றமளிக்கும். நாம் இவ் பெடிக்யூரை அழகு சிகிச்சை நிலையங்களில் மேற்கொண்டால் எமது பாதங்களுக்கு சிறந்த மசாஜ் முறைகளுடன் இவற்றை மேலும் சிறந்த முறையில் செய்துகொள்ளலாம்.

எஸ். பிரியதர்ஷினி

# பயனுள்ள டிப்ஸ்!



✱ நூலை மெழுகுவர்த்தியின் மீதுதேய்த்து, அந்த நூலைக் கொண்டு பொத்தான்களை தைக்க வேண்டும். அப்படிச் செய்தால் பொத்தான்கள் வெகு நாட்கள் உதிர்ந்து போகாமல் இருக்கும்.

✱ துணி தைக்கும் ஊசியை ஒரு சிறு கம்பளித்துண்டில் குத்தி வைத்தால் அது துருப்பிடிக்காமல் இருக்கும்.

✱ தபால் கவர்களின் மீது விலாசம் எழுதிய பின் அதன் மீது கொஞ்சம் மெழுகை தேய்த்து விட்டால், தண்ணீர் பட்டாலும் விலாசம் கிழிந்து போகாமல் இருக்கும்.

✱ பாத்திரங்கள் கழுவும் போது நீரில் அவ்வப்போது வினிகரைக் கலந்து கழுவினால் பாத்திரங்கள் பளிச்சென்று இருக்கும், கைகளும் மென்மையாக இருக்கும்.

✱ அரிவாள்மனை, தேங்காய்த் துருவி, காய்கறி நறுக்க பயன்படும் கத்தி போன்றவைகளில் உள்ள துருவைப் போக்க அவற்றின் மீது ஒரு பெரிய வெங்காயத்தை நறுக்கி தேய்த்தால் துரு போய்விடும்.

✱ வெந்நீரில் உப்பைக் கரைத்து மரச் சாமான்கள் மீது படிந்துள்ள கறையின் மீது தேய்த்தால் கறை அகன்று விடும்.

**கொசுத்தொல்லையா?**

கொசு அதிகமிருந்தால், ஒரு பெரிய வெங்காயத்தை நாலாக வெட்டி, கையால் லேசாக நசுக்கி அறையில் ஆங்காங்கே வையுங்கள். சின்ன வெங்காயம் நாலைந்து நசுக்கியும் வைக்கலாம். வெங்காய வாடையைத் தாங்குவதில் ஆட்சேபனை இல்லையென்றால் சாறு பிழிந்தும் தெளிக்கலாம். கொசுக்கள் வருவது குறைந்துவிடும்.

**நல்ல தூக்கம் வேண்டுமா?**

காய்ச்சிய பாலுடன் சிறிது கசகசாப் பொடியைக் கலந்து தூங்கச் செல்வதற்கு முன் குடிக்கவும். இது நல்ல தூக்கத்தையும், சுகாதாரமான உடல்நலத்தையும் கொடுக்கும். கசகசா பாயசமும் செய்து சாப்பிடலாம்.

# நீர்க்கடுப்பைப் போக்கும் வெங்காயம்



வெங்காயம் இன்றி சமையலே கிடையாது. அந்த அளவுக்கு எல்லா சமையலிலும் அது முக்கிய இடம் பிடிக்கிறது.

தண்ணீர் அதிகம் குடிக்காமல் வெயிலில் வெகுநேரம் அலைந்து திரிபவர்களுக்கு நீர்க்கடுப்பு பாதிப்பு ஏற்படும்.

இவர்கள், ஒரு வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி, அதை ஒரு டம்ளர் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைக் குடித்தால் நீர்க்கடுப்பு உடனே நின்றுவிடும்.

வெங்காயத்தை தண்ணீரில் போட்டு கொதிக்க வைக்கும் அளவுக்கு பொறுமை இல்லாதவர்கள், அப்படியே பச்சையாக வெங்காயத்தை சாப்பிடலாம். சில நிமிடங்களிலேயே நீர்க்கடுப்பு காணாமல் போய்விடும்.

வெயில் காலத்தில் சிலருக்கு உடம்பில் கட்டிகள் தோன்றும். இதற்கு, வெங்காயத்தை நசுக்கி, சாறு பிழிந்து கட்டிகள் உள்ள இடங்களில் தடவி வந்தால் வெகுவிரைவில் நிவாரணம் கிடைக்கும்.

## பாடல்



படம்:சமர்
இசை:யுவன் சங்கர் ராஜா
பாடியவர்: நரேஷ் ஐயர்
பாடல் வரிகள்:-நா.முத்துக்குமார்

அழகோ அழகு
அவள் கண்ணழகு
அவள் போல் இல்லை ஒரு பேரழகு
அழகோ அழகு
அவள் பேச்சழகு
அருகில் எரிக்கும் அவள் மூச்சழகு

அழகோ அழகு
அவள் கண்ணழகு
அவள் போல் இல்லை ஒரு பேரழகு
அழகோ அழகு
அவள் பேச்சழகு
அருகில் எரிக்கும் அவள் மூச்சழகு

தத்தி நடக்கும் அவள் நடையழகு
பத்தி எரியும் அவள் உடையழகு

அய்யய்யோ சிக்கென நடக்கும்
அய்யய்யோ ஓவியம் அவளோ
அய்யய்யோ சக்கரை தடவி
அய்யய்யோ செஞ்சது உடலோ

அழகோ அழகு
அழகோ அழகு

எந்த பூவிலிருந்து வந்ததிந்த தேனோ
என்று எண்ணி வியக்கும் இதழ் அழகு
அந்தியிலே வானம் சிவந்ததை போலே
கன்னம் எங்கும் தோன்றும்
வெட்கம் அழகு

மெல்லிடையை பற்றி சொன்னால்
இல்லாத அழகு
கீழே கொஞ்சம் பார்க்க சொன்னால்
பொல்லாத அழகு
கடவுள் கவிதை ஒன்றை படைத்ததை
என்ன சொல்லவோ

காட்டருவி போலே அலை அலையாக
கண்டபடி ஓடும் குழல் அழகு
கண்ணிரண்டில் வலையை
பின்னிப் பின்னி வீசி
நெஞ்சம் அதை பறிக்கும் செயல் அழகு
தெற்றுப் பல்லில் சிரிக்கையில்
தீராத அழகு
கண்ணிரண்டு யோசிக்கையில்
வேறேதோ அழகு
கடவுள் கவிதை ஒன்றை படைத்ததை
என்ன சொல்லவோ

அழகோ அழகு
அவள் கண்ணழகு
அவள் போல் இல்லை ஒரு பேரழகு
அழகோ அழகு
அவள் பேச்சழகு
அருகில் எரிக்கும் அவள் மூச்சழகு

தத்தி நடக்கும் அவள் நடையழகு
பத்தி எரியும் அவள் உடையழகு

அய்யய்யோ சிக்கென நடக்கும்
அய்யய்யோ ஓவியம் அவளோ
அய்யய்யோ சக்கரை தடவி
அய்யய்யோ செஞ்சது உடலோ



## ஆன்மீகத்தில் இருந்து வெளியேறிய தனுஸ்ரீ தத்தா!

தீராத விளையாட்டுப் பிள்ளை படத்தில் நடித்த தனுஸ்ரீ தத்தா, அதன் பின் மொட்டையடித்து முழுநேர ஆன்மீகவாதியானார். ஆனால், இப்போது அவரது குடும்பத்தினர் அவரை ஆன்மீகத்தில் இருந்து வெளியே கொண்டுவந்துவிட்டனர். அதோடு, திருமணமே செய்து கொள்ளப்போவதில்லை என்று அறிவித்திருந்த தனுஸ்ரீ தத்தாவின் வாயிலிருந்தே, ''விரைவிலேயே திருமணம் செய்து கொள்வேன்...'' என்றும் சொல்ல வைத்துள்ளனர்.



## பாலாவின் புதிய படத்தில் விக்ரம்-விஷால்

தமிழ் சினிமாவில் தற்போது ஒன்றுக்கும் மேற்பட்ட கதாநாயகர்கள், கதாநாயகிகள் நடிக்கும் கலாசாரம் வளர்ந்து வருகிறது. அந்த வரிசையில் விக்ரம்-விஷால் இருவரும் தற்போது இணையவிருக்கிறார்கள். பரதேசி படத்தினைத் தொடர்ந்து பாலா இயக்கும் புதிய படமொன்றில்தான் விக்ரம்-விஷால் இருவரும் இணையவுள்ளனர். வழக்கமாக இயக்குநர் பாலாவின் அடுத்தடுத்த படங்களுக்கிடையில் நீண்டகால இடைவெளி இருக்கும். ஆனால், பரதேசி படம் வெளியான பின்பு, விரைவிலேயே விஷால்-விக்ரம் இணையும் படத்தை துவங்க திட்டமிட்டிருக்கிறாராம் பாலா. விக்ரம் ஏற்கனவே பாலா இயக்கிய சேது, பிதாமகன் ஆகிய படங்களில் நடித்துள்ளார். அதேபோல் விஷாலும் பாலா இயக்கிய அவன்-இவன் படத்தில் ஆர்யாவுடன் சேர்ந்து நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் பயிற்சி செய்யும் சுனைனா!



நீர்ப்பறவை படத்தில் சுனைனாவின் நடிப்பு பேசப்பட்டதால், எதிர்காலத்தில் விருது பெறும் கதைகளில் நடிக்க அதிக ஆர்வமாக உள்ளார். அதனால், கனமான கதாபாத்திரங்களாகத் தேடும் சுனைனா, தனக்குத்தானே தமிழில் டப்பிங் பேசவும் பயிற்சி எடுத்து வருகிறார். மேலும், தமிழில் ஓரிரு வார்த்தைகளே பேசத் தெரிந்த அவர், தன்னை சுற்றியிருக்கும் யூனிட் நபர்களிடமும் தனக்குத் தெரிந்த தமிழில் பேசி வருகிறார்.



## “உ” படத்தில் சூப்பர் சிங்கர் ஜூனியர் ஆஜீத் அறிமுகம்



பீனிக்ஸ் பிக்சர்ஸ் தயாரிப்பில் தம்பி ராமையா முதன்மை கதாபாத்திரமாக நடிக்கும் ''உ'' படத்தில், சூப்பர் சிங்கர் ஜூனியர் பட்டம் வென்ற ஆஜீத், நடிகராகவும், பின்னணிப் பாடகராகவும் ஒரே படத்தில் அறிமுகம் ஆகிறான்.

இந்த சுவாரஸ்யமான அறிமுகம் நடந்தது எப்படி என்று இயக்குநர் ஆஷிக் கூறுகையில், எங்க படத்தில் ஒரு குட்டி டூயட் பாட்டு வருது. அதை யாரை பாட வைக்கலாம்னு இசையமைப்பாளர் அபிஜித் ராமசுவாமியும் நானும் பேசிட்டிருந்தோம்.

அப்போ தான் சூப்பர் சிங்கர் போட்டியில் ஆஜித் பாடிக்கொண்டு இருந்தான். எப்படியும் இறுதியில் அவன்தான் ஜெயிப்பான்னு எல்லாரும் சொன்னாங்க. அப்படியே நடந்தது. ஆனா, அவன் பைனல்ஸ் ஜெயிக்கிறதுக்கு முன்னாடியே நாங்க அவனை பாட வைக்கிறதுன்னு முடிவு பண்ணி அவங்க பெரியப்பாகிட்ட பேசிட்டோம்.

போட்டியில ஜெயிச்ச உடனே முதன்முதலாக ''உ'' படத்திற்காக பாட வச்சோம். ''திக்கித் தெணறுது தேவதை, வெட்கப்படுதொரு பூ மழை'' என்று தொடங்கும் டூயட் பாட்டு.

ஆஜித்கூட பா.ஸ்ருதின்னு இன்னொரு குட்டிப்பொண்ணை பாட வச்சோம். செம காம்பினேஷன். 45 நிமிஷத்துல என்ஜாய் பண்ணி பாடி முடிச்சிட்டான். சினிமாவுல என்னோட முதல் பாட்டே இவ்ளோ அழகா அமைஞ்சது சந்தோசமா இருக்கு என்று சொல்லிட்டு கிளம்பிட்டான்.

ரெக்கார்டிங் தியேட்டர்ல இருந்து வழியனுப்பி வைக்கிறப்போ, கூட வந்திருந்த ஆஜீத் பெரியப்பாகிட்ட ஆஜீத் அழகா பாடிட்டான். அந்த பாட்டுல நடிக்க வைக்கிறதுக்கு ஒரு சுட்டிப் பையனை தேடிட்டிருக்கோம்னு சொன்னோம். ஆஜித்துக்கு நடிக்கிறதுக்கும் ஆசை இருக்குன்னு, அவன் அழகா நடிப்பான்னு சொன்னாரு.

அப்படியே அடுத்த வாரத்துல அவனைக் கூட்டிட்டு அம்பாசமுத்திரம் கிளம்பிட்டோம். அவனுக்கு ஜோடியா மதுமிதான்னு ஒரு குட்டிப்பொண்ணை நடிக்க வச்சோம். அவங்க காம்பினேஷனும் செம க்யூட். பாட்டு எதிர்பார்த்ததைவிட ரொம்ப அழகா வந்திருக்கு.

''உ'' படத்தில் நடிகராகவும், பின்னணிப் பாடகராகவும் ஆஜீத் அறிமுகம் ஆகிறது எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்னு ஆஜீத் அம்மா, பெரியப்பா, அக்கா எல்லோரும் சொன்னாங்க. ரொம்ப சந்தோஷமா இருக்கிறது என மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

பாட
35 ப
சூப்ப
மணி
எழுதி

## ...தன் கார்க்கிக்கு கிடைத்த பெருமை!

கடந்த, 2012 எனக்கு மிகச்சிறப்பான ஆண்டு என்கிறார் ...ாசிரியர் மதன் கார்க்கி. 14 படங்களுக்கு மொத்தம், ...ல்களை எழுதியுள்ளேன். அதில், 15 பாடல்கள் ஹிட்டானவை என்று சொல்லும் மதன் கார்க்கி, ...த்னத்தின், கடல் படத்துக்காக மட்டும் மூன்று பாடல்கள் ...பிருப்பதை, தனக்கு கிடைத்த பெருமை என்கிறார்.

## சினிமாவுக்கு வரும் சின்னத்திரை ஜோடி!



சரவணன்-மீனாட்சி தொடரில் நடித்து வரும் செந்தில் - ஸ்ரீஜா இருவரும் சினிமாவில் நுழைகின்றனர். கரண் நடித்த, கருப்பசாமி குத்தகைதாரர் படத்தை இயக்கிய மூர்த்தி, தன் புதிய படத்தில் இந்த ஜோடியை நடிக்க வைக்கிறார். மேலும், ஸ்ரீஜாவுக்கு இதுதான் முதல் படம் என்ற போதும் செந்தில், செங்காத்து பூமியிலே படத்தில் ஏற்கனவே நாயகனாக நடித்தவர். இப்போது, கண் பேசும் வார்த்தைகள் என்ற படத்திலும் நடிகை இனியாவுடன் நடித்து வருகிறார்.

## விருது வேண்டாம்; இரசிகர்களின் பாராட்டு போதும்! அஜித்



இரசிகர்களின் பாராட்டு ஒன்றே ...பாதும், எனக்கு விருது எல்லாம் ...தேவையில்லை என்று நடிகர் அஜித் ...கூறியுள்ளார். விஷ்ணுவர்தன் இயக்கும் ...புதிய படத்தில் நடித்து வருகிறார் அஜித். இப்படத்தில் அஜித் உடன் ஆர்யா, நயன்தாரா, டாப்சி ஆகியோரும் நடிக்கின்றனர். படத்தின் ஷூட்டிங் முடியும் தருவாயில் உள்ளது. ஆனால் இப்படத்திற்கு பெயர் இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. அதேசமயம் படத்திற்கு பெயர் முடிவாகிவிட்டதாகவும், விரைவில் படத்தின் அதிகாரபூர்வ தலைப்பை அறிவிப்பேன் என்று டைரக்டர் விஷ்ணுவர்தன் கூறியுள்ளார். இந்நிலையில் அஜித் புதுமுடிவு ஒன்றை எடுத்துள்ளார். அதாவது 8 மாதத்திற்கு ஒரு புதியபடத்தை கொடுக்க எண்ணியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது, எட்டு மாதத்திற்குள் ஒரு படத்தை முடிக்க எண்ணியுள்ளேன். அதற்காக திட்டமிட்டு உழைத்து வருகிறேன். இந்த கொள்கையை மங்காத்தா படம் முதலே எடுத்துவிட்டேன். மேலும் எனக்கு விருது மேல் எல்லாம் ஆசை கிடையாது. மாறாக இரசிகர்களின் பாராட்டு ஒன்று மட்டும் எனக்கு போதுமானது என்று கூறியுள்ளார்.

## கிண்டலும் கிராக்கியும்



பொங்கல் வரவுகளில் தற்போது சக்கை போடு போடுகிறது "கண்ணா லட்டு தின்ன ஆசையா" படம். பவர் ஸ்டாரை எந்தளவு கிண்டல், கேலி செய்ய முடியுமோ அதை படத்தில் செய்து இருந்தார் சந்தானம். இதுவே தற்போது பவர் ஸ்டாருக்கு பெரிய பலமாக அமைந்துள்ளது. சந்தானத்தை விட பவர் ஸ்டார் பற்றி தான் எல்லோரும் பேசுகிறார்கள். மேலும் தமிழ் படம் மற்றும் இந்திப் படவாய்ப்பு என பவர் ஸ்டார் காட்டில் பண மழையும் குவிகிறதாம். நாம் கிண்டல் செய்ததே தற்போது கிராக்கி ஆகிவிட்டது. போகிற போக்கைப் பார்த்தால் பவர் ஸ்டார் நம்முடைய தலையிலேயே கை வைத்து விடுவார் போல என புலம்புகிறாராம் சந்தானம்.

## விஜய்யுடன் இணைந்து பாடும் சந்தானம்



நடிகர் விஜய் நடிப்பதோடு மட்டுமல்லாமல், தன்னுடைய படங்களில் அவ்வப்போது சில பாடல்களை பாடியும் வருகிறார். இவருடைய குரலில் வந்த அனைத்து பாடல்களும் பெரிய அளவில் ஹிட்டாகியுள்ளன.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு துப்பாக்கிப் படத்தில் "கூகுள் கூகுள்" என்ற பாடலை பாடினார். இந்தப் பாடல் இரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்தப் பாடலின் வெற்றி விஜயின் பாடல் ஆசையை மேலும் அதிகரித்துள்ளது.

தற்போது "தலைவா" படத்திலும் ஒரு பாடலை பாடியிருக்கிறார். இம்முறை விஜய்யுடன் இணைந்து பாடியிருப்பவர் நகைச்சுவை நடிகர் சந்தானம். ஜீ.வி.பிரகாஷ் இசையில் இவர்கள் இருவரும் இணைந்து பாடியுள்ள இந்தப் பாடல் மிகவும் நன்றாக வந்திருப்பதாக கூறப்படுகிறது.




## மீனவ பெண்ணாக பார்வதி!



பூ படத்தில் நடித்த பார்வதி தற்போது, தமிழ், மலையாளம், கன்னடம் என்று பரவலாக நடித்து வருகிறார். இதில், தமிழில் தனுஷ் நடிக்கும் மரியான் படத்தில் மீனவ பெண்ணாக நடிக்கிறார். "இதுவும் ஹீரோவுக்கு இணையான வேடம் என்பதால், பூ படத்தைப் போலவே, இந்தப் படத்திலும் எனக்கு ரொம்ப நல்ல பெயர் கிடைக்கும்..." என்று சொல்லும் பார்வதி, "மரியான் படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைப்பது என் நடிப்புக்கு இன்னும் பலம் சேர்க்கும்..." என்கிறார்.

## பாடல்



படம்: தம்பிக்கு எந்த ஊரு
இசை: இளையராஜா
பாடியவர்: எஸ்.பி.பாலசுப்ரமனியம்
பாடல் வரிகள்: பஞ்சு அருணாசலம்

காதலின் தீபம் ஒன்று
ஏற்றினாளே என் நெஞ்சில்
காதலின் தீபம் ஒன்று
ஏற்றினாளே என் நெஞ்சில்

ஊடலில் வந்த சொந்தம்
கூடலில் கண்ட இன்பம்
மயக்கம் என்ன... காதல் வாழ்க

(காதலின் தீபம் ஒன்று)

நேற்றுப்போல் இன்று இல்லை
இன்றுபோல் நாளை இல்லை ஒ
நேற்றுப்போல் இன்று இல்லை
இன்றுபோல் நாளை இல்லை
அன்பிலே வாழும் நெஞ்சில்

ஆ.... அ..... ஆ

அன்பிலே வாழும் நெஞ்சில்
ஆயிரம் பாடலே
ஒன்றுதான் எண்ணம் என்றால்
உறவுதான் காதலே!
எண்ணம் யாவும்.. சொல்லவா

(காதலின் தீபம் ஒன்று )

என்னை நான் தேடித் தேடி
உன்னிடம் கண்டுகொண்டேன்
என்னை நான் தேடித் தேடி
உன்னிடம் கண்டுகொண்டேன்

பொன்னிலே பூவை அள்ளும்
ஆ ஆ ஆ ஆ
புன்னகை மின்னுதே
பொன்னிலே பூவை அள்ளும்
புன்னகை மின்னுதே
கண்ணிலே காந்தம் வைத்த
கவிதையைப் பாடுதே
அன்பே இன்பம் சொல்..லவா

காதலின் தீபம் ஒன்று
ஏற்றினாலே என் நெஞ்சில்
ஊடலில் வந்த சொந்தம்
கூடலில் கண்ட இன்பம்
மயக்கம் என்ன... காதல் வாழ்க

காதலின் தீபம் ஒன்று
ஏற்றினாலே என் நெஞ்சில்




வசந்த், சுந்தர் இருவரும் அண்ணன் தம்பிகள். மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம், அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவர்களிடம் அவன், சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகின்றன. ஏதேனும் உணவு தாருங்கள்! என்று கெஞ்சினான். இரக்கப்பட்ட வசந்த் அவனுக்கு உணவு கொடுத்தான்.

இதைப் பார்த்த சுந்தர், அண்ணா! இப்படிப்பட்ட சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டக் கூடாது! என்று எரிச்சலுடன் சொன்னான். அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அங்கே வந்தான். அவனுக்கு வசந்த் உணவு கொடுத்தான். மீண்டும் இவன் இங்கே வந்து பிச்சை எடுக்கிறானே என்று கோபம் கொண்டான் சுந்தர்.

சோம்பேறிப் பயலே! அடுத்த முறை உன்னை இங்கே பார்த்தால் தொலைத்து விடுவேன்! என்று கத்தினான் சுந்தர். மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அங்கே வந்தான் அவன். கோபத்தால் துடித்த சுந்தர் அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான். அவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஏரிக்கரைக்கு வந்தான்.

இப்படிப் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்துகிறாயே? உனக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தருகிறேன். இந்தத் தூண்டிலை வைத்துப் பிழைத்துக் கொள்! என்றான். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்று கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றான். அதன் பிறகு அந்தப் பிச்சைக்காரன் அவர்கள் வீட்டிற்கு வருவதே இல்லை.

பல ஆண்டுகள் சென்றன. செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அங்கே வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. வசந்த்தும், சுந்தரும் அவரைப் பார்த்தனர். தங்கத் தூண்டிலை சுந்தரிடம் கொடுத்தார் அவர்.

என் அன்புப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள்! என்றார்.

தன் வீட்டிற்கு வந்த பிச்சைக்காரன்தான் அவன் என்பது வசந்த்துக்கு தெரிந்தது.

கோபத்தால் துடித்த அவன், நீ சாகப் பிழைக்க இங்கே வந்தாய். உனக்கு உணவு தந்து காப்பாற்றியவன் நான். எனக்குத்தான் இந்தத் தங்கத் தூண்டில் உரியது. என்னிடம் தா! என்று கத்தினான். ஆனால், அவரோ இது உங்கள் தம்பிக்குத்தான் உரியது! என்று உறுதியாகச் சொன்னார். இதை வசந்த் ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கை நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றான். நடந்ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி.

வசந்த்தைப் பார்த்து அவர், நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மைதான். நீ செய்த உதவி இவர் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழி காட்டினார். அதைப் பயன்படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்தார். நிலையான உதவி செய்த சுந்தருக்கு இவர் தூண்டிலைப் பரிசு அளித்தது சரியே. இந்தத் தங்கத் தூண்டில் சுந்தருக்கே உரியது. இதுவே என் தீர்ப்பு! என்றார்.

## இந்த வார குட்டீஸ்



பெயர்:- பிறநீத் (அறிஸ்)
பெற்றோர்:- சிவக்குமார், லோகேஸ்வரி
இடம் :- கேம்பிரி மேம்பிரிவு.



பெயர்:- கிஸ்னா
பெற்றோர்:- செல்வராஜசன், கலிஸ்ரா
இடம் :- கூமாங்குளம், வவுனியா.

உங்கள் செல்லங்களின் புகைப்படங்களும் இடம்பெற வேண்டுமானால் உங்கள் விபரங்களை உதயசூரியன், இந்த வார குட்டீஸ் என குறிப்பிட்டு எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள் அல்லது thinaupcountry@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். மேலதிக தொடர்புகளுக்கு 0112540695.

# ராணியின் கொடூரம்


*ஆபிரிக்காவிலுள்ள உகாண்டா நாட்டு ராணி நமலோலுக்கு தாங்க முடியாத பல்வலி. சூனியக்கார மருத்துவர்களிடம் ''பல்வலி தீர என்ன செய்யலாம்'' என்று ஆலோசனை கேட்டாள்.*

*மந்திரவாதிகளாகக் கருதப்படும் அவர்கள் கூறிய வைத்தியம் என்ன தெரியுமா? ''வுமா என்னும் மாகாணத்தில் வாழும் 25 ஆயிரம் குடிமக்களையும் கொன்றால் பல்வலி தீரும்'' என்றனர் அந்த மகா பாவிகள். அந்த மாகாணத்து மக்களிடம், இந்தப் பூசாரிகளுக்கு என்ன வெறுப்போ தெரியவில்லை.*

*ராணி நமலோல் யோசிக்கவில்லை. அவர்கள் கூறியபடி, அம் மாகாணத்திலுள்ள ஆண், பெண், குழந்தைகள் என 25 ஆயிரம் பேரை விக்டோரியா ஏரிக்கு விரட்டிச் சென்று, மூழ்கடித்துச் சாகடித்தாள். இந்தப் பயங்கர வைத்தியத்தினால், ராணியின் பல்வலி குணமாகவில்லை என்பதுதான் பரிதாபத்திலும் பரிதாபம்.*

## அட அப்படியா?

* ஆண்டுதோறும் பட்டம் பறக்கவிடும் திருவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடி வருகிறது ஜப்பான்.
* எலிகளைக் செல்லமாக வளர்ப்பவர்கள் அதிகம் உள்ள நாடு இங்கிலாந்து.



## சுறாத் தகவல்கள்

* சுறாமீனில் 150 வகை இனங்கள் உள்ளன.
* ஓரடி நீளத்திலிருந்து 70 அடி நீளம் வரை சுறாமீன்கள் உள்ளன.
* வெள்ளைச் சுறா மிகவும் கொடூரமான குணம் உடையது.
* வெள்ளைச் சுறா ஒரு மனிதனையே உணவாக உண்ணக்கூடியது.
* சுறாமீன்களுக்கு உடலில் எவ்வளவு காயங்கள் ஏற்பட்டாலும் சீழ் பிடிப்பதில்லை.
* கடலில் சுறாமீன்கள் தோன்றி 40 கோடி ஆண்டுகள் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.



26. நகரமய குறிகாட்டி கணிப்பது?

1. ஒவ்வொரு வருடமும் நகர சனத்தொகையின் பெருக்க அளவை வைத்து
2. நகரம் ஒன்றின் பிறப்பு எண்ணிக்கையில் இருந்து இறப்பைக் கழித்து
3. கிராம சனத் தொகையில் இருந்து நகர சனத்தொகையைக் கழித்து
4. குறித்த வருடம் ஒன்றின் மொத்த நகரக் குடித்தொகை அளவை அந்த ஆண்டு நடு ஆண்டு சனத்தொகையால் வகுத்து
5. குறித்த ஒரு ஆண்டுக்கான நகரப் பிறப்புக்களை வைத்து

27.
❖ ஹெபெய் இரும்பு மற்றும் எஃகு
❖ பாவ் எஃகு குழு
❖ சாங்டாங் இரும்பு மற்றும் எஃகு
❖ ஜியாங்சு

மேலே தரப்பட்ட நிறுவனங்கள் எந்த நாட்டின் இரும்புக் கைத்தொழில் நிறுவனங்களாகும்?

1. ஜப்பான் 2. சீனா 3. இந்தியா
4. ரஷ்யா 5. கனடா

28. கீழே தரப்பட்ட படத்தில் A, B ஆகிய ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் இரும்புத் தாது வயல்கள் எவை?




1. A - றொக்ஸ்பி, B - பில்பறா
2. A - பேமிங்காம், B - பிற்ஸ்பேர்க்
3. A - லொறெயின், B - கிருணா
4. A - இலினோய், B - அல்பேட்டா
5. A - சென்சி, B - சான்சி

29. இலங்கையின் கற்பிட்டி, மிரிஸ்ஸ, தங்காலை, பேசாலை என்பன எவ்வகைக் குடியிருப்புக்களாகும்?

1. வரலாற்றுக் குடியிருப்பு 2. மீனவக் குடியிருப்பு
3. துறைமுகக் குடியிருப்பு 4. தோட்டக் குடியிருப்பு
5. சந்தைக் குடியிருப்பு

30. கீழே தரப்பட்ட படத்தில் ஆங்கில எழுத்துக்கள் x, y, z என்பன குறிக்கும் நீரோட்டங்களைச் சரியாகத் தரும் விடை எது?




1. x - பெரிங் நீரோட்டம், y - வட பசுபிக் நீரோட்டம், z - கலிபோர்ணியா நீரோட்டம்
2. x - குறைல் நீரோட்டம், y - குரோசிவோ நீரோட்டம், z - வட மத்திய கோட்டு நீரோட்டம்
3. x - குரோசிவோ நீரோட்டம், y - கனேரிஸ் நீரோட்டம், z - பெங்குவெலா நீரோட்டம்
4. x - பிறேசில் நீரோட்டம், y - லப்ரடோர் நீரோட்டம், z - குறைல் நீரோட்டம்
5. x - கலிபோர்ணியா நீரோட்டம், y - குறைல் நீரோட்டம், z - பெரிங் நீரோட்டம்

(முற்றும்.)

கல்விக்குரல் – 02 பாடம் :– புவியியல் – I இற்கான விடைகள் முடிவுத்திகதி – 30.01.2013

மாணவர் முழுப்பெயர் – .................................... கல்வி கற்கும் பாடசாலை – ....................................

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 2 | 3 | 4 | 5 | 11. | 1 | 2 | 3 | 4 | 5 | 21. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 2. | 1 | 2 | 3 | 4 | 5 | 12. | 1 | 2 | 3 | 4 | 5 | 22. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 3. | 1 | 2 | 3 | 4 | 5 | 13. | 1 | 2 | 3 | 4 | 5 | 23. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 4. | 1 | 2 | 3 | 4 | 5 | 14. | 1 | 2 | 3 | 4 | 5 | 24. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 5. | 1 | 2 | 3 | 4 | 5 | 15. | 1 | 2 | 3 | 4 | 5 | 25. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6. | 1 | 2 | 3 | 4 | 5 | 16. | 1 | 2 | 3 | 4 | 5 | 26. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 7. | 1 | 2 | 3 | 4 | 5 | 17. | 1 | 2 | 3 | 4 | 5 | 27. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 8. | 1 | 2 | 3 | 4 | 5 | 18. | 1 | 2 | 3 | 4 | 5 | 28. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 9. | 1 | 2 | 3 | 4 | 5 | 19. | 1 | 2 | 3 | 4 | 5 | 29. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 10. | 1 | 2 | 3 | 4 | 5 | 20. | 1 | 2 | 3 | 4 | 5 | 30. | 1 | 2 | 3 | 4 | 5 |

வேறுபாட்டிற்கு காரணமாக அமையும்.

(1) ரூ 45 000 க்கான கடன் விற்பனைப் பட்டியலொன்று கொடுப்பனவு ஏட்டில் இரு தடைவை பதிவு செய்யப்பட்டிருந்தது.

(2) அனுமதிக்கப்பட்ட கழிவு ரூ 45 000 பெறப்பட்டகழிவாக கணக்கில் கொள்ளப்பட்டிருந்தது

(3) வங்கி மேலதிகப் பற்று ரூ 90 000 பரீட்சை மீதியில் தவறவிடப்பட்டுள்ளது

(4) கடன் கொள்வனவு விலைப்பட்டியல் ரூ 90 000 முதன்மை ஏடுகளில் கடன் விற்பனை விலைப் பட்டியலாக கணக்கில் கொள்ளப்பட்டிருந்தது.

(5) வங்கி மேலதிகப் பற்று ரூ 45 000 பரீட்சை மீதியில் தவறவிடப்பட்டுள்ளது

17. கம்பனியொன்றின் 2012 மார்ச் 31ந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு தேறிய இலாபமாக ரூ 530 000 இனைக் காட்டியது. 2011 டிசம்பர் 01ஆந் திகதி கம்பனியானது எந்திர மொன்றினை ரூபா 200 000க்கு கொள்வனவு செய்ததுடன் இது தவறுதலாக எந்திர திருத்தச் செலவாக தாக்கல் செய்யப்பட்டிருந்தது. கம்பனி இந்த எந்திரத்தினை ஆண்டிற்கு 20% விகிதத்தில் தேய்மானம் செய்கின்றது. மேற்படி விடயங்களுக்காக செம்மையாக்கம் செய்யப்பட்ட பின்னர் நிகர இலாபம்,

(1) ரூ. 716 667 இலாபம் (2) ரூ. 690 000 இலாபம்
(3) ரூ. 730 000 இலாபம் (4) ரூ. 516 000 இலாபம்
(5) மேற்கூறிய எவையுமல்ல.

18. A மற்றும் B இலாபத்தை 2 : 3 விகிதத்தில் பகிர்ந்தார்கள். 1.1.2012 இல் அவர்கள் இலாபப் பகிர்வை சமனாக்க தீர்மானித்தார்கள். அப்போது நன்மதிப்பு ரூபா 25 000 பெறுமதியாக மதிப்பிடப்பட்டது. கணக்கேட்டில் நன்மதிப்பிடப்பட்டது. கணக்கேட்டில் நன்மதிப்புக் கணக்கொன்று இல்லை. தொடர்ந்தும் வைத்திருப்பது நோக்கமல்ல.

கணக்கேட்டில் அப்படியான மதிப்பீடுகளுக்கான பதிவுகளாவன.

| | | |
|---|---|---|
| (1) மூலதனக் க/கு A | 12 500 | |
| மூலதனக் க/கு B | | 12 500 |
| மூலதனக் க/கு A | | 10 000 |
| (2) நடப்புக் க/கு A | 12 500 | |
| நடப்புக் க/கு A | 12 500 | |
| நடப்புக் க/கு A | | 10 000 |
| நடப்புக் க/கு B | | 15 000 |
| (3) நடப்புக் க/கு A | 12 500 | |
| நடப்புக் க/கு B | 12 500 | |
| நடப்புக் க/கு A | | 10 000 |
| நடப்புக் க/கு B | | 15 000 |
| (4) நடப்புக் க/கு A | 12 500 | |
| நடப்புக் க/கு B | 12 500 | |
| நடப்புக் க/கு A | | 10 000 |
| நடப்புக் க/கு B | | 15 000 |

(5) மேற்கூறிய ஏதுமல்ல

19. பிமாலும், கமலும் ஒரு பங்குடமையில் உள்ளனர். 2011 ஆம் ஆண்டில் மொத்தலாபம் ரூ. 386 000. மேலதிகத் தகவல்கள் வருமாறு

| | | ரூ. |
|---|---|---|
| வியாபாரச் செலவுகள் | | 120 000 |
| பிமாலுக்கு கொடுபட வேண்டிய வாடகை | | 60 000 |
| சம்பளம் - | பிமால் | 24 000 |
| - | கமல் | 18 000 |
| மூலதன வட்டி - | பிமால் | 20 000 |
| - | கமல் | 15 000 |
| கடன் வட்டி - | பிமால் | 15 000 |
| - | கமல் | 6 000 |

பகிர்வுக்கான இலாபம்,

(1) ரூ. 386 000 (2) ரூ. 200 000 (3) ரூ. 123 000
(4) ரூ. 108 000 (5) ரூ. 126 000

20. சர்மா நிறுவனத்தின் கணக்கீட்டு ஆவணங்கள் தீயால் அழிவடைந்தது. இருப்பினும் பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன :

| | ரூ. |
|---|---|
| விற்பனை | 630 000 |
| ஆரம்பயிருப்பு | 24 300 |
| இறுதியிருப்பு | 32 750 |
| ஆரம்பக் கடன்கொடுத்தோர் | 29 780 |
| இறுதிக் கடன்கொடுத்தோர் | 34 600 |

மொத்தலாபம் 40% ஆகும்.

கடன்கொடுத்தோருக்குக் கொடுத்த காசு?

(1) ரூ. 463 270 (2) ரூ. 381 630 (3) ரூ. 391 270
(4) ரூ. 453 630 (5) ரூ. 436 700

21. சக்தி விளையாட்டுக் கழகம் அங்கத்தவர்களிடமிருந்து வருடாந்த அங்கத்துவக் கட்டணமாக ரூ. 15 000 இனை அறவிடுகிறது.

ஆண்டின் ஆரம்பத்தில் 20 அங்கத்தவர்களின் சந்தா நிலுவையில் இருந்து ஆண்டின்போது பெறப்பட்ட சந்தாப் பணம் ரூ. 4 500 000 ஆகும். இத் தொகை 15 புதிய அங்கத்தவர்களிடமிருந்து பெற்ற சந்தாப் பணத்தினையும் சந்தா நிலுவையாகவிருந்த 12 அங்கதவர்களிடமிருந்து பெற்ற சந்தாப் பணத்தினையும் உள்ளடக்குகின்றது. ஆண்டின் இறுதியில் 18 அங்கத்தவர்களின் சந்தாப் பணம் நிலுவையிலிருந்தது.

கழகம் சந்தா வருமானத்தினை அட்டுறு அடிப்படையில் கணக்கில் கொள்ளும். ஆண்டிற்கான வருமானம் செலவுக் கூற்றில் சந்தா வருமானம் யாது?

(1) ரூ. 4 590 000 (2) ரூ. 4 365 000 (3) ரூ. 4 770 000
(4) ரூ. 4 320 000 (5)ரூ. 4 310 000

22. கீழே நான்கு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.

(i) வருமானக் கூற்றுக்கள் தரப்பட்ட திகதியொன்றில் வியாபாரமொன்றின் நிதிச் சாதனைகளைக் காட்டுகின்றன.

(ii) காசுப் பாய்வுக் கூற்றானது தரப்பட்ட காலமொன்றினுள் காசும் காசுச் சமனானவை எவ்வாறு பிறப்பாக்கப்பட்டவை என்றும் அவை எவ்வாறு பகிரப்பட்டவை என்றும் விபரிக்கின்றது

(iii) நிதி நிலைக் கூற்று எப்போதும் வியாபாரமொன்று தொடர்ந்து இயங்கும் தாபனம் என்பதனைக் காட்டுகின்றது

(iv) நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் உபயோகிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கையின் வெளிக்காட்டலானது நிதிக்கூற்றுக்களில் ஒப்பிடத்தக்க தன்மை மற்றும் விளங்கிக் கொள்ளற் தன்மையினை வெளிக்காட்டுகின்றது.

மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களில்

(1) எல்லாமே சரியானவை

(2) (ii), (iv) மற்றும் சரியானவை (i) மற்றும் (iii) தவறானவை

(3) (i), (ii) மற்றும் (iv) சரியானவை (iii) தவறானவை

(4) (ii), (iii) மற்றும் (iv) சரியானவை (i) தவறானவை

(5) மேற்கூறிய எவையுமல்ல

23. 2011.04.01 இல் ஆரம்பிக்கப்பட்ட சம்பத் கம்பனியொன்று 2012.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் ரூ 500 000 என அறியத் தருகிறது 2012.03.31 இலுள்ள மொத்தச் சொத்துக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது இத்தினத்தில் எதுவித பொறுப்புக்களும் இருக்கவில்லை.

| | | ரூ. |
|---|---|---|
| உபகரணங்கள் (கிரயம் ரூ 1 280 000) | - | 1 200 000 |
| சரக்கிருப்பு | - | 400 000 |
| காசு | - | 790 000 |

2012.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் எது?

(1) ரூ. 20 000 (2) ரூ. 100 000 (3) ரூ. 180 000
(4) ரூ. 500 000 (5) மேற்கூறிய எவையுமல்ல

24. பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(1) எல்லா மாறும் கிரயங்களும் நேர் உற்பத்திக் கிரயங்களாகும்

(2) நேரில் ஊழியக் கிரயமானது எப்பொழுதும் உற்பத்திக் கிரயத்தின் ஒரு பகுதியாகும்.

(3) எல்லா மேந்தலைக் கிரயங்களும் இலாப நட்டக் கணக்கில் இடப்படுகின்றன.

(4) உற்பத்திக் கிரயங்களானது மேந்தலை கிரயங்களை உள்ளடக்குவதில்லை.

(5) எல்லா நேர்க் கிரயங்களும் மாறும் கிரயங்கள் அல்ல.

25. பொருளொன்றின் உற்பத்தி அலகுகளின் அளவும் அலகிற்கான கிரயமும் இரு சந்தர்ப்பங்களில் பின்வருமாறு தரப்படுகிறது.

| சந்தர்ப்பம் | உற்பத்தி அலகுகள் | அலகிற்கான கிரயம் (ரூ.) |
|---|---|---|
| 1 | 1 000 | 50 |
| 2 | 1 500 | 40 |

மொத்த நிலையான கிரயத்தின் பெறுமதி?

(1) ரூ. 5 000 (2) ரூ. 20 000 (3) ரூ. 30 000
(4) ரூ. 50 000 (5) ரூ. 60 600

26. உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலப் பொருள் தொடர்பான தகவல்கள் வருமாறு :

- மாதாந்த நுகர்வு (அலகுகள்) 500
- அலகொன்றின் கிரயம் 20
- ஒரு கட்டளைக் கிரயம் 40
- அலகொன்றின் வருடாந்த பராமரிப்புக் கிரயம், அலகொன்றின் கிரயத்தில் 10%.

மேற்கூறிய தகவலின் அடிப்படையில் பொருளாதாரக் கட்டளைத் தொகையயும் (EOQ), கட்டளைகளின் எண்ணிக்கையையும் காட்டும் தொகுதி.

| | கட்டளைத் தொகையை (EOQ) | கட்டளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | 283 | 12 |
| (2) | 300 | 20 |
| (3) | 300 | 40 |
| (4) | 400 | 12 |
| (5) | 489 | 12 |

**27 ஆம், 28 வினாக்களுக்கு விடையளிக்கும் போது கீழே தரப்பட்ட தகலவல்களைப் பயன்படுத்துக.**

நேர் மூலப் பொருள் கிரயம் ரூ. 500
நேர்க் கூலிக் கிரயம் ரூ. 300

2 உற்பத்தித் திணைக்களங்களும், களஞ்சியசாலை எனும் சேவைத் திணைக்களமும் உண்டு.

| திணைக்களம் | நேர் கூலிக்கிரயம் | நேரில் மூலப்பொருள் கிரயம் | இடப்பரப்பு (ச. மீற்றர்) | ஊழியர் எண்ணிக்கை | நேர் கூலி (மணி) |
|---|---|---|---|---|---|
| A | ரூ. 100 000 | 100 000 | 10 000 | 3 | 1470 |
| B | 90 000 | 100 000 | 25 000 | 2 | 3400 |
| களஞ்சியப்படுத்தல் | 10 000 | 14 000 | 5000 | 1 | - |

தொழிற்சாலை வாடகை ரூ. 160 000, ஊழியர் நலன்புரிச் செலவு ரூ. 60 000

அலகொன்று உற்பத்தி முடிவுறுத்தலுக்கு A திணைக்களத்தில் 01 மணித்தியாலமும், B திணைக்களத்தில் 03 மணித்தியாலங்களும் பயன்படுத்தப்படுகிறது.

விநியோகிக்கப்பட்ட களஞ்சிய வேண்டுதல் பத்திர எண்ணிக்கை A திணைக்களத்திற்கு 4 000, B திணைக்களத்திற்கு 5 000.

நேர்கூலி மணி அடிப்படையில் உற்பத்தித் திணைக்களத்தில் உறிஞ்சப்படும்.

27. A, B திணைக்களத்தின் மொத்த மேந்தலைக் கிரயம்,

(1) ரூ. 240 000, ரூ. 280 000 (2) ரூ. 246 000, ரூ. 280 000
(3) ரூ. 264 000, ரூ. 310 000 (4) ரூ. 270 000, ரூ. 310 000
(5) ரூ. 294 000, ரூ. 340 000

28. உற்பத்தி அலகொன்றின் கிரயம்,

(1) ரூ. 800 (2) ரூ. 1 000 (3) ரூ. 1 100 (4) ரூ. 1 300 (5) ரூ. 1 700

29. ஒரு செயற்றிட்டத்திலிருந்து எழும் பின்வரும் காசுப்பாய்ச்சல்களில் எது தேறிய நிகழ்கால பெறுமதி முறையின் அடிப்படையில் மதிப் பிடப்படும் தேறிய காசுப் பாய்ச்சலினை கணிப்பதுடன் தொடர்பற்றதாக இருக்கும்?

(1) வருமானம் (2) வட்டிச் செலவுகள் (3) செலவுகள்
(4) தொழிற்படு மூலதனம் (5) ஆரம்ப முதலீடு

30. ஒரு நிறுவனத்தின் நடைமுறைச் சொத்து விகிதமானது அதன் விரைவு விகிதத்தின் இருமடங்காக இருக்கும்போது பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(1) நடைமுறைச் சொத்தானது நடைமுறைப் பொறுப்புகளின் அரைவாசிக்குச் சமன்.

(2) சரக்கிருப்பு நீங்கலான நடைமுறைச் சொத்துக்கள் சரக்கிருப்பின் இரண்டு மடங்காகும்.

(3) சரக்கிருப்பானது நடைமுறைச் சொத்துக்களின் அரைவாசிக்குச் சமன்.

(4) நடைமுறைப் பொறுப்புகளானது நடைமுறைச் சொத்துக்களின் இரண்டு மடங்காகும்.

(5) மேற்கூறிய எவையுமல்ல

**31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

31. இப்பால் நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்கள் இரண்டு கணக்கீட்டு சமன்பாட்டின் மூலம் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| கொடுக்கல் வாங்கல் | வருமானம் | செலவுகள் | பொறுப்பு | சொத்து |
|---|---|---|---|---|
| (அ) | + 4 000 | | + 2 000 | + 6 000 |
| (ஆ) | +40 000 | | | + 5 000<br>- 45 000 |

மேற்படி ஒவ்வொன்றினதும் தாக்கத்திற்கான பொருத்தமான கொடுக்கல்வாங்கலினையும் தந்து அவற்றிற்கான இரட்டைப்பதிவுகளைத் தருக.


(அ)
..........................................................................................

(ஆ)
..........................................................................................


32. கவிதா வியாபாரத்தின் மாதமொன்றிற்கான சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதி ரூ. 6 000 மாகும். நான்கு கால்லாண்டுகளுக்கான சில்லறைக் காசு கொடுக்கல்வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு |
|---|---|---|---|---|
| மீதி வந்தது | 3000 | (1) ................ | 5000 | (2) ................ |
| பெற்ற காசு | 3000 | 2000 | (3) ............. | 4300 |
| கைச்சாத்து | 2000 | 1000 | 4300 | 2440 |

33.




34. ஒவ்வொரு படத்திற்கும் உதாரணம் தருக.




(அ) ..........................................................................................

(ஆ) ..........................................................................................

(இ) ..........................................................................................

35. வேலை செய்யும் நேரத்தைக் கணிப்பிடும் ஆவணங்கள் 3 தருக.

..........................................................................................

36. ஒரு வருட இறுதியில் 10% கழிவீட்டு வீதத்தில் ரூபா 11 100 இற்கான நிகழ்காலப் பெறுமதி?

..........................................................................................

37. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| ஆண்டு | காசப் பாய்ச்சல் (ரூ) | கழிவுக் காரணி 10% | இற்றைப் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|
| 0 | (100 000) | (1) ............. | (100 000) |
| 1 | 20 000 | 0.909 | (2) ................ |
| 2 | 30 000 | (3) .............. | 24 780 |
| 3 | 70 000 | 0.751 | (4) ................ |

இச் செயற்றிட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியுமா?

..........................................................................................

38. வரையறுக்கப்பட்ட காதர் கம்பனி இயக்குனர் சபையானது ஒதுக்கங்களை மூலதனமாக்க விரும்புகின்றது. ஒதுக்கங்களை மூலதனமாக்குவதால் பங்குதாரர்களுக்கான அனுகூலங்கள் 2 தருக.

(1) ........................................... (2)..........................................

39. இலாபம் காசிலிருந்து வேறுபட்டது உதாரணம் தருக.

..........................................................................................

40. இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக (LKAS - 1) நடைமுறைச் சொத்து?

..........................................................................................

41. பாத்திமாக் கம்பனி பின்வரும் தகவல்களை வழங்கியுள்ளது.

விற்பனைகள் ரூ. 3 600 000

சராசரி கையிருப்பு ரூ. 600 000

கையிருப்புப் புரள்வு விகிதம் 4 தடவைகள்

செலவுகள் ரூ. 300 000

வருமான வரி ரூ. 90 000

10% தொகுதிக் கடன்கள் ரூ. 50 000

மொத்த நிதியிடல் ரூ. 2 000 000

கம்பனியின் பின்வரும் கணக்கீட்டு விகிதங்கள் யாது?

(அ) மொத்தலாப வீதம்

..........................................................................................

(ஆ) தேறியலாப வீதம்

..........................................................................................

(இ) மொத்த சொத்து மீதான வருவாய் வீதம்

..........................................................................................

42. தனபாலன் கம்பனியின் பொருள் இலக்கம் 202 இன் உற்பத்தி தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

மறுகட்டளையிடும் மட்டம் 30 000 அலகுகள்

சிக்கனக் கட்டளைத் தொகை 40 000 அலகுகள்

மறுகட்டளைக் காலம் - 4 முதல் 2 வாரங்கள்

வாரமொன்றிற்கு உற்பத்தி செய்யப்படும் அலகுகள் 600 தொடக்கம் 1 000 வரை காணப்படும்.

இழிவு மட்டம் யாது?

..........................................................................................

43. சண் கம்பனி மேந்தலைகளை உறிஞ்சுவதற்கு இயந்திர மணித்தியால வீதத்தைப் பயன்படுத்துகின்றது. மதிப்பீடு செய்யப்பட்ட இயந்திர மணித்தியாலயங்கள், மேந்தலைகள் முறையே 30 000, ரூ 600 000 ஆகும். இவ் இயந்திரமானது 40 000 மணித்தியாலயங்கள் வேலை செய்துள்ளது. உண்மையாக ஏற்பட்ட உற்பத்தி மேந்தலைகள் ரூ 720 000 ஆகும். மிகை (குறை) மேந்தலை உறிஞ்சுதல் யாது?

..........................................................................................

44. உற்பத்தி மேந்தலைகள் நேர் ஊழிய மணித்தியால அடிப்படையில் உறிஞ்சப்பட்டிருப்பின் பின்வரும் தகவல்களின்படி எல்லா உற்பத்திப் பொருட்களாலும் உறிஞ்சப்படும் மொத்த மேந்தலை எது?

| | மொத்த மேந்தலைகள் (ரூ.) | நேர் ஊழியம் (மணித்தியாலங்கள்) |
|---|---|---|
| மதிப்பிடப்பட்டது | 1 200 000 | 60 000 |
| உண்மையானது | 1 080 000 | 40 000 |

..........................................................................................

45. கிரயம் - தொகை - இலாபம் (CVP) ஆய்வில் பங்களிப்பு எனப்படுவது எவைகளுக்கிடையிலான வேறுபாடு?

..........................................................................................

46. உற்பத்தியானது 16 000 அலகுகள் 40 000 அலகுகளாக உள்ளபோது ஒரு கம்பனியின் மொத்த உற்பத்திக் கிரயங்களானது முறையே ரூ. 100 000, ரூ. 230 000 ஆக இருந்தது. உற்பத்தியானது 20 000 அலகுகளிற்கு மேல் அதிகரிக்கும்போது மேலதிக நிலையான கிரயமாக ரூ. 10 000 தேவைப்படுகிறது. 30 000 அலகுகளை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் மொத்த உற்பத்திக் கிரயம் யாது?

..........................................................................................

47. வேலையாட்களிற்குச் சம்பளம் கொடுத்தது தொடர்பில் பின்வருவனவற்றுள் எதனை நேர்க் கூலியாக வகைப்படுத்த முடியும்?

(A) தொழிற்சாலையொன்றில் கணினி பொருத்தும் வேலையில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்

(B) தொழிற்சாலை ஒன்றின் களஞ்சியத்தில் வேலை செய்யும் களஞ்சிய உதவியாளர்.

(C) கட்டுமானக் கம்பனி ஒன்றின் கட்டடத் தொழில் வேலையாட்கள்

(D) சட்டத்தரணிகள் நிறுவனமொன்றில் வேலை செய்யும் கணக்காய்வு உதவியாளர்.

(E) பேக்கரி ஒன்றின் முகாமையாளர்.

..........................................................................................

48. ஒரு கம்பனி இருப்புச் சூத்திரத்திற்கு 'தெளிவாக அடையாளம் காணும் கிரய முறை யினைப் பின்பற்றுகிறது. குறித்த ஒரு மாதத்திற்கான பின்வரும் தகவல்களை அக்கம்பனி தந்துள்ளது.

| விபரம் | மாதிரி | விமானங்களின் எண்ணிக்கை | விமானம் ஒன்றின் கிரயம் ரூ (000) | விமானம் ஒன்றிற்கான விற்பனை விலை ரூ (000) |
|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 001 | 1 | 1600 | |
| | 002 | 3 | 2000 | |
| கொள்வனவு | 004 | 4 | 2400 | |
| விற்பனைகள் | 001 | 1 | | 2100 |
| | 002 | 1 | | 2500 |
| | 004 | 3 | | 3000 |

விற்பனை செய்யப்பட்ட விமானங்களின் கிரயம் யாது?

..........................................................................................

49. சிக்கனக் கட்டளைத் தொகை மாதிரிக்கான எடுகோளாக இல்லாதது பின்வருவனவற்றில் எது?

(அ) மொத்தக் கட்டளையிடும் கிரயமானது கட்டளையிடும் எண்ணிக்கையுடன் நேரடியாக மாறுபடும்.

(ஆ) மொத்த இருப்பு வைத்தற் கிரயமானது சராசரி சரக்கிருப்பு மட்டத்துடன் நேரடியாக மாறுபடும்.

(இ) கேள்வி ஏற்கனவே தெரிந்ததாகவும் நுகர்வானது சமச்சீராக காலம் பூராகவும் இடம்பெறுவதாகவும் இருக்கும்.

(ஈ) சரக்கிருப்பானது இழிவு கட்டளை மட்டத்தினை அடைந்ததும் அது உடனடியாக மீள்நிரப்பப்படும்

(உ) கட்டளையிடும்போது கழிவுகள் அனுமதிக்கப்படும்

..........................................................................................

50. கிரயங்களை திரட்டுதல், ஒதுக்குதல், கட்டுப்படுத்தல் ஆகியன தொடர்பான கணக்கீட்டு தொழிற்பாடு எதனால் கண்டறியப்படும்?

..........................................................................................

தொடர்புகளுக்கு :- T. பரமேஸ்வரன் (தொ. பே - 0772246762)




# முத்துசிவலிங்கத்தின் அந்தர் பல்டி!

திவிநெகும சட்டமூலம், சிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான குற்றப் பிரேரணை விடயங்களில் மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் தொடர்பாக கடந்த வாரம் வெளியிட்டிருந்தோம். அந்த வகையில் திவிநெகும சட்டமூல விவாதத்தின் போது உரையாற்றிய பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம் இ.தொ.கா. திவிநெகும சட்டமூலத்தை ஆதரிப்பதாக கூறியதோடு சில சர்ச்சையான விடயங்களையும் தெரிவித்தார்.

அவர் ஆற்றிய உரையின் சுருக்கத்தை இங்கு தருகின்றோம்.

திவிநெகும சட்டமூலமானது எமது நாட்டில் வறுமையை ஒழிப்பதற்காக கொண்டுவரப்பட்டுள்ளது. இச் சட்டத்தில் முதன் முறையாக பெருந்தோட்டங்களும், தோட்டப்புறங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் குடும்பங்களையும் உள்ளடக்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது என்பதோடு எமது அமைச்சர் பஷில் ராஜபக்ஷ அவர்களை பாராட்டுகின்றேன். இதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட பிரதேச சபை, மாகாண சபை அமைப்புகள் மூலம் தோட்டப்புறங்களுக்கு பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சமூர்த்தி உத்தியோகத்தர் நியமனத்தில் கூட கிள்ளிப் போட்டதாக 200 பேர்தான் எம்மவர்கள் நியமனம் பெற்றனர்.

ஜனசவிய சட்டம் இங்கு (மலையகம்) இருந்ததாகக் கூறினார்கள். இத்திட்டம் பல ஆண்டுகள் நடைமுறையில் இருந்தது. இதனால் தோட்டப்புறங்களில் மூன்று பாலங்கள் மட்டுமே அமைக்கப்பட்டன.

நாங்கள் இச் சட்டமூலத்தை எதிர்க்க வேண்டுமென்று சிலர் கூறுகின்றார்கள். ஏன் என்றால் இச் சட்டமூலத்தின் மூலம் மாகாணசபை அதிகாரம் ஒழிக்கப்படுமாம். தோட்டப்புறங்களைப் பொறுத்தமட்டில் மாகாண சபையோ, பிரதேச சபையோ அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு எந்த வகையில் பிரயோசனமாக இருக்கின்றது என்பது எனக்கு தெரியவில்லை.

நாங்கள் இன்று பிரதேச சபை, மாகாண சபை என்பவற்றுடன் தொடர்பு கொள்வதைவிட மத்திய அரசாங்கத்துடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தி எமது மக்களுக்கு உதவி செய்யக்கூடிய சக்தி படைத்தவர்களாக இருக்கின்றோம். எனவே இச்சட்ட மூலத்தை ஆதரிக்கிறோம் என தமது கருத்துகளால் மஹிந்த அரசிற்கு பாமாலையாக சூட்டினார்.

> திவிநெகும சட்டத்தில் தோட்ட மக்கள் உள்ளீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த முத்துசிவலிங்கம் அதன் மூலம் தோட்ட மக்கள் எவ்வாறான சலுகைகளை, அபிவிருத்திகளை அனுபவிக்க முடியும் என்பதை அம்பலப்படுத்த வேண்டும்

பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் ஆற்றிய உரைஅவரது கட்சியைச் சேர்ந்த மாகாண, பிரதேச சபை உறுப்பினர்களையே முகம் சுளிக்க வைத்திருக்கிறது.

மத்திய, ஊவா மாகாண சபைகளில் தலா ஒரு அமைச்சரையும் பல மாகாண, பிரதேச உறுப்பினர்களையும் கொண்டுள்ள இ.தொ.கா. பிரதேச, மாகாண சபையால் எவ்வித பிரயோசனமும் இல்லை என்பது கேலிக்கூத்தாக இருக்கின்றது. தாம் இப்போது அரசாங்கத்துடன் இருப்பதால் அரச விசுவாசத்திற்காக தான் தோன்றித்தனமாக கருத்து தெரிவித்திருக்கும் முத்துசிவலிங்கத்தின் கருத்தை வன்மையாகக் கண்டிப்பதாக ஐ.தே.க.வின் மத்திய மாகாண சபை உறுப்பினர் இராஜரட்ணம் தெரிவித்தார்;

15-20 வருடங்களாக இருந்த ஜனசவிய சட்டத்தால் மலையகத்தில் மூன்று பாலங்களைத் தவிர வேறெந்த நன்மையும் பெறமுடியவில்லை எனும் சிவலிங்கத்தின் கருத்தை எந்த வகையில் ஏற்பது? ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவால் கொண்டுவரப்பட்டதே ஜனசவிய. இ.தொ.கா. வழமைபோல அக்காலத்தில் ஐ.தே.க. உடனே கைகோர்த்து மலையக மக்களுக்கு சேவை செய்தது. (?) வெறும் மூன்று பாலங்களை (பன்விலை, டிக்கோயா, போட்ரிக் தோட்டம், கலாபோக்கு) தவிர வேறெந்த சேவையையும் ஐ.தே.கா. செய்யவில்லையாயின் ஆட்சியில் பங்காளியாக இருந்த இ.தொ.கா. ஏன் மௌனமாக இருந்தது எனும் கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே. அப்போது மௌனமாக இருந்துவிட்டு தற்போது விமர்சிப்பது எந்த வகையில் நியாயமானது ?

பிரதேச சபை அதிகாரத்திற்குள் தோட்டங்கள் இன்னும் உள்ளீக்கப்படாமையால் தோட்ட மக்கள் பூரணமாக பிரதேச சபையின் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பது தலைவர்கள் அறியாத விடயமல்ல. பாராளுமன்றத்தில் முக்கிய பிரதி அமைச்சுப் பதவியை வகிக்கும் முத்துசிவலிங்கம் உட்பட மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு ஒரு தீர்வை பெற முயற்சிக்காது ஏன்?

ராம், ரமேஷ், அனுஷியா சிவராஜா, கணபதி கனகராஜ், உதயகுமார், செந்தில் தொண்டமான் ஆகியோர் மாகாண சபைகளில் அங்கத்துவம் வகிக்கும் இ.தொ.கா.வின் உறுப்பினர்கள். மாகாண சபைகளில் பிரயோசனம் இல்லையென முத்துசிவலிங்கம் கூறுவதின் மூலம் இவர்களின் சேவைகள் கேள்விக்குட்படுத்தப்படுவதையும் மக்களுக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் என்பதையும் பிரதியமைச்சர் ஏனோ மறந்து போய்விட்டார் போலும்.

நாங்கள் இன்று பிரதேச சபை, மாகாண சபை என்பவற்றுடன் தொடர்பு கொள்வதை விட மத்திய அரசாங்கத்துடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி எமது மக்களுக்கு உதவி செய்வோம் எனும் கருத்தின் மூலம் மாகாண சபை, பிரதேசசபை உறுப்பினர்கள் வெறும் பொம்மைகள் எனும் பாணியிலேயே அக் கருத்துகள் அமைந்துள்ளது என்பதை உரிய தரப்புகள் புரிந்து கொண்டால் நல்லது.

திவிநெகும சட்டத்தில் தோட்ட மக்கள் உள்ளீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த முத்துசிவலிங்கம் அதன் மூலம் தோட்ட மக்கள் எவ்வாறான சலுகைகளை, அபிவிருத்திகளை அனுபவிக்க முடியும் என்பதை அம்பலப்படுத்தவில்லை. தற்போது 107 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ள திவிநெகும சட்ட மூலத்தில் தோட்ட மக்களுக்கு என்னென்ன சலுகைகளை அனுபவிக்க முடியும் என்பதை பிரதியமைச்சர் சிவலிங்கம் தெரியப்படுத்த வேண்டும்.

ஜனசவிய திட்டத்தால் மூன்று பாலங்களை தவிர மலையக மக்கள் வேறெந்த நன்மைகளையும் பெறவில்லை என்று கூறியது போல திவிநெகும சட்டத்தால் மலையக மக்கள் எவ்வித நன்மைகளையும் பெறவில்லை என்று கூறுவதற்கு அதிக காலம் செல்லாது என்பது என்ன நிச்சயம்?

எனவே திவிநெகும சட்டத்தில் உள்ள சலுகைகளை பொருளாதார பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவிக்க வேண்டும் என்பது எமது அபிப்பிராயம்.

(பிரயோசனமற்ற) மாகாணசபைத் தேர்தல் வர இருக்கும் நிலையில் இ.தொ.கா. எவ்வாறான கருத்துகளைக் கூறி வாக்குக் கேட்கும் எனும் வினாவை முத்து சிவலிங்கத்திடம் முன்வைக்க விரும்புகின்றோம்.

எம்.நாசன்

# எல்லாமே ஒரு கனவு மாதிரி இருக்கு

ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவோடு நடத்தப்பட்ட சக்தியின் ஜூனியர் சுப்பர் ஸ்டார் போட்டியில் செல்லக் குரலோனாக மகுடம் சூடி 5 இலட்சம் ரூபா பணப்பரிசில், சென்னைக்கு சுற்றுலா, குவியும் பாராட்டுகள் என மகிழ்ச்சியின் எல்லையில் திக்குமுக்காடிப் போயிருக்கிறார் பிரகாஷ்.

எல்லாமே ஒரு கனவு மாதிரி இருக்கு. என் மகன் திறமைசாலிங்கிறது எனக்குத் தெரியும். ஆனால் எல்லா சுற்றுக்களிலும் ஜெயித்து மகுடத்தை சூடிக்கொள்வான் என்று ஆரம்பத்தில் நினைக்கவில்லை. இப்போது கிடைக்கிற பாராட்டுகள், பரிசில்கள் ரொம்பப் பெருமையா இருக்கு என்று மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு சொல்கிறார் பிரகாஷின் தாய் சித்ராதேவி.

சக்தி ஜூனியர் சுப்பர் ஸ்டார் போட்டியில் நாடு முழுவதிலிருந்தும் சுமார் 6000 போட்டியாளர்கள் கலந்து கொண்டார்கள். பலர் சங்கீதப் புலமை பெற்றவர்கள். சங்கீதத்தை முறையாகக் கற்றுக் கொள்ளாமலே இந்தப் போட்டியில் பல நிலைகளைத் தாண்டி மகுடம் சூடிக் கொள்வது என்பது அத்தனை சாதாராணமானதல்ல, என்றாலும் அயராத முயற்சியும், பயிற்சியும் இறைவன் தந்த அற்புதமான குரல்வளமும் பிரகாஷிற்கு மகுடம் சூடிக் கொள்ளும் வாய்ப்பை பெற்றுத் தந்திருக்கிறது.

பிரகாஷின் சொந்த இடம் டிக்கோயா இன்வெரி தோட்டம். அப்பா கலைச்செல்வன் தனியார் பேருந்துச் சாரதி, தாய் சித்ராதேவி தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் உத்தியோகத்தர். பிரகாஷ் அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் தரம் 8 இல் கல்விகற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஒரே ஒரு சகோதரன்.

ஆரம்பத்தில் விளையாட்டாகத்தான் இந்தப் போட்டியில் கலந்து கொண்டேன். என்னை இந்த அளவிற்கு ஊக்குவித்தது அம்மாவும் அப்பாவும்தான். வீட்டில் பாடல்களைப் பாடும் போது அப்பா சாதாரண பிளாஸ்ரிக் கேனில் தாளம் தட்டுவார். எனது பாடசாலை ஆசிரியரான செந்தில் எனக்கு அதிக ஊக்கம் தந்தார். போட்டியின் போது நடுவர்களின் பாராட்டும் ரசிகர்களின் பாராட்டும் பெரும் உத்வேகமாக இருந்தது. அடுத்தப் பாடலை இதை விட நன்றாக பாடவேண்டும் என நினைத்துக் கொள்வேன். ஒவ்வொரு பாட்டையும் கேட்டு நன்றாக பயிற்சி செய்வேன். எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனின் ஆசி கிடைத்திருக்கிறது. அதனால்தான் என்னால் வெற்றி பெற முடிந்தது என்கிறார் பிரகாஷ்.

எனக்குக் கிடைத்த பணத்தையும் பரிசையும் விட விழா மேடையில் என் அப்பாவும் அம்மாவும் ரொம்ப சந்தோஷப்பட்டதைத்தான் பெருமையாக நினைக்கிறேன். அப்படியொரு சந்தோஷத்தை அவர்களுக்கு கொடுக்க சந்தர்ப்பம் வழங்கிய சக்திக்கும் எனக்கு திறமை கொடுத்த இறைவனுக்கும் நன்றிகள் என்கிறார் பிரகாஷ் ஒரு மகனுக்கே உரிய பாசத்தோடு.

பிரகாஷ் பாடுவதில் மட்டுமல்ல மிமிக்ரி செய்வதிலும் வல்லவராக இருக்கிறார். விலங்குகளின் ஒலிகள், பல்வேறு இசைக்கருவிகளின் இசைகளைத் தன் குரலில் அற்புதமாகக் கொண்டு வருகிறார்.

தன் திறமையால் மலையகத்திற்கு பெருமை சேர்த்த பிரகாஷை வாழ்த்துவோம்.


அதேசமயம். இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்று மலையகத்திற்கு மேலும் பெருமை சேர்த்த தலவாக்கலையைச் சேர்ந்த சதுர்சனா, இறத்தோட்டையைச் சேர்ந்த மயூரன், லிந்துலையைச் சேர்ந்த கவிதாஞ்சலி ஆகியோரும் பாராட்டுக்குரியவர்களே!

இசைவானில் இந்த மலையக நட்சத்திரங்கள் தொடர்ந்தும் ஜொலிக்க வாழ்த்துவோம்.

சந்திப்பு:- சா.சதீஸ்குமார்,
பொகவந்தலாவை




சக்தி ஜூனியர் சுப்பர் ஸ்டார் பிரகாஷ்



# அம்மா நான் போகிறேன்!

## 11 வயதுச் சிறுமியின் விபரீத முடிவு!

**எனக்கு வாழப்பிடிக்கவில்லை! என் மீது யாருக்கும் அன்பில்லை. நான் போகிறேன். 11 வயதேயான சிறுமி இப்படியொரு வாக்குமூலத்தை வழங்கிவிட்டு தன் வாழ்வையே முடித்துக் கொண்டிருக்கிறாள் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் அளவிற்கு அவளை சோகத்தின் எல்லைக்கு துரத்தியது யார்? பட்டாம் பூச்சியாய் சிறகடித்துப் பறக்க வேண்டிய அவள் வாழ்வை விட மரணத்தை தழுவிக் கொள்ள காரணம் என்ன?**

தீப்தி பதுளை எட்டாம்பிட்டிய மகா வித்தியாலயத்தில் 6 ஆம் ஆண்டு படிப்பவள். பாடசாலையிலும் அவள் வாழும் இடத்திலும் தீப்தியைத் தெரியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. அந்த அளவுக்கு அவள் மிகவும் பிரபலமாக இருந்தாள்.

சுறு சுறுப்பும் குறும்புத்தனமும்தான் அவள் அடையாளம். பாடசாலையிலும் அவளது பிரதேசத்திலும், எங்கெல்லாம் மரம் இருக்கிறதோ அங்கெல்லாம் மரத்தில் ஏறி பழம் பறிப்பாள். கூரை மீது ஏறி சத்தமாக பாட்டுப் படிப்பாள். மலைகளில் குன்றுகளில் ஏறித் திரிவாள். வீட்டில் அவள் அடைந்து கிடக்கும் காலங்கள் மிகக் குறைவு.

எப்போதாவது எங்கேயாவது விழுந்து கைகால் உடைந்த சில நாட்களில்தான் அவள் அமைதியாக இருப்பாள்.



தீப்தியோடு எப்போதும் சேர்ந்து திரிபவன் அவளது தம்பி. 4 வயது. தீப்தியின் குறும்புகளை சகிக்க முடியாத அம்மா பத்மலதா அடிக்கடி ஏசுவார். காதைத் திருகி அடிப்பார்.

எவ்வளவு அடித்தாலும் அப்போது மட்டும் கண்ணைக் கசக்கும் தீப்தி சில நிமிடங்களிலேயே அதை மறந்து பழைய குறும்புத்தனங்களில் ஈடுபடுவாள்.

என்னதான் குறும்பு செய்தாலும் படிப்பில் கெட்டிக்காரி என்பதால் ஆசிரியர்களுக்கு அவள் மீது தனிப்பட்ட பிரியம் இருந்தது.

தீப்தியின் அப்பா திருகோணமலையில் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்தார். வாரத்தில் ஒரு நாள்தான் வீடு வருவார். வீட்டில் வறுமை குடியிருந்தாலும் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. ஆண் இல்லாத வீடு என்பதால் அம்மா தீப்தியுடன் கொஞ்சம் கண்டிப்புடனேயே நடந்து கொள்வாள்.

தீப்தியும் அவள் தம்பியும் சேர்ந்தே திரிந்தாலும், விளையாடினாலும் 10 நிமிடத்திற் கொருமுறை இருவருக்கும் சண்டை வந்துவிடும். ஏசுவாள். தம்பியை தீப்தி எப்போதும் வம்புக்கிழுப்பாள். தம்பி கண்ணீரோடு அம்மாவிடம் முறையிட அம்மா தீப்திக்கே அடிப்பாள்.

அன்று 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை. பாடசாலை இல்லாததால் தாமதமாகவே எழும்பினார்கள் இருவரும். வீடு முறை நாள் என்பதால் வழமையை விட சண்டையும் சமாதானமுமாக வீடு அமர்க்களப்பட்டது. தீப்தி கூரை மீது ஏறி விளையாடினாள். மரத்தில் ஏறி ஆடியபடி இருந்தாள். தம்பிக்கு அடித்தாள்.

தீப்தியின் குழப்படி தாங்காது அம்மா அவளை ஏசினாள். நீங்கள் இருவரும் ஏன் இப்படி என்னைக் கொல்கிறீர்கள். உன் குழப்படி தாங்காமல் நான் சாவதைத் தவிர வேறு வழியில்லை. இனியும் குழப்படி செய்தால் நான் என்ன செய்வேன் என்று தெரியாது என தீப்திக்கு ஏசினாள்.

அம்மா ஏசியதால் தீப்தி அழுதபடி இருந்தாள்.

அம்மா மாலை 6 மணியளவில் தீப்திக்கும், தம்பிக்கும் சாப்பாடு கொடுத்தாள். அழுது அழுது தீப்தியின் கண்கள் வீங்கியிருந்தன. அவள் சாப்பிடுவதில் அவ்வளவாக நாட்டம் காட்டவில்லை. அம்மா அவளது தலையைத் தடவிக் கொடுத்து சாப்பிடச் சொன்னாள்.

சாப்பிட்டு முடிந்ததும் அம்மா தம்பியை தூக்கிக்கொண்டு வெளியில் சென்று வருவதாக கூறிச் சென்றாள்.

தீப்தி அப்போதுதான் அந்த விபரீத முடிவை எடுத்தாள். தன் கொப்பித் தாளில் ஒரு கடிதத்தை எழுதினாள். அன்புள்ள அம்மா...!

என்னால் நீங்கள் சாகவேண்டாம். என் மீது யாரும் அன்பில்லை. நான் உங்களை விட்டுப் போகிறேன். இனி என்னால் உங்களுக்கு தொந்தரவு இருக்காது. நான் இறந்த பிறகு பெட்டியில் போட வேண்டாம். வெறும் மண்ணில் என்னைப் புதைத்து விடுங்கள்.

என எழுதி கடிதத்தை டீ.வி.க்கு கீழ் வைத்தாள்.

6.30 பத்மலதா வீட்டுக்கு வந்தாள்.

கதவைத் திறந்ததும் தம்பி அக்காவை தேடினான். வீடு இருண்டு கிடந்தது. அம்மா தீப்தி... தீப்தி... என கூப்பிட்டாள். ஒவ்வொரு அறையாகத் தேடினாள்.

ஒரு அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் தீப்தி தென்பட்டாள்.

பதுளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள். அந்தச் சின்னஞ் சிறு உயிர் இந்த உலகை விட்டுப் பிரிந்து வெகு நேரமாகியிருந்தது.

தீப்தியின் அம்மா தலையை சுவரில் மோதியபடி அழுதாள். நான் உன்னைக் கண்டித்ததற்காக எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? என கலங்கித் தவிக்கிறாள் அந்தத் தாய்!

தாயின் கண்டிப்பை இந்தச் சிறுமி தவறாக எண்ணிக் கொண்டு தவறான முடிவை எடுத்து விட்டாளா?

எனினும் தீப்தியின் மரணம் பல சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது.

தீப்தி 12 அடி உயரத்தில் உள்ள வீட்டுக் கூரையிலேயே தூக்கிட்டிருக்கிறாள்.

சிறியவளான அவளால் இது எப்படி சாத்தியமானது?



மேலும் கடிதத்தில் உள்ள கையெழுத்திற்கும் அவளது கொப்பியில் உள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது.

அப்படியானால் கடிதத்தை எழுதியது யார்?

தீப்தியின் மரணத்திற்கு உண்மையான காரணம் என்ன?

மர்மம் துலங்குமா?



ஜி.வி.எஸ். (நன்றி:- மௌபிம)





# வயதோ 102! வாழ்க்கையில் சலிப்பில்லை

40 வயது கடந்து விட்டாலே நோயோடும் உடல் நலக்குறைவோடும் போராடிக் கொண்டு இன்னும் நாம் எத்தனை காலம் இப்பூமியில் வாழ்வோம் என்று வாழ்நாளைக் கடத்திக் கொண்டிருக்கும் பலரை நாம் அதிகம் காண்கிறோம்.

இந்தக் காலத்தில் நீண்ட ஆயுளுடன் சுறுசுறுப்பாக தனது வேலைகளை தானே செய்து கொண்டிருக்கும் பழங்காலத்து ஆச்சி உண்மையில் ஆச்சரியமானவர் தான்..

கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகப்பிரிவின் கீழ் அமைந்துள்ளது நற்பிட்டிமுனைக் கிராமம் இக்கிராமத்தில் 102 வயதுடன் சுறுசுறுப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார் கணபதிப்பிள்ளை செல்வம் (102வயது) ஆச்சி.

1911ஆம் ஆண்டு பிறந்துள்ள இவருக்கு ஐந்து பிள்ளைகளும்,24 பேரப்பிள்ளைகளும் 49 பூட்டப் பிள்ளைகளும் மூன்று கொள்ளுப்பிள்ளைகளும் உள்ளனர்.

அந்தக்காலத்து வாழ்க்கையை இப்போதும் நினைத்து பார்த்து மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் நினைவாற்றலுடன் இவர் இருக்கின்றார். தான் ஐந்தாம் வகுப்பு வரையே படித்ததாக கூறும் செல்வம் ஆச்சி அன்று தாம் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து பெருமைப்படுகின்றார்.

செல்வம் ஆச்சி தனது அன்றாடக் கடமைகளை தாமே செய்து கொள்கின்றார். மாலை நேரங்களில் பொழுது போக்கிற்காக பத்திரிக்கைகள் படிக்கின்றார். கண்ணுக்கு கண்ணாடி இன்றி எழுத்துக்கூட்டி பத்திரிக்கைகளை உரக்கப் படிக்கின்றார்.

பாடசாலைக்கு செல்லும் தனது பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் பாடசாலைவிட்டு வந்ததும் அவர்களது புத்தகப்பைகளை ஆராய்ந்து அன்று அவர்கள் பாடசாலையில் என்ன படித்திருக்கின்றார்கள் என்பதையும் கவனித்து பிள்ளைகளுக்கு புத்திமதி சொல்லி கண்டிக்கிறார்.

102வயதைக் கடந்த நிலையிலும் இன்று கூட ஒரு பெனடோல் கூட அவர் பாவித்தது இல்லை என்கிறார் செல்வம் ஆச்சி. தனக்கு காய்ச்சல் ,உடல் அசதிகள் ஏற்பட்டால் நாட்டு வைத்தியமே செய்கின்றார். சுகர்,பிரசர்,கொலஸ்ட்றோல்,வாதம்,பித்தம்,சளி, இருமல் என எவ்வித நோய்களும் இன்றி வாழும் செல்வம் ஆச்சியின் ஆரோக்கியம் ஓர் இரகசியமாகவே இருக்கின்றது.

தற்போது நற்பிட்டி முனைக்கிராமத்திலுள்ள அவரது பேரப்பிள்ளையான திருமதி சிவகலை இராஜேஸ்வரன் வீட்டில் வசிக்கின்றார் எங்கட அம்மம்மாவினால் எங்களுக்கு எந்த ஒரு தொல்லையும் இல்லை. அவரது வேலையை அவரே செய்கின்றார் என்றார் பேத்தி சிவகலை.

அவர் இத்தனை வருட காலம் வாழ்வதற்கு என்ன காரணம் என்னவாக இருக்கமுடியும். உரலில் நெல் குற்றி, அம்மியில் மஞ்சள் அரைத்து, ஆட்டுக்கல்லில் உழுந்து அரைத்து, கிணற்றுவாளியில் தண்ணீர் அள்ளி, உடலுக்கு கொடுத்த பயிற்சியும் அந்தக்காலத்தில் தாம் சாப்பிட்ட சத்தான உணவுகளுமே காரணம் என்கிறார்.



இன்றும் 102 வயதில் தேனீயைப் போல் சுறுசுறுப்பாக வாழும் செல்வம் ஆச்சி இன்னும் பல வருடங்கள் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ எல்லோரும் வாழ்த்துவோம்.

**செ.துஷ்யந்தன்**

# இவர்கள் திருந்தவே மாட்டார்களா?

சவூதியில் சிரச்சேதம் செய்யப்பட்ட ரிஸானாவின் மரணம் தந்த வலி இன்னும் மறையவில்லை. சிறுமியான அவள் வயதை அதிகரித்துக் காட்டி வெளிநாட்டு வேலையாளாக அனுப்பி வைக்கப்பட்டாள். இந்த சட்டவிரோத காரியத்தில் ஈடுபட்டவர்களை முதலில் தண்டிக்க வேண்டும் என்ற எதிர்ப்புக் குரல்கள் எழுந்து வருகின்றன.

இந்நிலையில் வயதைக் கூட்டிக் காட்டி சவூதி அரேபியாவுக்கு பணிப் பெண்களாக அனுப்பவென கின்னியாவிலிருந்து கொழும்புக்கு அழைத்து வந்த 17 வயதான இரு சிறுமிகளை மருதானை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

இந்த இரண்டு சிறுமியரையும் தற்காலிகமாக தங்கும் விடுதியொன்றுக்கு அழைத்துச் சென்ற நபரையும் கின்னியாவிலிருந்து யுவதிகளை அழைத்து வந்த பெண்ணையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நள்ளிரவு நேரத்தில் இரண்டு சிறுமிகளுடன் நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் செல்வதைக் கண்டு சந்தேகமுற்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த இரு சிறுமிகளையும் மருதானை விடுதியில் தங்க வைத்து போலி ஆவணங்களைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளை இந்தத் தரகர் மேற்கொண்டிருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## டொமொஹோக் புதிர் இல.12

புதிருக்குரிய கேள்வி 24.01.2013 உதயசூரியனில் வெளிவந்த சிறப்பு பகுதியை அடிப்படையாகக் கொண்டு கீழ்த் தரப்பட்டுள்ளது. நீங்கள் செய்ய வேண்டியது கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கான விடையைக் கண்டு பிடிப்பது மட்டுமே. இங்குப் பக்கத்தில் கீழ்த் தரப்பட்ட டொமொஹோக் புதிர் இல. 12 என்பதை வெட்டி ஒரு தபால் அட்டையில் ஒட்டி பதில் எனும் வெற்றிடத்தில் உங்களுடைய விடையினை தெளிவாக எழுதி அனுப்புங்கள்.

இது உங்களுடைய சொந்த முயற்சி என்பதை ஒரு ஆசிரியர் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி, தபால் அட்டையினை தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

போட்டி முடிவு திகதி: 30.01.2013

தபால் அட்டை அனுப்ப வேண்டிய முகவரி

டொமொஹோக் புதிர் இல. 12
ஞாயிறு தினக்குரல்
68, எகிறுவல் வீதி,
கொழும்பு - 15.

8-16 வயதுக்கிடைப்பட்ட அனைத்து உதயசூரியன் வாசகர்களும் இதில் பங்குபற்ற முடியும்.

(ஒரு சைக்கிளை ஏற்கனவே பரிசாக வென்றெடுத்தவர்கள் இதில் பங்கு பற்றும் தகைமை பெறமாட்டார்கள்)

கேள்வி - புதிர் இல.12

கேள்வி: எலிகளைக் செல்லமாக வளர்ப்பவர்கள் அதிகம் உள்ள நாடு எது?

பதில் : ................................................

U/S



TOMAHAWK
Bicycles டொமொஹோக்
Mountain - BMX - Ladies - Kids
Dealers Island wide
TOMAHAWK BICYCLE MALL
No. 254 B, Galle Rd, Colombo 04
www.tomahawkbike.com

## எம்மவர் தலைவிதி



நாடற்றவன்...
வீடற்றவன்
என நல்லபல
பட்டங்களுடன்
ஆறேழு தலைமுறையாய்
உரித்தே இல்லாத
லயத்து காம்பிராக்களில்
அதிகார வர்க்கத்தின்
ஆதிக்கத்தின்
கீழ் அடங்கி, முடங்கி
ஒடுங்கிக் கிடக்கும்
எம்மவர்
தலைவிதியை மாற்ற
எவர்தான் வருவார்???

கே.கிசோகுமார்,
கொட்டகலை.

## ஏழை

ஓலைக்குடிசையில்
ஒருவேளைச் சாப்பாட்டுக்கு
ஆலை வயல் வெளியில்
அப்பாவி மூச்சுக்கள்
இரவு வேளையில்
தூங்காத கலங்கிய கண்கள்
இதுதான் ஏழையின்
பரிதாப நிலை காண்பீரோ!

அஸ்கர் மொஹமட்,
ஹுனுகலை.



## வருந்தாதே!

உன் ஏழ்மையை
நினைத்து
வருந்தாதே!
உன்னுள்ளே தான்
பூரண சந்திரன்
புதைந்து
கிடக்கிறான்

ஜே.விஜி,
கஹுபான தோட்டம்,
புளத்கொகுபிட்டிய.



## கூண்டுக் கிளி

என் மனதில் எண்ணங்களை
முடக்கி விட்டனர்!
என் கனவில் எல்லைகளை
ஒடுக்கி விட்டனர்!
என் வாழ்வின் மகிழ்வுகளை
பறித்து விட்டனர்!
நான் தவித்துக் கொண்டிருக்கிறேன்
கூண்டுக்கிளியாய் - என்
சுதந்திரத்திற்காக...

வி.காயத்திரி பிரவீனா, அட்டன்.



## இதயம்

பிரியமானவளே!
இப்போது என் இதயம்
அதிகம் கனக்கிறது
ஏன் என்று கேட்கிறாயா?
உன்னையும் என்
இதயம் சுமப்பதனால்

ஜே.தர்ஷன், குருக்கலை.

## மணிக்கவிதைகள்

### கண்ணாடி

என்னையே எனக்கு
பிடிக்கும் உன்னை
பார்த்த பிறகு

### லயத்து பிள்ளைகள்

பெருமிதம் கொண்டவரின்
பார்வையில் நாங்கள்
கண்டவுடன் தள்ளிவிடும்
கிணற்று தவளைகள்

### அன்னையின் அன்பு



அள்ள அள்ள
குறையாத
அட்சய
பாத்திரம்

### மன்னிப்பு

ஒரு தடவை பரிசளித்தமையால்
மீண்டும் மீண்டும் விழா
நடக்கின்றது பரிசு பெற்றுக்
கொள்ளலாம் என்று

சண்முகநாதன் பரிமளா, சட்டன்.

## புதிய உலகம் படைப்போம்



தகுதியற்ற தலைவரது
தலைமையது வேண்டாம்
பொறுப்பற்ற மனிதரின்
சேவைகளும் வேண்டாம்
யுத்தம் நிறைந்த
உலகம் வேண்டாம்
இரத்தம் சிந்தும்
உலகம் வேண்டாம்
நித்தம் வலி உள்ள
உலகம் வேண்டாம்
போலி அன்பு,
உறவு வேண்டாம்
நீலிக் கண்ணீர்
வேடம் வேண்டாம்
வேலி மீறும் மரியாதை வேண்டாம்
நிம்மதி அற்ற வாழ்வு வேண்டாம்
உண்மை அற்ற உலகம் வேண்டாம்
துயரங்களில் தோள் கொடுக்கா
சினேகிதரின் சிநேகம் வேண்டாம்
நிர்கதியற்ற வாழ்வு வேண்டாம்
உறவுகளே நீயும் நானும் வாழ
புதிய உலகம் படைப்போம்

ர.துர்க்கா, வ/கணேஸ்வரா.ம.வி.

## தென்றலைத் தேடி

கல்வியை இழந்து
விடாதே!
தோழா அதுவே உன்
மூன்றாம் கால்
இரண்டாம் மூளை
முதலாம் சக்தி

பெற்றுக்கொள்-தினம்
கற்றுக்கொள்
உன்னை துரத்துகின்றன
காலங்கள்
முன்னால் பள்ளத்தை
எதிர்பார்த்து
திரும்பிப் பார்க்காதே
உன் திசை மாறி விடும்
தென்றலின்
நுழைவாயில்
சூறாவளியும், புயலும் தான்
பூகம்பமும் கூட
புறப்படு நிற்காதே
கல்விப் பாதையில்
புயலென பாய்ந்து செல்
உனக்கா[illegible]
காத்துக் கிடக்கின்றன
தென்றல்கள் பல...

ரோஷித் விஜய், கல்மதுரை.

# கவிதைகள்

## காதல்



கொள்ளை போகாத
என் மனம்
கொள்ளை போனது
ஏன் உன்னிடம்
பெண்ணைப்
பார்க்காத என்
கண்கள்
உன்னைப் பார்த்தது
ஏன்?
நான் நேசித்து
கொண்டிருப்பது
உன்னை
நீ நேசிக்காமல் இருப்பது என்னை
வற்புறுத்துகிறேன் நான் உன்னை
வராதா என் மேல் உனக்கு
காதல் பெண்ணே!

எஸ்.விவேகானந்தன், பதுளை.


## மனித வாழ்வே சுமைதான்

அன்னையின் கருவறையில்
ஐயிரண்டு மாதமாய் சுமை
அடி எடுத்து வைத்தபோது
அப்பாவுக்கு சுமை
படிக்கின்ற போது
பள்ளிக்கு சுமை
பாஸான போது
தொழில் தேடி சுமை
தொழில் கிடைத்தபோது
அதிகாரியால் சுமை
வாழ்க்கைப்பட்ட போது
வாரிசுகளால் சுமை
முதுமையான போது
நோயால் சுமை
மனித வாழ்வே சுமைதானோ



எம்.நெடுமாறன்,
ஹொப்டன்.

உதய சூரியன் "கவிதைச்சமர்"
ஏசியன் மீடியா பப்ளிகேசன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:----------------
முகவரி:----------------
தொலைபேசி இல----------------



# நினைத்ததை முடிப்பவன்! 32

பாலா.சங்குப்பிள்ளை

மணிவேலு அளவிலா மகிழ்ச்சியுடன் மனைவி அன்னம்மாளைப் பார்த்தார். அவர்கள் இருவரும் அப்போதுதான் கண்டியிலிருந்து வந்திருந்தார்கள். மகள் பல்லவி ஏறக்குறைய நன்றாக பேசக்கூடியளவுக்கு குணமாகிவிட்டாள். வைத்தியர்களினால் கைவிடப்பட்டவள் பல்லவனின் இடைவிடாத முயற்சியினால்தான் இத்தகைய நிலைக்கு வந்திருந்தாள்.

உண்மையிலேயே இதுவொரு அபூர்வமான விஷயம்தான். பல்லவியினால் படுத்த படுக்கையாக இருந்த அன்னம்மாள் கூட இன்று நடமாடுவதற்கு காரணமானவன் பல்லவன்.

"என்னங்க இன்னும் ரெண்டு வாரத்துல பல்லவியை கூட்டிட்டுப் போகலாமுன்னு டொக்டர் சொல்லிட்டாரே... இப்பத்தான் எனக்கு சந்தோஷமா, நிம்மதியாயிருக்கு. அவளுக்கு மட்டும் ஏதாவது ஆகியிருந்தா நான் செத்தே போயிருப்பேன். அதுசரி... சம்பவம் நடந்த அன்றைக்கு இராத்திரி நல்லாயிருந்தவ திடீர்னு ஐயோன்னு அலறிக்கிட்டு விழுந்தாளே... பெத்தமனசு எப்படித் துடிதுடிச்சிச்சி தெரியுமா...? இப்ப நினைச்சாலும்..."

"ஆமா... அந்த நேரத்துல பல்லவியோட ஃபோனுக்கு அழைப்பு ஒண்ணு வந்திருக்கு. யார் பேசினாங்கன்னு தெரியலை... அப்புறம்தான் அவ மயங்கி விழுந்திருக்கா.அந்த நேரத்துல இதயம் பாதிக்கப்பட்டதால மூளைக்கு ரத்தம் போறது தடைப்பட்டிருச்சாம். நாம உடனடியா ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போயும் எதுவும் சரிவரலை. ஆனா பல்லவனோட முயற்சிதான் அவளை மறுபிறவியெடுக்க வச்சிருக்கு..."

"ஏங்க... எனக்கு ஒண்ணு தோணுது சொல்லவா?"

"அவ உயிரைக் காப்பாத்தின பல்லவனுக்கே அவளை மணம் முடிச்சி குடுக்கிறதைப் பத்தித்தானே..."

"அட நான் நெனைச்சதை நீங்களும் சொல்லுறீங்களே..."

"பல்லவன் இங்கே வந்துபோக இருந்தப்பவே எனக்கு இப்படியொரு எண்ணம் இருந்திச்சி... சொந்தக்காரன் வேற... நல்லவன்... ஒரே பெண்ணை தெரியாத இடத்துக்கு குடுத்து தடுமாறுவதைவிட இது நல்லதுன்னு நினைச்சேன்..."

"எப்படியோ... தலையோட வந்தது தலைப்பாகையோட போனதுமாதிரி பல்லவி தப்பிப் பிழைச்சிட்டு டெஸ்ட்டை எழுதி முடிக்கட்டும்... அந்தத் தம்பி கையில புடிச்சிக் குடுத்துருவோம்..."

அவர்கள் இருவரும் இங்கே இப்படி பேசிக்கொண்டிருக்க அன்புமணி தன் வீட்டில் பல்லவனிடம் பேசிக் கொண்டிருந்தான்.

அவர்கள் இருவரும் பேசுவதை மறைவிலிருந்து கவலையுடன் கனிமொழி அவதானித்துக் கொண்டிருந்தாள். ஏற்கனவே பல்லவனைப் பற்றி தன் அண்ணனிடம் பேசியுள்ள நிலையில் கண்டியில் வைத்தும் நேரடியாக வீட்டிலும் அவளை எடுத்தெறிந்து பேசியதை மனதில் வைத்துக்கொண்டு இரண்டு நாட்களுக்கு முன் அன்புமணியிடம் தீர்க்கமாக பேசியிருந்தாள்.

"அண்ணா... நீ உன் பாட்டுக்கு எப்போவாவது வர்றே... போறே... என்னைப் பத்தி ஒண்ணும் கண்டுக்க மாட்டேன்னுறே. என்னோட காதலைப் பத்தி ஏற்கனவே உன்கிட்ட பேசியிருக்கிறேன். அந்த நேரத்துல என்னமோ சொன்னே. ஆனா இப்போ உன்னோட வேலையைப் பார்த்துக்கிட்டு என்னோட வேதனையைப் பத்தி கண்டுக்காம இருக்கே..."

"இங்கப் பாரு கனி... எனக்கு கொஞ்சம் பிரச்சினைனாலத்தான் உன் விஷயத்தை கவனிக்கல்லை. பல்லவனை நாளை கழிச்சி வரச் சொல்லியிருக்கேன். அந்த சமயத்தில் உன்னுடைய விஷயத்தைப் பேசப்போறேன். எனக்கு எந்த நேரத்திலும் எதுவேணும்னாலும் நடக்கலாம். கை நிறைய பணம் கிடைக்குதுன்னு சில தேவையில்லாத விஷயங்களை செய்யப்போய் வில்லங்கத்துல மாட்டிக்கிட்டேன்...."

கனிமொழி சட்டென சிந்தனை கலைந்தவளாக அவர்கள் பேசுவதை உன்னிப்பாகக் கவனிக்கலானாள்.

"பல்லவன்... அப்போ உங்க விஷயத்தை ரொம்ப கஷ்டப்பட்டு முடிச்சிருக்கேன்... இப்போ என்னோட சொந்த விஷயமா உங்கக்கிட்ட பேசணும். எப்படி பேசலாமா...?"

"ஓ... தாராளமா பேசலாமே..."

"என் தங்கச்சி கனிமொழி உங்களை விரும்புறா... அதேமாதிரிதான் நீங்களும்னு நினைக்கிறேன்... என்னோட தங்கச்சியை உங்களுக்கு கைப்பிடிச்சி குடுக்கிறதுல எனக்கு ரொம்ப சந்தோஷம்..."

பல்லவன் - சற்றுநேரம் பேசாமல் இருந்தான். பின் தீர்க்கமாக அவனைப் பார்த்தான்.

"உங்களுக்கு மல்லிகா, கண்மணி இவங்களைத் தெரியுமா?

அன்புமணி - அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தான்"

"அவங்களைப் பற்றி உங்களுக்கென்ன...?"

"முதல்ல தெரியுமா... இல்லையான்னு சொல்லுங்க...?"

"ம்... தெரியும்... ஆனா..."

"ரெண்டு பேரையுமே ஒருத்தன் காதலிக்கிறதா ஏமாத்தி கொன்னுட்டான். இதேபோல பல பெண்கள் இதுல சில படிக்கிற புள்ளைங்களும் அடங்கும். அவமானம் தாங்காம இவங்க தற்கொலை செஞ்சிருக்காங்க. இந்த விஷயத்துல உங்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதா எனக்கு தகவல் வந்திருக்கு..."

"சரி... அதுக்கும் என்னோட தங்கச்சியோட காதலுக்கும் என்ன சம்பந்தம் இருக்கு...?"

"இருக்கு... அந்த பொண்ணுங் களோட அப்பா, அம்மா, அண்ணன், தம்பி இவங்கல்லாம் எப்படி துடிச்சிருப்பாங்க... பத்து மாதம் பெற்றெடுத்த தாய் எப்படி தவியா தவிச்சிருப்பா..."

அன்புமணி பேசாமல் இருந்தான்.

"அவங்களோட வலி, வேதனையை நீங்களும் உணரணும். அதனாலத்தான் உங்க தங்கச்சியை காதலிக்கிற மாதிரி நடிச்சேன். அவளோட கண்ணுலயிருந்து வர்ற கண்ணீர் உங்களை கலங்க வைக்கணும். அவங்களோட துடிப்பு உங்களை துயரத்தின் எல்லைக்கே கொண்டுபோகணும். இதுதான் எனக்கு வேணும்."

"பல்லவன் என்னை என்ன வேணும்னாலும் செய்யுங்க. அதுக்காக தங்கச்சியோட வாழ்க்கையை கெடுத்திடாதீங்க..."

"இல்லை. இது என்னோட இறுதி முடிவு. இதுல எந்த மாற்றமும் இல்லை. என்னை விடுங்க... நான் வாறேன்..."

(தொடரும்....)

வேலை வாய்ப்பு - கொழும்பு

பயிற்றப்பட்ட, பயிற்றபடாத வீட்டுத் தாதி யாரும் மற்றும் மேற்கூறப்பட்டதுடன் தொடர்புடைய வேலைகளுக்கும் ஆட்கள் தேவை.

(ஆகக் குறைந்தது O/L தகைமையுடன்)

உணவு, தங்குமிட வசதிகளுடன் மாத வருமானம் ரூ.10,000 - 18,000/-

தொடர்பு : We Care Home Nursing
T.P : 011 3053293, 0777568349

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

24.01.13 முதல் 30.01.13 வரை

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | நன்மை | நற்செயல் | நலம் | நற்செயல் | போட்டி | விருத்தி | சிந்தனை |
| ரிஷபம் | ஓய்வு | பக்தி | நட்பு | பக்தி | வரவு | நட்பு | அமைதி |
| மிதுனம் | பெருமை | உயர்வு | உதவி | உயர்வு | நன்மை | வெற்றி | சோதனை |
| கடகம் | சுகம் | கவலை | வரவு | கவலை | இலாபம் | கவலை | ஆர்வம் |
| சிம்மம் | தடங்கல் | சுகம் | நற்செயல் | பாராட்டு | கீர்த்தி | பயம் | பாராட்டு |
| கன்னி | சிரமம் | ஏமாற்றம் | ஊக்கம் | ஊக்கம் | பரிவு | பிரீதி | பெருமை |
| துலாம் | உழைப்பு | மறதி | சிரமம் | செலவு | பாசம் | நன்மை | உதவி |
| விருச்சிகம் | பிரீதி | துணிவு | பயம் | பொறுமை | கவனம் | வரவு | பாசம் |
| தனுசு | பொறுமை | இலாபம் | அசதி | பெருமை | உயர்வு | கோபம் | முயற்சி |
| மகரம் | பேராசை | முயற்சி | சுகம் | சாந்தம் | நிம்மதி | இலாபம் | ஆக்கம் |
| கும்பம் | பாராட்டு | இரக்கம் | சோதனை | அசதி | பாராட்டு | சிரமம் | மறதி |
| மீனம் | தாமதம் | ஆர்வம் | நிம்மதி | கவனம் | ஓய்வு | நலம் | பக்தி |

# இரக்கமற்ற காமுகர்களை உயிரோடு தீயிலிட்டு எரிக்கவேண்டும்

"நாங்கள் இருவரும் நடுவீதியில் ஆடைகள் ஏதுமின்றி நிர்வாணமாகக் கிடந்தோம். என்னால் அசையக்கூட முடியவில்லை. அவ்வீதியால் வாகனங்களில் சென்றவர்கள் தமது வாகனத்தின் வேகத்தைக் குறைத்து எம்மைப் பார்த்துச் சென்றனரே தவிர, ஒருவர் கூட எமக்கு உதவ முன்வரவில்லை. ஒருவர் மட்டும் அருகில் வந்து என்ன நடந்தது என்று கேட்டு விட்டுச் சென்றார். அவரும் கூட எமக்கு எந்த உதவியையும் செய்யவில்லை."

இவ்வாறு தெரிவித்தவர் வேறு யாருமில்லை. கடந்த டிசம்பர் மாதம் புதுடில்லியில் தனது கண்முன்னாலேயே காமுகர் கும்பலால் மிகக் கொடூரமாக வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, சில வாரங்கள் மரணப்படுக்கையில் கிடந்து உயிர் துறந்த மருத்துவக் கல்லூரி மாணவியான ஜோதி சிங் பாண்டேயை திருமணம் செய்ய எண்ணியிருந்த அவரது காதலனாவார்.

இந்த மாணவிக்கு நடந்த கோரச் சம்பவமும் பின்னர் அவரது மரணமும் இன்னும் பலரது மனங்களில் இருந்து நீங்கவில்லை.

இந்தக் கொடூர சம்பவத்தை நேரில் கண்டு பாதிக்கப்பட்ட ஒரேயொருவர் முதன் முறையாக இந்திய தொலைக்காட்சி ஒன்றில் சம்பவம் பற்றிய கருத்துகளை கண்ணீர் மல்க வெளியிட்டார்.

அன்று அந்த சம்பவத்தில் படுமோசமாக தாக்கப்பட்டதால் எழுந்து நடக்கக்கூட முடியாத



நிலையில் சக்கர நாற்காலியிலேயே நிகழ்ச்சிக்கு சென்றிருந்தார்.

அவர் அக்கொடூர சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ளவே எண்ணியிருந்தோம். அன்று ஒரு திரைப்படத்துக்குச் சென்று, வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் நடந்தது. அந்த பஸ்ஸில் ஏறியபோது கூட்டம் குறைவாகத்தான் இருந்தது. சற்று நேரத்தில் மேலும் குறைய ஆரம்பித்தது. அப்போது தான் பஸ் திடீரென வேறு திசையில் செல்ல ஆரம்பித்தது. கதவுகள் அடைக்கப்பட்டன. அச்சமடைந்த நான் நடக்கப் போவதை சற்று ஊகித்துக் கொண்டேன்.

ஒருவன் என்னருகில் வந்து இரும்புக் கம்பி ஒன்றால் பலமாக எனக்கு அடித்தான். என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. கால்களில் பலமாக அடி விழுந்ததால் என்னால் எழும்ப முடியவில்லை. மயங்கி விழுந்தேன். நினைவு திரும்பிய போது, நான் கண்ட காட்சி என்னை அதிர்ச்சியிலும், அச்சத்திலும் ஆழ்த்தியது.

என் ஜோதியை அந்தக் காமுகர்கள் சீரழித்துக் கொண்டிருந்தார்கள். அவள் அவர்களிடம் இருந்து தப்பித்துக் கொள்ளத் துடித்தாள். அவளை அவர்கள் கொடூரமாகத்தாக்கி சித்திரவதை செய்தார்கள். என் நெஞ்சு பொறுக்கவில்லை. எழுந்து போய் ஜோதியைக் காப்பாற்ற முயன்றேன். ஆனால் என்னால் எழுந்திருக்க முடியவில்லை. என் கால்கள் செயலிழந்து போய் இருந்தன.

நான் கால்களை இழுத்து கைகளை ஊன்றி ஜோதியைக் காப்பாற்ற முயன்றேன். அப்போது அந்தக் குழுவில் இருந்த ஒருவன் மீண்டும் ஒரு இரும்புக் கம்பியைக் கொண்டு வந்து என்னை பலமாகத் தாக்கினான். நான் மீண்டும் தரையில் விழ்ந்தேன்.

அப்போது பஸ்ஸின் கடைசி ஆசனத்தில் வைத்து அந்த 6 பேரும் ஜோதியை மாறி மாறி வல்லுறவுக்குட்படுத்தினார்கள். பிறகு எங்கள் இருவரையும் பஸ்ஸில் இருந்து வெளியே தூக்கிப் போட்டுவிட்டு அவர்கள் போய்விட்டார்கள்.



நாங்கள் இருவரும் நடுவீதியில் நிர்வாணமாகவே விழுந்து கிடந்தோம். எல்லோரும் தமது வாகனத்தின் வேகத்தைக் குறைத்து எங்களைப் பார்த்து விட்டுச் சென்றார்களே தவிர, ஒருவரும் உதவிக்கு வரவில்லை. ஒருவர் மட்டும் என்ன நடந்தது என்று கேட்டார். ஆனால் அவரும் எமக்கு உதவவில்லை.

சுமார் இருபது நிமிடங்களுக்குப் பிறகுதான் பொலிஸ் அதிகாரிகள் வந்தார்கள். அவர்களும் வந்தவுடன் எமக்கு ஆடைகளைத் தந்து வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதை விட்டுவிட்டு எம்மிடம் விசாரணை நடத்துவதிலேயே அக்கறை செலுத்தினார்கள். அதன் பிறகு தான் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அன்று நடந்த சம்பவங்களை ஜோதி பொலிஸாரிடம் கூறியிருந்தாள்.

இந்த கொடூரத்தைச் செய்தவர்களுக்கு கட்டாயம் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பதே அவளின் ஒரே விருப்பம்.

இதுபோன்று இன்னும் எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. ஆனால் அவற்றை வெளிப்படுத்த பாதிக்கப்பட்டவர்கள் அஞ்சுகிறார்கள்.

இத்தகைய ஈவு இரக்கமற்ற சம்பவங்கள் இனிமேலும் நடக்கக் கூடாது. உரியவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும். அவர்களைத் தீயில் உயிரோடு எரிக்க வேண்டும். இதுதான் ஜோதியின் ஆசை என்று தனது உள்ளக் குமுறல்களை சொல்லி முடித்தார் ஜோதியின் காதலன்.

— தா.அஸாம்

## மொபைல்







★ மயிலே மயிலே இறகு போடுன்னா அது போடாது! ஏன்னா மயிலுக்கு தமிழ் தெரியாதே!

★ பல்லு சரியா இல்லைன்னா அது பொக்கை...! சொல்லு சரியா இல்லைன்னா அது மொக்கை...!



## காதல் தோல்வி

மிளகாய் அதிகமாப் போனா காரம்...
காதல் அதிகமாப் போனா தாரம்
நீ வரலைன்னா போடி... உன் நினைவா நான்
வளக்குறேன் பாரு தாடி...!
நேற்றுவரை என்னில் நீ சரிபாதி,
எனக்கு நீ கட்டிட்டியே சமாதி.

தன்னைப் பற்றி சிந்திக்கும் ஒருவனால் மட்டுமே, மற்றவர்களின் உணர்ச்சிகளை உணர முடியும்.




★தோல்வி உன்னை தோற்கடிக்கும் முன் நீ தோல்வியை தோற்கடி...

★உழைப்புத்தான் வாய்ப்புகளை திறக்கும் சாவி...

★ ஒரு ஊமைப் பெண்ணிடம் ரகசியம் சொல்லிப் பாருங்கள் அவள் கூட பேச ஆரம்பித்து விடுவாள்...!

என்னங்க பெண்ணையே கண்ல காண்பிக்க மாட்டேங்கிறாங்க...? நான் தான் சொன்னேன்ல. பொண்ணு இருக்கிற இடமே தெரியாதுன்னு!

## அலப்பறை

இரண்டு குடிகாரர்கள் ஒரு மதுபானக் கடைக்கு வந்தனர். நன்றாகக் குடித்துவிட்டு இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர். பேச்சு முடிவில் ஒருவன் சொன்னான், ''என் பெயர் ராமு'' அடுத்தவன்,

''அட, என் பெயர் கூட சோமு,'' என்றான்.

**ராமு:** நான் அடுத்த தெருவில்தான் வசிக்கிறேன்.

**சோமு:** அட, நானும் கூட அடுத்த தெருவில்தான் வசிக்கிறேன்.

**ராமு:** நான் அங்குள்ள அடுக்கு மாடி வீட்டில் மூன்றாவது தளத்தில் இருக்கிறேன்.

**சோமு:** அடடா, நாம் நெருங்கி வந்துவிட்டோம். நானும் மூன்றாவது தளத்தில்தான் வாழ்கிறேன்.

ராமு அப்படியா? என் வீட்டின் கதவிலக்கம் 303.

**சோமு:** என்ன ஆச்சரியம்! என் வீட்டின் எண்ணும் அதுதான்!

**மூன்றாவது ஒரு நபர்:** இவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்? ஒன்றுமே புரியவில்லையே!

**கடைப் பணியாள்:** ஒவ்வொரு வாரமும் விடுமுறை நாளில் இவர்களோடு பெரிய பிரச்சினையா போச்சு. இவர்கள் இருவரும் தகப்பனும், மகனும்!



## கொஞ்சம் சிரிக்க சிந்திக்க

உலகின் மிகப் பயங்கரமான ஆயுதம்

### ஒரு நாக்கு இத்தனை வேலை செய்யுமா?



நாக்கு எலும்பில்லாததுதான் எத்தனையோ பேரின் எலும்பு முறியக் காரணமாக இருக்கும்.
நாக்கு ஈரமானதுதான் எத்தனையோ பேரின் இதயங்களை எரித்துவிடும்.
நாக்கு எச்சிலுக்குள்ளே இருப்பது ஏன் தெரியுமா?
அசிங்கத்தைப் பேசினால் அலசிவிடவே...
நாக்குக்கும் கற்பு உண்டு. அது மௌனம்!
தாலாட்டுவதும், பாராட்டுவதும், வாழ்த்துவதும் காறித் துப்புவதும் ஒரே நாக்கில்தான்.
நாக்கு குகைக்குள் புலி மாதிரி, வெளியில் வராமலேயே வேட்டையாடுகிறது உணவை...

### உண்மை


வாழ்க்கை என்பது வழுக்குப் பாறை - அதில் வழுக்கி விழுவது தவறல்ல வழுக்கி விழுவதையே வழக்கமாய் கொண்டிருத்தல் வாழ்க்கையல்ல. தோல்வியில்லாத வெற்றி இனிக்காது. முயற்சியில்லாத கனவு பலிக்காது...!




உன் மீது உனக்கே நம்பிக்கை இல்லை என்றால் கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை...
- விவேகானந்தர்

தலையிலிருந்து அடிக்கடி முடி கொட்டுறதுக்கு முக்கிய காரணம் என்னன்னு தெரியுமா...?

தெரியலையே... என்னது?
தலையிலே முடி இருக்கிறது தான்...!




### தாய்


ஐந்து பேர் கொண்ட ஒரு வீட்டில் இரவலாக வந்த நான்கு கேக் துண்டுகளைப் பார்த்ததும் எனக்கு கேக் பிடிக்காது நீங்க சாப்பிடுங்க என்று சொல்பவள் தாய்...!

திரும்பிப் பெற முடியாதவை
01. உடலை விட்ட உயிர்...
02. பேசி விட்ட வார்த்தை ...
03. கடந்து விட்ட நாட்கள்...
04. இழந்து விட்ட இளமை...
05. கொடுத்து விட்ட வாக்கு...!

நண்பனையும் நேசி எதிரியையும் நேசி நண்பன் உன் வெற்றிக்கு துணையாக இருப்பான் எதிரி உன் வெற்றிக்குக் காரணமாக இருப்பான்.




* ஒரு பெண்ணிடமுள்ள குறைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அவளைப் பற்றி அவளின் தோழிகளிடம் புகழ்ந்து பேசினால் போதுமானது.





ஒரு தேனீயிடம் ஒரு பறவை கேட்டது. ''ஓய்வில்லாத கடின உழைப்பின் மூலம் நீ தேனைத் தயாரிக்கிறாய். ஆனால் மனிதன் அந்தத் தேனை உன்னிடமிருந்து திருடி விடுகிறான் அதற்காக நீ வருந்துவதில்லையா?'' அதற்குத் தேனீ பதிலளித்தது. ''இல்லவே இல்லை! ஏனென்றால் மனிதன் என்னிடமிருந்து தேனை மட்டும்தான் திருடமுடியும். ஆனால் தேனை உண்டாக்கும் கலையை ஒரு போதும் அவன் என்னிடமிருந்து திருடமுடியாது''
(என்ன ஒரு மகோன்னதமான மனப்பான்மை!)

# வீட்டை விட்டு துரத்திய ஆவி!



வீட்டில் கண்ணாடியில் முகம் பார்த்திருக்கும் போது திடீரென ஒரு உருவம் நம் கண்முன் வந்து போனால் எப்படியிருக்கும்? வீட்டில் எல்லோரும் இருக்கும் வேளை அதுவும் பட்டப்பகலில் ஒரு உருவம். யார் கண்ணுக்கும் தெரியாமல் நம் கண்ணுக்கு மட்டும் தெரிந்தால் எப்படியிருக்கும். இதுபற்றி நாம் சொன்னாலும் வீட்டில் இருக்கும் மற்றவர்கள் அதை நம்பாவிட்டால் நமது நிலைமை என்ன? நாம் கண்டது உண்மையா? அல்லது பிரமையா? நமக்கு பைத்தியம் பிடித்து விட்டதா என எண்ணி எண்ணித் திணறுவது பெரும் கொடுமை.

இத்தகைய நரக வேதனையை அனுபவித்த என் நண்பியின் கதை இது!

நண்பி மிக அழகானவள் . பாடசாலைக் கல்வியை நிறைவு செய்ததுமே தமது உறவினர் ஒருவருக்கு அவளைத் திருமணம் செய்து கொடுத்தார்கள்.

கொழும்பில் தொழில் செய்யும் கணவனோடு வாழப்போனவள் சுமார் 10 மாதங்களில் காய்ந்த கருவாடாகத் திரும்பி வந்தாள்.

அவள் அழகு குலைந்திருந்தது. கண்களில் கருவளையம், உடல் மெலிந்து ஆளே மாறிப் போயிருந்தாள்.

சில காலமாக அவள் மனநிலை பாதிக்கப்பட் டிருப்பதாகவும், அவளுக்குப் பேய் பிடித்திருப்பதாகவும் சொன்னார்கள்.

பூசாரிகள், மாந்திரீகர்கள், பூஜை புனஸ்காரங்கள் என அவள் வீட்டில் அடிக்கடி நடந்தன. ஒரு மாத காலத்தின் பின் அவள் பழைய நிலைக்கு வந்தாள்.

கணவனோடு வாழப்போன அவளுக்கு அங்கே என்ன நடந்தது? அவள் சொன்ன கதையை அப்படியே தருகிறேன்.

நண்பியின் பெயர் நளினி. நளினியும் அவள் கணவனும் கொழும்பின் புறநகர்ப் பகுதியில் ஒரு புது வீடுபார்த்துக் குடியேறினார்கள். இருவீட்டுப் பெற்றோர்களும் ஒரு வாரம் வரை அவர்களது வீட்டில் தங்கியிருந்து விட்டு அவரவர் வேலையைப் பார்க்க கிளம்பி விட்டார்கள்.

கணவன் வேலைக்குச் சென்றதும் நளினி மட்டும்தான் வீட்டில் தனித்திருக்க வேண்டும். சுற்றிலும் பெரும்பான்மையினத்தவர்களின் வீடுகள். அவளுக்கு சிங்களம் கதைக்கத் தெரியாது என்பதால் அயலவர்களுடன் ஒரு புன்னகையை மட்டுமே பரிமாறிக் கொள்வாள்.

ஒருவாரம் தனிமை கொடுமையாகக் கழிந்தது. கணவன் வேலைக்குச் சென்றதும் ஒருநாள் காலையில் சமைத்த பாத்திரங்களை கழுவி வைத்துவிட்டு கண்ணாடியின் முன் அமர்ந்து தலைவாரத் தொடங்கினாள். அப்போது கண்ணாடியில் வெள்ளையான ஒரு உருவம் நொடிப்பொழுதில் அவள் பின்னால் தோன்றி மறைந்தது.

அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. உண்மையாக ஒரு உருவம் தோன்றியதா அல்லது பிரமையா?

அப்போது முதல் இனந்தெரியாத பயம் அவளை ஆட்கொண்டது.

அன்று மாலை துணிகளைத் துவைத்து காயப்போடுவதற்காக வெளியில் சென்றாள். தன்னை யாரோ பின்தொடர்வது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தாள் யாரும் இல்லை. பின் வெற்றுவாளியுடன் வாசலை அடைந்த போது யாரோ அவளை இடித்துத் தள்ளிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்ததைப் போலிருந்தது. அவள் தடுமாறி கீழே விழப்போனாள்.

அன்று முதல் அந்த வீட்டில் அவள் சந்தித்த அமானுஷ்ய அனுபவங்கள் மிக அதிகம்.

அடிக்கடி அவள் கண்ணில் தட்டுப்பட ஆரம்பித்தது. இரவில் யாரோ ஒரு பெண் ஏங்கி ஏங்கி அழுவதைப் போல சத்தம் கேட்டது. தொடர்ந்து ஒலித்த முனகல்களும் அழுகையும் ஒலித்து அவளை உறங்க விடாமல் செய்தன.

இது பற்றி கணவனிடம் சொன்னாள். அவன் இந்த விடயத்தை நம்பிய போதும் '' யாராவது ஒரு வேலைக்காரியை அமர்த்தி விடுகிறேன். தனியாக இருந்தால்தான் உனக்கு பயமாக இருக்கும்'' என்றான்.

ஒரு புறம் வேலையாளைத் தேடும் பணி நடந்து கொண்டிருக்க மறுபுறம் நளினியின் மனநிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே இருந்தது. அந்த உருவம் அடிக்கடி அவள் முன் தோன்றி அச்சுறுத்தியது. அவள் ஏறத்தாழ பைத்தியம் பிடித்த நிலைக்கு சென்று விட்டாள்.

வேறு வழியில்லாமல் அவளை பிறந்த வீட்டுக்கு கொண்டு வந்தார்கள். ஒரு பூசாரியைக் கொண்டு வந்து பேயோட்டம் படலம் ஆரம்பமானது.

அவள் மாறி மாறி வெவ்வேறு குரல்களில் பேசினாள். அழுதாள்.

தான் அந்த வீட்டிலேயே வசித்ததாகவும் தன் கணவனால் தான் அடித்துக் கொலை செய்யப் பட்டதாகவும் தான் வாழாத அந்த வீட்டில் வேறு யாரையும் வாழ விடமாட்டேன் என்று பூசாரியிடம் சொல்லி அழுதாள்.

பின் ஏதேதோ பூஜைகள் நடத்தப்பட்டன.

பின் விசாரித்துப் பார்த்ததில் அவள் வசித்த வீட்டில் ஏற்கனவே ஒரு பெண் கொலை செய்யப்பட்டதாகவும் அதன் பின் இந்த வீட்டுக்கு வருபவர்கள் யாரும் ஒரு மாதம் கூட தங்குவதில்லை என்றும் தெரியவந்தது.

பூசாரியின் ஆலோசனைப்படி அவள் அந்த வீட்டை உடனடியாக காலி செய்தாள். இப்போது வேறு வீட்டில் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கிறாள்.

தகவல் தொகுப்பு (அபி)

## திகில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

பேய் இருப்பது உண்மையா? பொய்யா [illegible]

எமது முகவரி

உதயசூரியன் திகில் அனுபவங்கள்

இலக்கம் 68, [illegible]

கொழும்பு 15.

# கலாட்டா





விக்ரம் பிரபுவின் திருமணத்தின் போது





மகள் மார்களுடன் குஷ்பு





மகளுடன் விஜய்


மகளுடன் மீனா





## ஆல்பம்

எப்படி இருந்தவங்க இப்படி ஆயிட்டாங்களே என்று நாம் அடிக்கடி சொல்வதுண்டு. ஆம்! காலம் எப்படிப் போகிறது என்பதை பார்த்தால் வியப்பாகத்தான் இருக்கிறது.
நடிகை த்ரிஷாவின் ஆல்பம் இங்கே உங்களுக்காக!

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (68,எலிஹவுஸ் ரோட், கொழும்பு 15) 24.01.2013 வியாழன் 94, பராமானந்த மாவத்தை கொழும்பு-13 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.